1302

Regd. No. M. 2569

21 DEC 1937

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 8

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 12

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356, ரமலான்மீ 1937வூ டிசம்பர்மீ

1. அல்குர்ஆன் ... 305 2. அல்ஹதீது ... 307
3. பரிசுத்த ஹஜ்ஜு ... 309
4. முஸ்லிம் லீக் ... 311
5. மனம்போனபோக்கெல்லாம்போகவேண்டாம் 314
6. முஸ்லிம்களின் நிலைமை ... 317
7. 1937-வூத்திய அப்கானிஸ்தானம் ... 319
8. ஜிஸ்யா வரி ... 322
9. முஸ்லிம்களின் விழிப்பு ... 324
10. வந்தேமாதர கீதம் ... 325
11. முஸ்லிம்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் ... 328
12. ஹஜ்ரத் முஙைரதிப்னு ஷுஃபா (ரலி.) அவர்களின் தியாக வாழ்க்கை ... 332
13. முஸ்லிம்களின் தன்மைகள் ... 337
14. ஈதுல் பித்ர் ... 339
15. பித்று ஸதக்கா ... 341
16. செய்தித்திரட்டு ... 342

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,
"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,
43, போஸ்டாபீஸ் தெரு,
G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1937
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1356 ரமலான் மீ 1937வரு டிசம்பர் மீ	இதழ் 12

அல்குர்ஆன்

நீங்கள் (திருப்தியாய்) உண்ணுங்கள், பருகுங்கள். ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வீண்விரயஞ் செய்வோரை விசுவாசிப்பதில்லை. (திரு குர்ஆன்)

சோதரீர்!

செல்வம் நல்வழியில் செலவளிக்கப்படுவதற்காகத்தான் அருளாளனான இறைவனால் நமக்களிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அச்செல்வத்தை எவ்வாறு செலவு செய்வது? எவ்வழியில் செலவு செய்தல்கூடாது என்பனவற்றை முதலில் தெரிந்துகொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகும். தவிர, செல்வந்தர்கள் இதரர்களுடன் எவ்வாறு பழகி அன்னியோன்யமாயிருத்தல்வேண்டும்? எந்தெந்த துஷ்ட காரியங்களினின்று விலகியிருத்தல்வேண்டும்? என்பனவற்றையும் உணர்ந்து கொள்ளல்வேண்டும். இதைத்தான் உலக வாழ்க்கை, அனுபவஞானம் எனக் கூறப்படுகிறது. இஃது நற்குண நல்லொழுக்க முறைகளிற் சிறந்தவனவாகும்.

மேலே கூறப்பட்டுள்ள திருவாக்கியத்தால், அனாவசியமாய் திரவியத்தை விரயமாக்கி நஷ்டமடைந்து மனக்கவலைகொண்டு பணக் கஷ்டமடைந்து மூலையில் உட்கார்ந்து பிறர் கைகளை எதிர்பார்த்திருப்பது மிக மிக கெட்ட காரியமாகும் என்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம்.

மக்கள் எவ்விஷயத்திலும் சிக்கனத்தையே கைகொள்ளல்வேண்டும். சிக்கனமெனப்படுவது வருவாயைவிட அதிகமாய்ச் செலவு செய்து விடாதிருப்பதும், வரும்படியை அபிவிருத்தி செய்துகொண்டு, செலவை ஓரளவு சுருக்கிக் கொள்வதுமாகும். எனவே, ஒவ்வொருவரும் தமக்குரிய சொத்து சுதந்திரங்களையும், வருமானங்களையும் அபிவிருத்தி செய்து கொள்வதில் கவலையும் சிரத்தையும் எடுத்துக்கொள்வது பிற்கால சாதனமாகும். அறியாமையினால் வீண் விரயஞ்செய்வதும், ஆடம்பரம், பெயர் பகட்டு, பெருமை ஆகியவற்றிற்காக வீண் டாம்பீகச் செலவு செய்வதும் பிற்காலத்தில் தனக்குத்தானே கேட்டை

விளைவித்துக் கொள்வதாகும். எப்போதும் தனக்கு சௌகரியத்தையும் கவலையின்மையை யும் அளிக்கும் வரவு செலவு முறைமையையே ஒவ்வொருவரும் கைகொள்ளல்வேண்டும்.

பக்ஷிக்கு பறக்கும் சக்தி யிருந்தபோதிலும் அது தனது அந்தஸ்த்தை கவனியாது வானத்தைப்போய் தொட்டுவிட வேண்டுமென் னும் கெர்வங்கொண்டு, நீண்ட தூரம் உயரப் பறந்து விடுமாயின் பின்னர் அது திரும்பி இறங்கிவரச் சக்தியற்றுப்போய் குப்புற விழுந்து பூமியில் மோதி மாண்டுவிடுமென்பது யாவருமறிந்த விஷயம். இவ்வாறேதான், சோத்து செல்வம் படைத்தோர் தமக்குத்தான் ஏராளமான சொத்து இருக்கிறதே, அபரிமித மாய் செலவிடுவோமென்று கருதி வீண் விரயத் தைக் கைக்கொள்வார்களாயின் கூடிய சீக்கிரத் தில் தங்கள் திராள பூஸ்திதிகளையும் இழந்து உண்ண உணவன்றியும், உடுக்க உடையின்றி யும், நிற்கநிழலின்றியும் வருமையாளராகி பரித பிக்க நேரிடுமென்பது வெளிப்படை. இஃதன்றி ஒருவன் ஆடம்பரமான செலவு செய்தும், ஆர் பாட்ட நடத்தை நடந்தும் வருகிறான் என் பதைத் தெரிந்து அவனுடன் போட்டி போட்டுக்கொண்டு நாம் விரயச் சேஷ்டையில் இறங்கி விடுவோமாயின், குறுகிய ஒற்றையடிப் பாலத்தில் இரு மூர்க்கர்களும் சமமாய் நின்று போட்டிப் போட்டுக்கொண்டோடி இருவரும் இடிபட்டு வெள்ளத்தில் வீழ்ந்து மாளும் உவமைப் போல் சீர்கெட்டு மாய்வோம்.

இவ்வாறே, இக்கால அறிவும் விவேகமுமில் லாத எத்தனையோ பணக்காரர்கள் போதிய வரும்படி யில்லாமல் வீணடம்பரங்கள் புரிந்து கொண்டோ, தட்டுமுட்டுச்சாமான்களை அளவுக் கதிகமாய் வாங்கி நிறப்பிக்கொண்டோ, உடை, நகை முதலிய சிங்காரங்களுக்கு அபரிமித செலவு புரிந்துகொண்டோ, விபசார சேஷ்டை யில் ஈடுபட்டுக் கொண்டோ, தீய நடத்தை யுடைய தோழர்களுடன் சேர்ந்து கெட்டலைந்து கொண்டோ, பெருமை ஆடம்பரங்களில் பிற ருடன் போட்டிபோட்டு பணத்தை பல துறை யிலும் அள்ளி இறைத்துக்கொண்டோ, கலி யாணம் முதலிய சுப விசேஷ காலங்களில் மற்றவர் புரியும் ஆடம்பரத்தைப்போல் தாமும் புரிய வேண்டுமென்ற எண்ணங்கொண்டு திரவியத்தை பாழ்படுத்தி ஆகா கருமங்களை புரிந்துகொண்டோ, சீர்கெட்டு நாளுக்குநாள் க்ஷீண திசை யடைந்துழல்வதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். இஃதொரு பக்கலிருக்க, ஒரு சில செல்வந்தரெனப்படுவோர், அவசியமற்ற காரியங்கட்கும், தம் சமூகத்துக்கோ, மதக் கல் விக்கோ, மார்க்கத்திற்கோ, ஏழை மக்களுக்கோ, ஒரு சிறிதும் பயனில்லாத வழிகளில் பணத் தைப் பாழ்படுத்தி வீணடம்பரங்கள் செய்து கவரவ பெருமைவாழ்க்கை பூணுகின்றன ரென்பது உலகறிந்த விஷயம். இஃதெல்லாம் நம் சமூகத்துக்கோ, மதத்திற்கோ, ஆன்மார்த் தத்துக்கோ, பரலோக வாழ்க்கைக்கோ, நன்மை களை அளிக்காதென்பது முக்காலுந்திண்ணம்.

நம்மவர்களின் வீழ்ச்சிக்கும் க்ஷீணகதிக்கும் ஈண்டு கூறப்பட்டதுபோன்ற வீணடம்பரச் செலவுகளும், துர்நடத்தைகளும், தீய எண் ணங்களுமே காரணமாகும். நம் இஸ்லாம் மதம் நமக்கு போதித்தமிதச்செலவு, சிக்கனம், தான தருமம், நேர்மையான வாழ்வு ஆகிய வற்றினை இதர சமூகத்தினர் பின்பற்றி முன் னேற்றத்திற்கு வருகின்றனர். ஆனால் நாமோ நம் சன்மார்க்க நற்போதனைகளைப் புறகணித்து ஏழ்மையிலும் க்ஷீணத்திலும், இழிவிலும் கிடந்துழல்கின்றோம். நம் சத்திய சன்மார்க்க போதனைகளையும் சமூக சீர்திருத்த உபாயங் களையும், மிதச் செலவுகளையும், சிக்கன வாழ் வையும், பொருளாதார நலன்களையும், சம்பாத் திய அபிவிர்த்தியையும், உதார குணங்களையும், நற்குண நல்லொழுக்கங்களையும் பற்றிப்பிடித்து ஆண்டவன்மீது பூர்ண நம்பிக்கைவைத்து நடந்து வந்தால்தான் நாம் முன்னேற்றமும், பரிபக்குவமும், நன்மையும் அடைந்துய்ய இயலும்.

வீண் ஆடம்பரங்களைப் புரிவதிலீடுபட்டு தம் செல்வங்களில் ஆயிரக் கணக்கானவற்றை பாழ்படுத்தும் விவேகமில்லாத தனவந்தர்கள், அவ்விரயங்களைச் சுருக்கி சில ஆயிர ரூபாய் களை கல்வி அபிவிருத்திக்கோ, அனாதைச் சாலைக்கோ, பொது சேவை புரியும் பொது ஸ்தாபனங்களுக்கோ, இஸ்லாம் பிரசார சபைகளுக்கோ அளித்தால் நமது சமூக மும், மதமும் முன்னுக்கு வருமென்பதில் எவ்வித சந்தேகமுங்கிடையா. இவ்வித அரிய தருமத்தால் இத்தரணியில் கீர்த்தியும், கண் ணியமும் கிடைப்பதோடு பரலோகத்திலும் அல்லாஹ்வின் தனிப்பட்ட அருளும், நற் பாக்கியங்களும், சுகானந்தமும் கிடைக்கு மென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நமது எதிர் மதவாதிகளான ஹிந்துக்களையும் கிறிஸ்துவர்களையும் மற்றோரையும் சிறிது கூர்ந்து கவனித்துப் பார்ப்போமாகில், அவர்களில் பணக்காரர்களாயிருப்போர் வீண் செலவுகளைச் சுருக்கி அந்நிதியை சமூக முன்னேற்றத்திற்குரிய பொது நல காரியங்களுக்கு தான தருமஞ்செய்துவிடுகின்றனர். நாம் மேற்கொண்டு பின்பற்றி நடக்கவேண்டிய சீரிய முறைகளை அந்தோ! அன்னோர் கைகொண்டு இவ்வுலகில் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கின்றனர். நாமோ திருகுர்ஆன் ஷரீபினது திவ்விய கட்டளைகளை மறந்து இக பரமிரண்டிலும் நஷ்டவாளர்களாயிருக்கின்றோம். ஆகவே, அல்லாஹ் தஆலா நமக்கு அளித்திருக்கும் திரவியங்களை வீண்விரயத்திலீடுபடுத்தாது உத்தம காரியங்களில் செலவு செய்ய, நம்மனோருக்கு நல்லருள்புரிவானாக, ஆமீன்!

அல்ஹதீது

"எவன் அல்லாஹ்வின்மீதும், மறுமை நாளின் மீதும் ஈமான்—உறுதி கொண்டவனாயிருக்கின்றானோ அவன் தம்மிடம் வரும் விருந்தாளிக்கு உபசரணை புரிவான்".

உத்தமத்தூதர் சத்தியத் திரு நபீ அவர்கள் ஹஜ்ரத் அபூ அய்யூப் அன்சாரீ (ரலி.) அவர்கள் இல்லத்தில் சொற்பெருக்காற்றுங்கால், விருந்தாளிகளை உபசரிப்பதினாலேற்படும் நற்பயன்களைக் கூறிவருவதினிடையே மேற்கண்டவாறு அறிவித்ததாக ஹஜ்ரத் ஜாபிர் (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஹஜ்ரத் இமாம் சாலிஹ் ஜஸாயிரி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், விருந்தாளிகளை உபசரிப்பது பிரதான கடமையாகுமென்றும், உபசாரம் புரிவதென்பது, அந்த விருந்தாளி சௌகரியமாயிருப்பதை விரும்புவதும், அவன் கஷ்ட சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்வானாகில் அவனுக்கு உதவி புரிவதும், அவன் வியாதியால் பீடிக்கப்பட்டு விடுவானாகில் அதற்குப் பரிகாரம் செய்வதுமாகும் என்று கூறினார்கள். "விருந்தாளிக்கு உபசாரஞ்செய்வதால் உங்கள் ரிஜ்கில் யாதொன்றும் குறைந்து போகாது; அவனுக்கு உபசாரம் புரிவதால் நீங்கள் அல்லாஹ்வின் கிருபைக்கு பாத்தியஸ்தராகி விடுகின்றீர்கள்; இது உங்களது ரஸூல் அவர்களின் நடத்தையுமாகுமென்பதை கவனத்தில் வையுங்கள்'' என்றும் கூறியுள்ளார்கள்.

"ஏழைகளுக்கு உதவி ஒத்தாசை புரிவதில் முயற்சிப்பவன் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்பவனைப் போலிருக்கிறான்.''

ஒரு நாளன்று நபி பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள், ஏழைகளின் மனதை திருப்தி செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி சொற் பெருக்காற்றுங்காலை மேலே கூறப்பட்டவாறு அறிவித்ததாக ஹஜ்ரத் அலீ, (ரலி.) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஜ்ரத் அல்லாமா சாலிஹ் ஜஸாயிரி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மானிடர் புரியும் நல்ல அமல்களிலெல்லாம் ஏழைகள்பால் அனுதாபம் காட்டுவதுதான் பிரதானமாகுமென்றும், அறிவு படைத்த ஒவ்வொருவரும் ஏழைகளை தம் சோதிரர்கள் போல் பாவிக்கவேண்டியது பிரதானக் கடமை என்றும் கூறியிருக்கிறார்கள்.

"பெரியார்கட்கு தொண்டு புரிவதுகொண்டு பாவங்கள் மன்னிக்கப் பட்டுப்போகின்றது.''

ஒரு மனிதர் நம் சத்தியத்தூதர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் சமூகம் வந்து அல்லாஹ்வுடைய ரஸூலே! மகத்தான பெரியதோர் பாவம் என்னில் நின்றும் நிகழ்ந்து விட்டன; ஆதலின் அது மன்னிக்கப்படுவதற்கு ஏதாவது வழியிருக்கின்றதா? எனக் கேட்டார். அதற்கு சத்தியத்தூதர் (ஸல்) அவர்கள் உமது அன்னை உயிருடனிருக்கின்றாளா வென வினவியதற்கு, இல்லையென அவர் பதில்கூறவே, உம் மாதாவின் சகோதரியான (காலா) இருக்

கின்றாளாவென வினவினார்கள். அதற்கு அம்மனிதர் ஆம் என்று பதில் கூறவே, அவளுக்கு தொண்டு புரியும் யென கட்டளை பிறப்பித்தார்கள். தவறுதல் ஏற்படுவது மானிடர்களின் இயற்கையிலேயுள்ள ஒரு விஷயமாகும். அதற்கேற்ப அல்லாஹ் தஆலாவின் உண்மை அடியார்களினின்று ஒருக்கால் ஏதாகிலும் தவறுகள் ஏற்பட்டுவிடுமாயின் அன்னோர் உறுகிய மனத்தினராய் அல்லாஹ்வின் திரு சமுகத்தில் பாவமன்னிப்புத் தேடுவதுடன் தங்கள் பெரியார்கட்குத் தொண்டு புரிவதிலும், ஏழை சிநேகிதர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்துவைப்பதிலும் அதிக பிரயாசை எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

"எவன் தன் கையினால் சம்பாத்தியஞ் செய்து சாப்பிடுகிறானோ அவன் மறுமை நாளில் சாலிஹ்-உண்மைஅடியார் களுடனிருப்பான்."

ஒரு நாளன்று நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், மானிடன் சம்பாத்தியஞ்செய்து சாப்பிட வேண்டுமென்னும் விஷயத்தின் மேன்மைகளை எடுத்துக் கூறுங்கால், மேற் கண்டவாறு அறிவித்ததாக ஹஜ்ரத் அப்துல்லாஹ்பின்மஸ்ஊத் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், துர்மார்க்க வழியைத் தவிர்ந்து சன்மார்க்க பாட்டையில் பிரயாசையுடன் ஈடுபட்டு சம்பாத்தியஞ்செய்து ஜீவனஞ்செய்ய முற்படுவது மேலான வணக்கமாகுமெனவும், எவன் பிரயாசையோடு சம்பாத்தியத்தி லீடுபட்டு, எவருடைய கடமை தம்மீதிருக்கிறதோ அதனை நிறைவேற்றிக்கொண்டு சன்மார்க்க சம்பாத்தியத்தினால் தன் வயிறை நிறப்பிக்கொண்டிருக்கிறானோ அவன் உண்மை மூமினாகக்கருதப் படுவான் என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

"எவன் தன்கையினால் சம்பாத்தியஞ் செய்யப்பட்டதைக்கோண்டு காலக்ஷேபம் செய்கிறானோ அவன் அல்லாஹ்வின் பாதையில் முயற்சிப்பவன்போலிருக்கிறான். எவன் தன் கையினால் சம்பாத்தியஞ் செய்வதிலீடுபடுகிறானோ அவன் இதரர்களிடம் கேட்கமாட்டான். யான் அவனை சுவனபதியிற் கோண்டுசேல்ல பிணை ஏற்றுக்கோள்கிறேன்" என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் ஜைதிப்னு ஹாரிது (ரலி.) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், தன் சுயப்பிரயாசையைக்கொண்டு சம்பாதித்து சாப்பிடவேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள முக்கியக் கடமையென்றும், எவன் தன் சுயப்பிரயாசையைக்கொண்டு சம்பாதித்து சாப்பிடுகிறானோ அவன் அல்லாஹ்வின் பாதையில் முயற்சிப்பவனென்றும் கூறியிருக்கிறார்கள்.

"அல்லாஹ்வின்மீது உறுதிகோள்வது, முஸ்லிம்களுக்குப் பிரயோசனமளிப்பது இவ்விரு காரியங்களைவிட மேலானது என்னிடமில்லை" யென, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஹஜ்ரத் ஷேக் அப்துல் அஜீஜ் ஜஸாயிரி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால் அல்லாஹ்வின்மீது உறுதி கொள்வதென்பது, அவனது தூய்மையையும் அவன் ஏக சக்ரவர்த்தியாக யிருப்பதையும் மனதில் உறுதி கொண்டு ஒவ்வொரு விஷயத்திலும் அவனுடைய பொருத்தத்தையே தேடவேண்டுமென்பதாகுமென்றும், முஸ்லிம்களுக்குப் பிரயோசன மளிப்பதென்பது சீமானுயுள்ளோர் ஏழைகளுக்கு உபகாரம் புரியவேண்டும்; கல்விமான்கள் கல்வியில்லாதாருக்கு அதனைக் கற்பித்துக் கொடுக்கவேண்டும்; சக்தியுள்ளவர்கள் சக்தியற்றோருக்கு உபகாரஞ் செய்யவேண்டும் என்பதாகுமென்றும்,முஸ்லிம்களிடம்இவ்வரும் செய்கைகள் மிளிர்ந்து காணப்பட்டு வந்த காலமெல்லாம் அன்றோர் சிறந்து விளங்கினார்களென்றும், ஆனால் இச்செய்கை அன்னோரை விட்டு நீங்கியபின் உலகில் தாழ்மையாக மதிக்கப்படுகிறார்களென்றும் கூறியிருக்கின்றார்கள். தனக்குப் பிரியமானவற்றையே தன் முஸ்லிம் சோதிரர்கட்கும் பிரியமான மாதக் கருதவேண்டும். எந்த முஸ்லிம் தன் சோதிரனுக்குச் செய்யவேண்டிய கடமைகளை எக்காலும் தன் இறுதயத்திலிறுத்தி அவைகளை நிறைவேற்ற ஆயத்தமாகின்றானோ அவனுக்கு அல்லாஹ்வின் கிருபை கிடைக்கும்.



பரிசுத்த ஹஜ்ஜு

முஸ்லிம் சோதரீர்! ஹஜ்ஜு இஸ்லாம் என்னும் கட்டடத்தின் ஓர் பிரதான தூணுகும். அதனை சக்தி பெற்ற ஒவ்வொருவரும் வயதிலொரு முறை நிறைவேற்ற வேண்டியது கடமையாகும். ஹஜ்ஜை நிறைவேற்றுவதை விட்டு பிற்கால் வெட்டியிருப்பவர்களை அல்லாஹ் தஆலா வெறுப்பதாகக் கூறியுள்ளான். நமது நபிகள் திலகம் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களும், ஹஜ்ஜை நிறைவேற்ருதிருப்போர் யூதராகவோ, கிறிஸ்துவராகவோ மரிப்பரென அறிவித்துள்ளார்கள். முஸ்லிம்காள்! அல்லாஹ் தஆலா உங்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்திருப்பானுகில் நீங்கள் உங்கள் வாணுளிலொரு முறை ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி, ரஸுல் திலகம் (ஸல்.) அவர்களது ரௌலாஷரீபை தெரிசிப்பதில் செலவிடுவதைப் பார்க்கினும் உகப்பான செலவுவேறுயாதொன்றும் கிடையாது. நீங்கள் சீதேவித்தனமுடையவர்களாய்த் திகழ்வதற்கு இவைகளைவிட வேறு எந்த பாக்கியமுங்கிடையாது. அடியான் தக்கமுறையில் ஹஜ்ஜை நிறைவேற்றியவுடன் அவன்து பாவங்களெல்லாம் அழிக்கப்பட்டுப்போகிறது. அவன் பாவமற்ற குழந்தையைப்போல் தூய்மை பொருந்தியவனுய் விடுகிறுன். இதனுல்தான், "அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜை நிறைவேற்றி பாவங்கள் புரியாதிருந்து திரும்புவோர், தன் மாதாவின் வயிற்றில் அன்று பிறந்த பாலகனைப்போல் திரும்புகிறுர்" என, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இஸ்லாம் உற்பத்தியான அப்புண்ணிய பூமியை—ஏன் அதன் ஜோதியினை உலகில் பிரகாசிக்கச் செய்த சத்தியத்தூதர் உத்தமக்கோன் (ஸல்.) அவர்கள் ஜனனம் புரிந்து வாசஞ்செய்த பூமியை ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை.) "வஹீ" கொண்டு வந்த பூமியை, அல்லாஹ்வின் திருவேதமென்னும் ஒளி இறங்கிய பூமியை, எந்த இடத்தில் ஒரு தொழுகையை நிறைவேற்றுவது கொண்டு லக்ஷணத் தொழுகையின் புண்ணியம் கிடைக்கக்கூடிய வீடுஇருக்கிறதோ அந்த பூமியை, ஒரு ரூபாய் செலவு செய்வது கொண்டு லக்ஷரூபாய் செலவு செய்ததின் புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளும் பூமியை, ஒவ்வொரு பிரார்த்தனையும் ஒப்புக்கொள்ளப்படும் பூமியை தரிசிக்காத கண்ணும் கண்ணுகுமோ? அத்தலத்தை தரிசிக்காத எவரும் நிம்மதியாயிருக்க முடியுமோ, இத்தகைய சீரிய சிறப்பும், கீர்த்தியும், மேன்மையும் தங்கிய புண்ணிய ஸ்தலத்தை தரிசிக்கும் கடமையை நிறைவேற்றுவதற்குள்ள காலம் சமீபித்துவிட்டது.

இத்தனை மாட்சிமை பொருந்திய ஹஜ்ஜுக் கடமையை நம்மக்கள் பெருந்திரளாகச் சென்று நிறைவேற்ருதிருப்பதன் காரணம் இன்னதென்று நமக்குப் புலனுகவில்லை. இதற்கு, அன்னேருக்கேற்பட்டுள்ள உலகப்பற்று காரணமாகயிருக்கலாமோ? மக்களுக்கு தெய்வப் பற்றுக் குறையக் குறைய உலகப் பற்று அதிகரிக்கிறபடியால் ஹஜ்ஜை

நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் இந்தியாவில்—ஏன்? நம் தென்னிந்தியாவில் ஆயிரக்கணக்கிலிருந்தும் அக்கடமைகளை உடனே நிறைவேற்ற முயற்சியாது தாமதப்படுத்திக்கொண்டு போவது வருந்தத்தக்க விஷயமேயாகும். உண்மையான ஓர் முஸ்லிம் எத்தனை ஏழையாயினும் அவர் ஹஜ்ஜை நிறைவேற்றும் ஓர் பாக்கியத்தை எதிர்பார்த்து நிற்கும் நிலைமையில், பணக்காரராயுள்ளோர் தமக்கு இச் செல்வத்தை அளித்த அல்லாஹ் தஆலா தம்மீது இட்ட கட்டளையை நிறைவேற்ற முன்வராது பின்னே ஒழிந்துகொண்டிருப்பதின் இரகசியந்தான் இன்னதென்று புலனாகிறதில்லை. தங்கள் சொத்து சுதந்திரங்களையும் மனைவி மக்களையும் சில மாதங்களுக்காக விட்டுப் பிரிந்திருப்பதற்கு அன்னோரின் மனம் துணியாதிருப்பதே இதற்குக் காரணமென்று கூறலாம்.

அன்பர்காள்! உங்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து உதவி புரிந்த அல்லாஹ் தஆலா நாடுவானாகில் சனப்பொழுதில் அவை அடங்கலும் உங்களைவிட்டு நீங்கிவிடுவதற்கான சக்தி பெற்றிருக்கிறான். வானம் பூமி இவைகளினாலேற்படும் அபாயங்களையும், பொருள் நஷ்டம், உயிர் நஷ்டம் இவைகளால் ஏற்படும் கெடுதிகளையும் கண்டு உணர்ச்சி பெறுவது புத்திசாலிகளின் வேலையாகும். நமக்களித்திருக்கும் இந்த சீமான்தனத்தை ஏழைத்தனமாகவும், சுகவாழ்க்கையை கஷ்டஜீவ முடையதாகவும், சாவதானத்தை அசௌகரியமாகவும், வாலிபத்தை விர்த்தாபியமாகவும், உயிர் வாழ்க்கையை மரணமுடையதாகவும் செய்து விடுவது அல்லாஹ் தஆலாவுக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஆகவே, 'காற்றுள்ளபோதே தூற்றுக்கொள்ள வேண்டும்' என்னும் பழமொழிக்கேற்ப, அல்லாஹ் தஆலா நமக்களித்துள்ள ஐசுவரியங்கள் நம் கைவசமிருக்கும்போதே, நாம் சுகஜீவியாய் உயிர் வாழும்போதே, நமக்கு சாவகாச மிருக்கும்போதே, நம்மை மரணம் அணுகுமுன்பே நாம் நம் மீது விதிக்கப்பட்டுள்ள கடமையை அதி சீக்கிரம் நிறைவேற்ற முன்வருவோமாக.

நண்பர்காள்! உலகின் இச்சொத்து சுதந்திரங்களெல்லாம் உலகின் அழகிற்காக இருக்கின்றன. ஆனால், சாலிஹான நல் அமல்கள்தான் மக்களுக்குப் பிரயோசனமளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, அந்த ஐசுவரியங்களை அல்லாஹ்வின் பாதையிற் செலவிட்டு பரத்தின் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வது நம்மீது கடமையாகும்.

சீமான்காள்! ஹஜ்ஜை நிறைவேற்ற முற்படுவதுகொண்டு 'ஹிஜ்ரத்' ஜிஹாத், இவ்விரண்டுக்குமுள்ள புண்ணியங்கள் கிடைக்கின்றன. ஹஜ்ஜை நாடிச் செல்வோர், தனக்குப் பிரியமான ஊர், பெண்சாதி, பிள்ளை, தாய்தந்தையர்களை விட்டு தனக்கு உகப்பான ஐசுவரியங்களை அல்லாஹ்வின் பாதையிற் செலவிட்டுக்கொண்டு செல்கின்றனர். இந்நிலைமையில் பிரயாணத்தினாலேற்படும் கஷ்டத்தையும் அவர் சமாளித்துக்கொள்கிறார். துர் அதிர்ஷ்டவசமாக நம் முஸ்லிம்களின் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கல்யாணம் முதலிய சடங்குகளை நிறைவேற்றுவதில் செலவிடப்படுகின்றன. ஆனால் அல்லாஹ்வின் பாதையிற் செலவிட முற்படும்போது வறுமையின் எண்ணம் நம்மை வாட்டுகின்றன.

ஆகவே, மகத்தானதும், மாபெரும் நற்பலன்களை நல்கக்கூடியதும், இஸ்லாம் கொடியை இவ்வுலகில் உயர்த்தக்கூடியதுமாகிய ஹஜ்ஜு வணக்கத்தின் பெருமையை நம்மவர் இனிதறிந்து அக்கடமையை இனிதாற்ற எல்லாம் வல்ல இறைவன் கிருபை புரிவானாக.

முஸ்லிம் லீக்

தனது மதம், கலை, பாஷை, ஆசாரம் முதலியவைகளைக் காத்துக்கொள்ள முயற்சி செய்யாத எந்த சமூகமும் நீண்ட காலத்திற்கு இருக்கப் போவதில்லை. இதனால்தான் உலகிலுள்ள எல்லா தேசத்தினரும், ஜாதியினரும் தங்களுக்கென பிரத்தியேகமான ஸ்தாபனங்களை ஏற்படுத்தித் தங்கள் சமூகத்தைப் பொறுத்த விஷயங்களைக் கவனிக்க அந்த ஸ்தாபனத்திற்கு அதிகாரத்தையும் ஆக்கத்தையும் அளித்து வருகின்றனர். இவ்வித ஸ்தாபனங்கள் தேசத்திற்கும், ஜாதியினருக்கும் மட்டுமில்லாமல், வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்று பற்பல தொழில் முறையி லீடுபட்டவர்களுக்கு மிருந்து வருகிறது. இவர்கள் தங்களுக்கேற்பட்டுள்ள குறைகளைப்பற்றி நன்கு விவாதித்துச் செய்யும் முடிவை அரசாங்கத்திற்கு அறிவித்துக்கொள்கின்றனர். அரசாங்கத்தினர் அக்குறைகளுக்குத் தக்க பரிகாரங்களைச் செய்கின்றனர். இது மட்டுமில்லாமல் சட்ட சபைகள், முனிசிபாலிட்டிகள் முதலிய சபைகளிலும் கூட வர்த்தகர்கள், தொழிலாளர்கள் முதலியவர்களுக்குத் தக்க பிரதிநிதித்துவத்தை அளித்து, தங்களது குறைகளைப்பற்றி சர்க்காரிடம் நன்கு வாதாடச் சந்தர்ப்பமும் அளித்துள்ளனர். ஆகவே, உலகில் சாதாரணமாக நடைபெற்று வருகிற இவ்வழக்கத்திற்கேற்ப இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு அவர்களது மதம், கலை, நாகரீகம், வர்த்தகம், தொழில், முதலியவைகளைப் பாதுகாப்பதற்குத்தக்க ஸ்தாபனம் ஒன்று பிரத்தியேகமாக இருந்து வரவேண்டியது அவசியமாகும். இந்தியாவில் எந்த கக்ஷியினர் ஆதிக்கம் செலுத்தினாலும் முஸ்லிம்களது உரிமைகளுக்காகப் போராட அவர்களுக்கென ஒரு தனி ஸ்தாபனம் இருந்து வரவேண்டியது முற்றிலும் அவசியமேயாகும்.

இவ்வவசியத்தையும் நியாயத்தையும் உத்தேசித்து இந்தியாவிலுள்ள பிரபல முஸ்லிம் தலைவர்கள் சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னர் டாக்காவில் கூடி கலந்தாலோசனை செய்து ஒரு ஸ்தாபனத்தை நிறுவினர். அந்த ஸ்தாபனத்திற்கு "முஸ்லிம்லீக்" என்று பெயர். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தில் முஸ்லிம் சமூகம் அடையவேண்டிய நியாயமான பாத்தியதைக்கும் உரிமைகளுக்கும் இந்த ஸ்தாபனம் அன்று முதல் போராடி வந்திருக்கிறது. முஸ்லிம் லீக் முஸ்லிம்களது உரிமைகளுக்காக மட்டிலும் போராடாமல் இந்தியாவிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினர் எல்லோருக்காகவும் நியாயமான முறையில் போராடிக்கொண்டிருப்பதால் இந்த ஸ்தாபனத்திற்கு "சிறுபான்மையோர் பாதுகாப்பு ஸ்தாபனம்" என்று கூறுவதும் பொருந்தும். முஸ்லிம்லீக் ஏற்பட்ட பிறகுதான் சர்க்கார் உத்தியோகப்பதவிகளில் முஸ்லிம்களுக்கு இத்தனை பதவி என்றும், இதர சமூகத்தினருக்கு இத்தனை பதவி என்றும் விகிதாசாரம் ஏற்பட்டது. சட்டசபைகளில் முஸ்லிம்கள் முதலிய சிறு பான்மையினருக்கு இத்தனை ஸ்தானங்கள் என்று தனிப் பிரதிநிதித்துவமும், தனித்தேர்தல் முறையும் ஏற்பட்டது. முஸ்லிம்களது கல்வி விஷயத்தில் அரசாங்கம் சிரத்தைகாட்டி முஸ்லிம் ஸ்கூல்களை ஏற்படுத்திற்று. சுருங்கக் கூறுமிடத்து, முஸ்லிம் லீக் ஏற்படாவிடில் இந்தியாவில் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், ஆதிதிராவிடர் என்ற சிறுபான்மை வகுப்பினரின் பிரசினையே தோன்றி இருக்கமாட்டாது. அரசாங்க உத்தியோகம் முதல் சகல காரியங்களிலும் சிறுபான்மையினர் முற்றிலும் ஒதுக்கப்பட்டு மிருப்பர்; பெரும்பான்மையினரான ஹிந்துக்கள் சகல துறைகளிலும் பூரண ஆதிக்கம் வகித்து வருவர். எனவே, இந்தியாவிலுள்ள பெரும்பான்மை சமூகத்தினர் அரசாங்க உத்தியோகப் பதவி முதல் சகல விஷயங்களிலும் பிறர் உரிமைகளை அபகரித்து ஏகபோக பாத்தியமாக அனுபவித்து வந்ததைத் தடைசெய்து முஸ்லிம்கள் முதலிய சிறுபான்மையினருக்கு நியாயமாக ஏற்பட்டுள்ள பாத்தியதையை அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தார் மூல

மாக அவைகளை அடைந்து வருவதால் முஸ் லிம் லீக் ஏற்பட்ட காலம் முதல் அதனை ஒழித்து விடுவதற்கான சகல முயற்சிகளையும் ஹிந்துக்கள் செய்துகொண்டே இருக்கின்றனர். காங்கிரஸ் தன்னை தேசிய சபை என்று சொல் லிக்கொண்டாலும் கிரியாம்சையில் சிறு பான்மையினரின் உரிமைகளை அது பாதுகாக் கத் தவறிவிட்டதால்தான் முஸ்லிம் லீக் ஸ்தா பனத்தை முஸ்லிம்கள் ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. காங்கிரஸ் அக்காலத் தில் வகுப்புணர்ச்சியைக் காட்டவில்லை என்று ருஜூபிக்க ஹிந்துக்களால் முடியாது. முஸ்லிம் லீக் ஏற்பட்ட பிறகு சிறுபான்மையினர் அடைந்த உரிமைகளைப்பற்றி காங்கிரஸ் அதற்கு முன்னர் முயற்சி எடுத்துக் கொள் ளவே இல்லை. அதற்கு நேர்மாறாக முஸ்லிம் லீக் கேட்கும் கோரிக்கைகளைச் சிற்சில சமயங் களில் காங்கிரஸ் ஆக்ஷேபித்தும் வந்திருக் கிறது. மேலும் காங்கிரஸ் தேசத்தின் பொது நோக்கங்கொண்டு செய்யுங் காரியங்களை எல் லாம் முஸ்லிம் லீக் ஆதரித்தே அன்று முதல் இன்றுவரை நடந்து கொண்டிருக்கிறது. ஒத் துழையாமை இயக்கம் நடைபெற்ற காலத் திலும் அதற்குப் பிறகு சில வருஷங்கள் வரை யிலும் காங்கிரஸ் மகாநாடு நடைபெறும் காலத் தில், காங்கிரஸ் மகாநாடு நடைபெறும் இடத் தில், காங்கிரஸ் மகாநாட்டுப் பந்தலுக்குச் சமீ பத்தில் முஸ்லிம் லீக் மகாநாடுகள் நடை பெற்று வந்தன. முஸ்லிம் லீக் மகாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகளிற் பலர் காங்கிரஸ் மகாநாட் டின் பிரதிநிதிகளாகவும்கூட இருந்தனர். காங் கிரஸிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் லீகிலும் முக்கிய பதவிகளை வகித்து வந்தனர். தேசத்தின் பொது நன்மை சம்மந்தமாக காங் கிரஸூம், லீகும் ஒரேவித தீர்மானத்தையே செய்து வந்தன.

இவ்வளவு தூரம் ஒத்துழைத்து வந்த முஸ் லிம் லீகை கல்கத்தா காங்கிரஸ் மகாநாடு பிரித்து ஒதுக்கிவிட்டது. பண்டித மோதிலால் நேருவைத் தலைமையாகக் கொண்ட கமிட்டி யினர் சமர்ப்பித்த சுயராஜ்யத்திட்டம் (நேரு ரிபோர்ட்) சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா சபையின் சுயேச்சைத் தீர்மானத்திற்கும் குறைந்த பக்ஷமான உரிமையையே வற்புறுத் துவதால்அதனை காங்கிரஸ் அங்கிகரிக்கக்கூடாது என்பதாக முஸ்லிம்கள் கூறியும், காங்கிரஸ் மகா நாடு அத்திட்டத்தை அங்கீகரித்துக் கொண்ட திலிருந்து காங்கிரஸிற்கும் முஸ்லிம் லீகிற்கும் இருந்து வந்த நேசமும் உறவும் குறைந்து விட்டன. எல்லா மதத்தவருக்கும், சமூகத் தவ ருக்கும் சம உரிமை அளிக்கும் பொது அரசாங் கத்தை நிறுவவேண்டும் என்ற நோக்கமில்லா மல் வர்ணாசிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ராமராஜ்யத்தை காங்கிரஸ் ஸ்தாபிக்க முயலுவதால் காங்கிரஸ் செய்த சட்டமறுப்பு இயக்கங்களில் முஸ்லிம்லீக் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. பின்னர் வட்ட மேஜை மகா நாடு நடைபெற்றது. அம் மகா நாட்டிலேனும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு இந்தியாவின் பொது நன்மைக்காக எல்லா மதத்தவரும் ஒன்றுசேர் ந்து முயற்சி எடுக்கலாம் என்று முயன்றதில் காங்கிரஸ் வாதிகள் கௌரவமான உடன்பாட் டிற்கு வராமல் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் தீர்ப்பைக் கோரினர். ஹிந்து சமூகத்தினர் பிரதம மந்திரியை பஞ்சாயத்தாக ஏற்படுத்தி அவரது தீர்ப்பைஏற்றுக்கொள்ளச்சம்மதிக்கும் போது முஸ்லிம்கள் பின்வாங்குவது சரியில்லை என்பதற்காக முஸ்லிம்களும் பிரதமமந்திரியின் தீர்ப்பை அங்கீகரிப்பதாகத் தெரிவித்தனர். அதன்பேரில் பிரதம மந்திரியால் வகுப்புத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இத்தீர்ப்பில் முஸ் லிம்களுக்கும், ஹரி ஜனங்களுக்கும், இதர சிறு பான்மையினருக்கும் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவமும் தனித்தேர்தல் முறையும் அங்கி கரிக்கப் பட்டிருந்தது. சுமார் 6 கோடி ஜனத் தொகையுள்ள ஹரிஜனங்கள் தனித்தொகுதி மூலம் பிரிந்து விடுவதால் ஜாதி ஹிந்துக்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது என்பதைக் கருதி காந்திஜீ ஹரிஜனங்களது தனித்தேர்தல் முறை ஒழிய வேண்டும்; அல்லது நான் சாக வேண்டும்; ஹிந்து சமூகம் பிரிக்கப்படுவதை நான் பார்த்துக்கொண்டு ஜீவித்திருக்க முடியாது என்று கூறி பட்டினி கிடக்கவாரம்பித்தார். தந்திரமுள்ள ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங் களைச் சரிபண்ணி ஹிந்துக்களுக்கும் ஹரி ஜனங்களுக்குமிடையில் ஒரு ஒப்பந்தத்தைப் பூனாவில் உண்டு பண்ணிப் பிரதம மந்திரிக்கு இரு சமூகத்தலைவர்களும் தெரிவித்துக்கொண் டனர். இவ்வொப்பந்தப்படிதான் இப்புதுச் சீர்திருத்தத்தில் ஹரிஜனங்களுக்குப் பிரதி நிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ராம ராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கனவு கண்ட சில காங்கிரஸ்வாதிகளுக்கு வகுப்புத்

தீர்ப்பு மிகவும் ஏற்ற தீர்ப்பாக இருந்தது. ராமராஜ்யத்தில் வர்ணாசிரம தர்மமிருந்தது. ஹரிஜனங்களுக்கு அந்த ராஜ்யத்தில் பங்கில்லை. அவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்தனர். அதுபோலவே பிரதமந்திரியின் வகுப்புத் தீர்ப்பு ஜாதி ஹிந்துக்களைவிட்டு ஹரிஜனங்களைப் பிரித்துவிடுவதால் ராமராஜ்யத்தின் ஒரு முக்கிய அம்சம் நிறைவேறுவதைக் கண்டு சந்தோஷமடைய வேண்டும். அப்படி இல்லாமல் காந்திஜீ பட்டினி கிடந்தார். இந்தியாவின் தேசிய நிலைமைக்குத் தனித்தேர்தல்முறை தீங்கானது என்ற உணர்ச்சி உண்மையாகவே அவருக்கு இருக்குமாயின் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தனி தேர்தல் முறை அகற்றப்படாமல் நான் உணவருந்தேன் என்று அவர் பட்டினி கிடக்க வாரம்பித்திருக்கலாம். அதன் மூலமாக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கௌரவமான ஒரு உடன்படிக்கையைச்செய்து கொண்டிருக்கலாம். இப்படிச் செய்யாமலிருந்துவிட்டு இப்பொழுது காங்கிரஸ்வாதிகள், முஸ்லிம் லீக்கைப் பிற்போக்காளர் சங்கம் என்றும், தேசாபிமானமற்றவர்கள் சங்கம் என்றும் கூறி முஸ்லிம் பொதுஜனங்களுக்கு முஸ்லிம் லீக்கின்மீது துவேஷம் உண்டாகும்படி பிரசாரம் செய்து வருவது விரும்பத்தக்க காரியமன்று. காங்கிரஸ் விரும்புவதுபோலவே முஸ்லிம் லீகும் இந்தியாவின் பூரண சுயேச்சை லக்ஷியமுள்ளதாக இருக்கிறது. ஆனால், முஸ்லிம் லீக் சிறுபான்மையினரது உரிமைகள் இந்தியாவின் சுயேச்சை அரசாங்கத்தில் பாதுகாக்கப் படவேண்டும் என்று விரும்புகிறது. காங்கிரஸ் சபை சிறுபான்மையினர் என்ற தனிப் பிரசினைகூடாது; எல்லோரும் காங்கிரஸில் சேர்ந்துவிடவேண்டும் என்கிறது. அதாவது சிறுபான்மைச் சமூகம் அழிந்துவிடவேண்டும் என்பதுதான் இதன் கருத்து. உதாரணமாகஹிந்தியைஎடுத்துக்கொள்வோம். ஹிந்தியானது முஸ்லிம்களுக்கோ, ஹரிஜனங்களுக்கோ, கிறிஸ்துவர்களுக்கோ தாய் பாஷையன்று. இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் பேசப்படும் பாஷையுமன்று. அதனை தேசிய பாஷை என்பதாக ஹிந்துக்கள் கூறி, லக்ஷக்கணக்கான திரவியத்தை அப்பாஷைக்காக வருஷந்தோறும் செலவு செய்கின்றனர். ஒருமுறை ஹிந்தி பாஷையைக் கற்கவேண்டிய அவசியத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்தபோது 'ஹிந்தியை விருத்தி செய்வது சமஸ்கிருதத்தை விருத்தி செய்வதற்கு ஒப்பாகும்' என்பதாக காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிற ஒரு மாகாணத்தின் பிரதம மந்திரி கூறியுள்ளார். இவ்விதமான உணர்ச்சியை மனத்தில் வைத்துக்கொண்டு வெளிக்கு மட்டிலும் தேசிய பாஷை என்று கூறினால் அதனை முஸ்லிம்களும் மற்ற ஜாதியினரும் எவ்வாறு அங்கீகரிக்க முடியும். இவ்விதமாகவே வந்தே மாதர கீதம் சம்மந்தமாகவும் நடந்து கொண்டனர். ஆகவே, காங்கிரஸ் வாதிகள் செய்யும் காரியங்கள் வகுப்பு வாதமாக இருப்பதால் முஸ்லிம்களுக்கு அவர்களது மதம், கலை, பாஷை நாகரீகம், தொழில், முதலியவைகளைக் காப்பதற்காகப் பிரத்தியேகமான ஸ்தானம் ஒன்று இருப்பது அவசியமாகும். முஸ்லிம்களில் எத்தகைய கொள்கையுள்ளவராக இருந்தாலும் முஸ்லிம்களது உரிமைகளைப் பாதுகாக்கும் முஸ்லிம் லீகிற்குக் கீழ்படிந்து இதர ராஜ்யகக்ஷிகளுடன் கலந்து கொள்ளும் விஷயத்தில் நடந்துகொள்வதுடன், முஸ்லிம் லீக்கில் அங்கத்தினராகச் சேர்ந்து அதனைப் பலமாக ஆதரிக்கவேண்டும். தவிரவும், முஸ்லிம்லீகின் மூலமாக அல்லாமல் நேர்முகமாக முஸ்லிம்களுடன் காங்கிரஸ் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளமுடியாது என்பதை முஸ்லிம்கள் கிரியாம்சையில் காட்டிக்கொள்ள வேண்டும். சிறுபான்மையினரை ஏமாற்றி அவர்களது உரிமைகளை இனி அபகரிக்க முடியாது என்பதை ஹிந்துக்களுக்கு உணர்த்த வேண்டும். முஸ்லிம்களுடன் கௌரவமான உடன்படிக்கை செய்துகொள்ள காங்கிரஸ் வாதிகள் இணங்கி வரவேண்டும். இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காக முஸ்லிம்கள் அனைவரும் முஸ்லிம்லீகில் அங்கத்தினராகச் சேர்ந்து அதனை ஆதரிப்பதுடன், அதன் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு இயன்றவரை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆங்காங்கு முஸ்லிம்லீக் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தி மக்கள் ஆயிரக்கணக்கில் அதில் மெம்பர்களாகச் சேர வேண்டும். அதாவது, ஒவ்வொரு கிராமத்திலும் சட்டப்படிக்கான சபையை அமைத்து அதனை தாலுக்கா சபையுடன் இணைக்கவேண்டும். அச்சபை ஜில்லா சபையுடன் இணைக்கப்படல்வேண்டும். அந்த ஜில்லா சபை மாகாண சபைக்குக் கீழ்ப்பட்டதாக இருக்கவேண்டும். மாகாண சபை அகில இந்தியலீக்குடன் பூராவான சம்மந்தம் வைத்துக் கொள்ளவேண்டும்.

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்

(மௌலானா அஷ்ரப் அலீ தானவி சாஹிப் அவர்களின் பிரசங்க சாரம்)

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

தாவூதே, நிச்சயமாக நாம் உம்மை பூமியில் கலீபாவாக ஏற்படுத்தி இருக்கிறோம். ஆகவே, ஜனங்களுக்கிடையில் உண்மையைக்கொண்டு நீர் தீர்ப்புச் செய்வீராக. இன்னும், (மன) இச்சையை நீர் பின்பற்றவேண்டாம். (அவ்வாறு நீர் பின்பற்றினால்) அல்லாஹ்வின் பாதையைவிட்டு உம்மை அது வழி தவறச்செய்துவிடும். நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் பாதையைவிட்டு வழிதவறி விடுகிறார்களோ கணக்கு வாங்கும் தினத்தை அவர்கள் மறந்துவிட்டதால் அவர்களுக்கு கொடுமையான வேதனை இருக்கிறது. (திருகுர் ஆன்)

இந்த ஆயத்து ஹஜ்றத் தாவூத் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களை முன்னோக்கிக் கூறப்பட்டதாயினும், இக்கட்டளை எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது. ஹஜ்றத் தாவூத் (அலை.) அவர்கள்போன்ற முர்ஸலான நபிமார்களுக்கே இக்கட்டளை விதிக்கப்பட்டதென்றால் நம் போன்ற பாபிகளுக்கு இக்கட்டளை அவசியமாக இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்குகிறது. தவிரவும் ஹஜ்றத் தாவூத் (அலை.) அவர்கள் நபியாக இருப்பவர்கள். அதிலும் ஒரு வேதம் அருளப்பட்ட நபியே முர்ஸல். பொதுவாக நபிமார்கள் யாவரும் பாவத்தைவிட்டுக் காக்கப்பட்டவர்கள். பரிசுத்த அகமுள்ளவர்கள். அவர்களது ஒழுக்கங்களும் தன்மைகளும் எண்ணங்களும் பரிசுத்தமாகவே இருக்கும். சாதாரண நபியின் நிலை இவ்வாறிருந்தால் வேதத்தை அருளப்பட்ட முர்ஸலான நபிமார்களுடைய நிலைமை இதனைப் பார்க்கினும் இன்னும் அதிகத்தூய்மையாகவே இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இவ்வித நிலைமையிலுள்ள நபியே மன இச்சையின்படி நடக்கக்கூடாது என்பதிலிருந்து அந்தக் கட்டளை அவர்களுக்கு மட்டிலும் சொந்தமாக இல்லாமல் எல்லா மனிதருக்குமே பொதுவாக விதிக்கப்பட்டது என்பது நன்கு வெளியாகிறது.

மன இச்சைப்படி நடக்கும் தன்மை இக்காலத்தில் படித்தவர், பாமரர் என்ற வித்தியாசமில்லாமல் யாவரையும் பற்றிக்கொண்டிருக்கிறது. பாமர ஜனங்கள் பகிரங்கமாக இதனைக் காட்டிக் கொள்கின்றனர். மற்றவர்கள் பகிரங்கமாகக் காட்டிக் கொள்வதில்லை. இதுதான் இவ்விரு வகைக் கூட்டத்தினருக்குமிடையிலுள்ள வித்தியாசம். மன இச்சையைப் பின்பற்றி, ஷரீஅத்தின் சட்ட திட்டங்களையும்கூட மாற்றிவிடச் சிலர் விரும்புவதுண்டு. தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்வதற்கு ஏதேனும் சட்டமிருக்கிறதா என்றுதான் பொதுஜனங்கள் பத்வாக் கேட்கிறார்களேயன்றி, ஷரீஅத்தில் சொல்லப்பட்டபடி நடந்து கொள்வோம் என்ற நோக்கத்துடன் உலமாக்களிடம் பத்வாக் கேட்பதில்லை. உதாரணமாக, என்னிடத்தில் ஒருவர் வந்து 'ஒருவருக்கு ஒரு ஸ்திரீயை விவாகம் செய்யப்பட்டது; ஆனால், அந்த ஸ்திரீ அவருக்குப் பால்குடி சகோதரி என்பதாகத் தெரியவருகிறது; இதற்கு மார்க்கக் கட்டளை என்ன?'' என்பதாக வினவினார். "அவ்விருவரையும் பிரித்து வைத்துவிடவேண்டும்" என்று நான் கூறினேன். இதைக் கேட்டவுடன் அவர் ஸ்தம்பித்துப்போய் "அப்படிப் பிரித்து வைத்தால் கெட்ட பெயர் வருமே" என்று கூறினார். அதற்கு நான் "இதனால் நல்ல பெயர்தான் வரும்; அவர் ஒரு தவறு செய்துவிட்டார்; என்றாலும், சத்தியம் வெளியான போது சத்தியத்தைப் பின்பற்றி விட்டார்; நல்ல மனிதர்'' என்றுதான் கூறுவார்கள் என்று நான் பதிற் கூறினேன். அவ்விருவரை

யும் பிரிக்கக்கூடாது என்பது அவரது விருப்பம். அதற்காக, அவர் வேறு விதமாகப் பேச ஆரம்பித்துவிட்டார். "அப்பெண் பால் குடித்தது உண்மையேயாயினும், மிகவும் சொற்பமாகத்தான் அருந்தினாள்" என்று கூறினார். அதற்கு நான், ஒரு சொட்டேனும் அருந்தி இருந்தால்போதும், நிக்காஹ் ஹறாமாகிவிட்டது" என்று கூறினேன். அதற்கவர் "அந்தச் சொற்ப பாலையும்கூட வாந்தி எடுத்துவிட்டாள்." என்று கூறினார். அதற்கு நான், "தொண்டைக்குக் கீழில் இறங்கினால்போதும் நிக்காஹ் ஹறாம்தான்; ஹறாமானபின்னர் ஹலாலாகப் போவதில்லை" என்று கூறிவிட்டேன். பிறகு, அவர் என்னை விட்டகன்றார். என்றாலும் அவர் 'கைர முகல்லிது' (ஹதீதைப் பின்பற்றி நடப்பதாகக் கூறிக்கொள்பவர்களை) அண்டினார். அவர்கள் "ஐந்து முடக்குகளுக்குக் குறைவாகக் குடித்திருந்தால் நிக்காஹ் ஹறாமாக மாட்டாது" என்று பத்வாக் கொடுத்துவிட்டார்களாம்? இதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவ்விருவரையும் கணவன் மனைவியாக இருந்து வாழும்படி விட்டுவைத்திருக்கிறார். இந்தப் பிரசினையில் அவர் தமது மன இச்சையை எவ்வாறு பின்பற்றி இருக்கிறார் என்பதை அவரது வினாக்களிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அப் பெண் சிறு குழந்தையாக இருந்தபோதே பிற்காலத்தில் இவ்விதமாக நிக்காஹ் நடைபெறும் என்று தெரிந்து, அந்தச் சமயத்திலேயே அக்குழந்தை எத்தனை முடக்குப்பால் அருந்தியது என்பதை எண்ணி வைத்திருந்தார்களா? மேலும், இவர் இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்களது மதுஹபைப் பின்பற்றியவர்; இவரது அக்கீதாவும் கூட இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்களது மதுஹபில் சொல்லப்பட்டுள்ள அக்கீதாவாகவே இருக்கிறது. அப்படி இருக்க, இந்த நிக்காஹைப் பிரிக்கக்கூடாது என்பதற்காக எத்தனை சூழ்ச்சி செய்திருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். இவ்விதமான பத்வா வாங்குவதால் இவ்வுலகில் ஜனங்களை ஏமாற்றிவிடலாம்; அவ்விருவரும் கூடிவாழ்வதை உலக ஜனங்கள் அனுமதித்துவிடலாம்; என்றாலும், அல்லாஹ் தஆலாவிற்குத் தெரியாமலா இருக்கிறது?

இறந்துபோனவரது சொத்துக்களைப் பாகம் போட்டுக்கொள்வது சம்மந்தமாக என்னிடம் அநேக ஜனங்கள் மார்க்க வினாக் கேட்டிருக்கின்றனர். ஒரே ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லோரும் தனக்குத்தான் அதிகமான பாகம் கிடைக்கவேண்டும்; மற்றவருக்குக் கொஞ்சமாகக் கிடைக்க வேண்டும்; இவ்விதமாகப் பாகம் செய்வதற்கு இஸ்லாமிய ஷரீஅத்தில் இடமிருக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்காகவே பத்வாக் கேட்கின்றனர். ஒருவர் மட்டிலும் பாகஸ்தர்கள் யார் யார்? அவர்களுக்கு என்னென்ன பாகம் இருக்கிறது? என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி நடப்பதற்காக பத்வாக் கேட்டார். பத்வாவில் சொல்லப்பட்டபடி பாகஸ்தர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். மேலும், இவ்விதமாக பாக சம்மந்தமான மஸ்அலாவைக் கேட்பவர்கள் பெரும்பாலும் சொற்பமான பாகத்தை அடைபவர்களாகவே இருக்கின்றனர். பெரும்பாகத்தை அடைபவர்கள் இவ்விதமான விஷயத்தில் அத்தனை சிரத்தை காண்பிப்பதில்லை.

சுருங்கக் கூறுமிடத்து, மன இச்சையானது மூன்றுவகையில் செல்லும். பிதுஅத்தான காரியங்கள், பாபமான காரியங்கள், அல்லாஹ் தஆலாவினது காரியங்களைக்குறித்துத் தங்களது சுய அபிப்பிராயங்களை வெளியிடல், விவாகம் மரணம் முதல் சகல காரியங்களிலும் பல ஆசாரங்களை ஏற்படுத்தி அதனைச் செய்யாவிட்டால் மதம் போச்சு, மானம்போச்சு என்று கூறிக்கொண்டு அதனை விடாமல் செய்தல். எனவே, மனப்போக்கின்படி நடப்பவரை அது முதலில் நேரான பாதையை விட்டு விலகச் செய்துவிடுகிறது. குப்று ஷிர்க்கான காரியங்களையுங் கூடச் செய்யும்படி மனிதனைத் தூண்டும். எனவே, மனோ இச்சையின்படிசெய்வதற்கு வழிகேடு என்று வேறு பெயர்கூறுவது பொருந்தும். ஆகவே, மன இச்சை எவ்வளவுக்குக் கெட்டதாக இருக்கிறதோ, அவ்வளவிற்கு அவனது வழி தவறான நடத்தையும் கேடாகவே இருக்கும். இதற்குப் பரிகாரமென்னவெனில், குர்ஆன் ஹதீது ஆகியவைகளில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ள விஷயங்களில் குர்ஆன் ஹதீதைப் பின்பற்றவேண்டும். அதல்லாத மற்ற விஷயங்களில் அல்லாஹ் தஆலாவின் பாதையில் தங்களை அழித்து விட்டவர்களைப் பின்பற்றவேண்டும். "மனிதனுடன் அவனது நிழல் எவ்விதம் இணைபிரியாமலிருக்கிறதோ அவ்விதமாக இவ்வழியில் நடப்பவர்களைவிட்டு இணைபிரியாமல் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டும். மேலும், "மெஞ்ஞான வழியில் நீங்கள் தனிமையில் செல்லாதீர்கள்; அவ்வழி

நடந்தவர்களுடன் நீங்கள் செல்லவேண்டும்; தொழுகையை இமாம் ஜமாஅத்தாகத் தொழும்படி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது; தனித்துத் தொழுவதைப் பார்க்கினும் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது மிகவும் நல்லது. ஏனெனில் ஜமாஅத்தில் எவரேனும் ஒரு நல்லார் சேர்ந்திருக்கக்கூடும்; அந்த நல்லாரின் பொருட்டால் உமது தொழுகையும் இறைவனால் அங்கீகரிக்கப் படலாம்'' என்பதாக மௌலானா றூமி (றஹ்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

கேவலம் வரும், பிறர் ஏசுவர், கெட்டபெயர் வரும் என்ற எண்ணம்தான் மனிதனைத் திருத்திக் கொள்ளவிடாமல் தடுத்து வைப்பதாக இருக்கிறது. இஸ்லாம் மதத்தை அனுஷ்டிப்பவர்கள் இதனைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யக்கூடாது. ஏனெனில், முஸ்லிம்கள் அவ்வாறு லக்ஷியம் செய்வதாக இருந்தால் இன்று கோடிக்கணக்கில் முஸ்லிம்களை நாம் காணமுடியாது. நமது மூதாதையர் அக்காலத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவியபோது அவர்களைப் பலர் ஏசியும், பேசியும், தூற்றியும், கேவலப்படுத்தியும் ஹிம்சித்தனர். இவைகளை அவர்கள் பொருட்படுத்தி இருந்தால் முஸ்லிம்களாக அவர்கள் இருந்திருக்க மாட்டார்கள். அவர்கள் முஸ்லிம்களாக இல்லாதிருந்தால் இன்று நாம் முஸ்லிம் என்று கூறிக்கொள்வதற்குக்கூட அருகதையுள்ளவர்களாக இருக்கமாட்டோம்.

ஆகவே, நாம் நமது யுக்தியைச் செலுத்திக் குதர்க்கமான தார்ப்பரியங்களைக் கொள்வதில்தான் மனம் தனது இஷ்டம்போல் நம்மை அழைத்துச் செல்லத் துணிகிறது. புத்தி எல்லோருக்கும் ஒன்று போலில்லை. ஒருவர் அதிக புத்தியுள்ளவராக இருப்பார். மற்றொருவர் அதற்குக் கொஞ்சங் குறைந்தவராகவோ மேம்பட்டவராகவோ இருப்பார். ஆகவே, புத்திக்கு இதுதான் கடைசி எல்லை என்று முடிவு ஏற்படவில்லை. ஆதலால், மனித அறிவை நம்பி அதனைப் பின்பற்றக்கூடாது. எனவே, மனிதர் பின்பற்றுவதற்குத் தகுதியாகவுள்ளது 'வஹீ'தான். 'வஹீ'யை அல்லாமல் வேறு எதனையும் பின்பற்றலாகாது. என்றாலும், வஹியையும் ஜனங்கள் கூடக் குறையச்செய்து மாற்றித் திரித்துவிடுவர். அப்படி நடைபெறவிடாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். இக்காலத்தில் படித்தவர் முதல் பாமரர்வரை எல்லாவகை ஜனங்களும் வஹீயின் மூலமாக அறிவிக்கப்பட்ட கட்டளைக்கு உட்பொருள்களையும் புறப் பொருள்களையும் கூறித் தங்கள் வாக்கு சாதுர்யத்தால் தங்கள் மனம்போல் நடந்துகொள்ள இடத்தை ஏற்படுத்திக்கொள்வதுடன் பொது ஜனங்களிடம் தங்களது செய்கைக்கு எதிர்ப்போ அல்லது தடையோ அல்லது ஆக்ஷேபனையோ உண்டாகாமற் பார்த்துக்கொள்கின்றனர். இவர்கள் மனிதரை ஏமாற்றிவிட்டாலும் மனிதரைப்படைத்த ஆண்டவனை ஏமாற்ற முடியாது. அவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் இதற்குத் தக்கவாறு தண்டனை யளிப்பான். எனவே, நல்ல பெயரோ கெட்ட பெயரோ வருவதைக்கொஞ்சமும் லக்ஷியஞ் செய்யாமல் 'வஹீ'யின் மூலம் அறிவிக்கப்பட்டதை அப்படியே அங்கிகரிக்கவேண்டும்.

சிலர், திருகுர்ஆன்தான் வஹீயாக இருக்கிறது; ஹதீதுகள் வஹீயாக இல்லை என்று கூறி, 'அஹ்லகுர்ஆன்' என்ற ஒரு கக்ஷியாளரை உண்டாக்கி விட்டனர். அஹ்லஹதீதுகள், 'கைரமுகல்லிதுகள்' முதலியவர்களும்கூட இவ்விதமான சூழ்ச்சிக்கு உட்பட்டவர்களேயாவர். "இந்த றஸூலுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள்'' என்று அல்லாஹுதஆலா திருகுர்ஆனில் கூறி இருப்பதால் ஹதீதின் கட்டளைக்குக் கீழ்படிவது திருகுர்ஆனின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதாகவே இருக்கிறது. இதுபோலவே, இமாம்களைப் பின்பற்றும் விஷயமுமிருந்து வருகிறது. இமாம்கள் 'உலுல் அம்று'களைச் சேர்ந்தவர்கள். 'உலுல் அம்று'களுக்குக்கீழ்ப்படியும்படி திருகுர்ஆன் கட்டளையிட்டிருக்கிறது. ஆகவே, தங்கள் யுக்திகளுக்கு இடங்கொடுப்பதும் மன இச்சைக்குக் கீழ்ப்படிவதாக இருப்பதால் எல்லா விஷயங்களிலும் மிக ஜாக்கிரதையாக இருப்பது அவசியமாகும்.

அறிவிப்பு.

ஸவுத் மலபார் ஆலத்தூர் மௌலவி M. A முகம்மது மீரான் சாஹிப் அவர்களை நமது மாசிகைக்கு ஏஜண்டாக நியமித்திருப்பதால் அன்பர்கள் அவர் மூலம் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து மாசிகையை ஆதரித்துவருவார்களென எதிர்பார்க்கிறோம்.

முஸ்லிம்களின் நிலைமை

கனவான்களே! நமது சமூகம் உலகைச் சீர் திருத்துவதற்காக வந்தது. ஆனால், நமது சமூகம் தற்போது வீழ்ச்சியடைந்திருப்பதைப் பற்றி மிகவும் விசனப்பட வேண்டியதாக இருக்கிறது. அல்லாஹு தஆலா நமக்கிரங்கி அவன் நம்மைக் கடைத்தேற்றினால்தான் நாம் தேரமுடியும். இல்லையேல் நாம் நமது வீழ்ச்சியிலிருந்து எழுந்திருப்பதற்கான அறிகுறி எதுவும் தோன்றவில்லை. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மத சம்மந்தமாக நமக்குக் கற்பித்த போதனைகளை நாம் மறந்துவிட்டோம். வீணான விஷயங்களில்தான் ஒவ்வொரு க்ஷணமும் நமக்குச் சிந்தனை இருந்து கொண்டிருக்கிறது. கல்வி இல்லாமல் எந்தச் சமூகமும் முன்னேற்றமடைய முடியாது என்பதை நாம் உணரவேண்டும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 'பத்று'ச் சண்டையில் கைதியாக அகப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் பத்து முஸ்லிம்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்து விட்டு விடுதலையடைந்து கொள்ளலாம் என்று கட்டளையிட்டார்கள். ஒவ்வொரு முஸ்லிம் ஆடவரும் பெண்டிரும் கல்வி கற்றுக் கொள்வது கடமை என்பதாக நாயகம் (ஸல்.) அவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால், நாம் இந்த முதற்கடமையை மறந்துவிட்டோம். அறியாமையின் காரணமாக அடிமைத்தனத்திலும் வறுமையிலும் காலங்கடத்திக் கொண்டிருக்கிறோம்.

நமது சமூகத்திலுள்ள அநேகம் ஜனங்கள் பெயரளவில் முஸ்லிம்களாக இருக்கிறார்கள். இஸ்லாம் மதத்தின் முக்கிய கடமைகள் எத்தனை? என்று வினவினால் அதனைச் சொல்லத் தெரியாமலிருக்கிறார்கள். சில ஜனங்களுக்கு கலிமாகூடத் தெரிவதில்லை. பலருக்கு இஸ்லாத்தின் திருநபி (ஸல்.) அவர்களது பெயர் கூடத் தெரியாது. 'குலபாயேராஷிதீன்'களது பெயர்களை அறியாதவர்கள் அனந்தம் பேர். எந்த சமூகம் கல்வி விஷயத்தில் இவ்வளவு கேவலமாக இருக்கிறதோ, ஒற்றுமையில்லாமலு மிருக்கிறதோ அந்தச் சமூகம் தனது முன்னோர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உலகில் நீங்களும் உயிருள்ள, ஜீவனுள்ள ஒரு சமூகமாக இருக்க விரும்பினீர்களாயின், முற்காலத்திலிருந்த முஸ்லிம்களைப் போல் கௌரவமாக இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் உங்களது முன்னோர்களது நடவடிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். முற்காலத்திலிருந்த பெரியார்களது பழக்க வழக்கங்களும் நடையுடை பாவனைகளும் மதத்திலும் ஷரீஅத்திலும் மூழ்கியவைகளாக இருந்ததால் அவர்கள் முன்னேற்றத்தின் உச்சத்திலிருந்தார்கள். செல்வம், அதிகாரம், கண்ணியம் அவர்களது கால்களை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் நாம் கல்வி அறிவற்றவர்களா யிருப்பதால் அன்னோரின் நடை உடை பாவனைகளை எவ்வாறு தெரிந்து கொள்ளப் போகிறோம்.

நமது தரித்திரம்

சில வருஷங்களுக்கு முன் இத்தேசத்தின் ஆட்சி உரிமை நமது கையிலிருந்தது. நாம் வீரர்களாக இருந்தோம். நமது ஜீவியமும் உழைப்பும் கஷ்டமுள்ள காரியங்களில் செலவாகிக் கொண்டிருந்தது. அக்காலத்தில் நமது ஆடம்பரமான வாழ்க்கை இன்னது என்பது கூடத் தெரியாது. ஆனால், நாம் ஆடம்பர வாழ்க்கையிலும் சுகபோகத்திலும் ஈடுபட்டதிலிருந்து நமது அரசாங்கம் நம்மைவிட்டுப் போய்விட்டது. நாம் வீரர்களாகவுமில்லை, அடிமைகளாகிவிட்டோம். இதுபொழுது வீரமுள்ள காரியம் நம்மிலிருந்து கொஞ்சங்கூட நடைபெறுது. அளவிற்கு மீறிய கோழைத்தனம் நம்மில் உண்டாகிவிட்டது. வீர வாழ்வில்லாத எந்தச் சமூகமும் அரசாங்கம் செய்ய முடியாது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். தற்போது கோழையிலும் கோழையான சமூகம்கூட வீர வாழ்க்கையைக்

கனவு கண்டுகொண்டிருக்கின்றது. மேலும், குஸ்திப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன, ராணுவ ஸ்கூல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன, ஊக்கத்தையும் வீரத்தையும் அடைந்துகொண்டிருக்கின்றன என்ற சப்தம் இப்பொழுது உங்கள் செவிப்புலன்களுக்கு எட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால், நமது இளைஞர்கள் சொக்கட்டான் முதலிய ஆட்டங்களைவிட்டு எழுந்திருக்கவும்கூட நேரம் கிடைக்கவில்லை.

வரப்போகிற நமது சந்ததியினருக்கும் இதே பயிற்சி இருந்துவந்தால் நமது தரித்திர நிலை நீங்கும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. நாம் அலுவலுள்ளவர்களாகி, சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் நம்மில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டு, ஒரு நிமிஷத்தையுங்கூட நாம் வீணாக்காமலிருந்தால்தான் நமது தரித்திரம் நம்மைவிட்டு நீங்கும்.

தொழிலில் நமது நிலைமை.

நம்முடைய அரசாங்கம் நம்மைவிட்டு நீங்கிவிட்டது, நாம் வீரர்களாகவுமில்லை, நாம் அரசர்களாகவுமில்லை. அப்படி இருந்தும் நமது எண்ணங்கள் இப்பொழுதும் அரச எண்ணங்களாகவே இருக்கின்றன. ஆகவே, நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் மூன்றுள. வியாபாரம், விவசாயம், கூலிவேலை ஆகியவைகளாகும். வியாபாரம் முஸ்லிம்களது சொந்தத் தொழிலாகும். எந்தச் சமூகத்தாரிடம் வியாபாரம் இருக்கிறதோ அவர்களிடத்திலேயே அரசாங்கமிருக்கும்; அந்தச் சமூகம்தான் எப்பொழுதும் சந்தோஷமாகவும் செழிப்பாகவும் இருக்கும்; அச்சமூகத்திற்கு மிகவும் சொற்பமாகவே கஷ்டங்கள் நேரிடும் என்பதை முன்னோர்கள் தெரிந்திருந்தனர். ஆனால், நாம் இந்தப் பாடத்தை மறந்துவிட்டோம். நமது தேசத்தில் வியாபார வகுப்பினர் பெரும்பாலும் மார்வாடிகளும், குஜராத்திகளும், கச்சிவாசிகளும், கோஜாக்களும், போரா வகுப்பினரும்தான். இந்தச் சமூகங்களில் தரித்திரப்பட்ட மனிதனை நீங்கள் தேடிப் பார்த்தால் உங்களுக்கு அப்படிப்பட்டவர்கள் கிடைப்பது அரிது. ஆனால், உங்களிலுள்ள மிகப்பெரிய ஜமீந்தார்களையும், மிராஸ்தார்களையும், ஜாகீர்தார்களையும் பற்றி அவர்களது நிலைமையைப் பரிசிலனைசெய்து பார்ப்பீர்களாயின் அவர்களிற் பெரும்பாலர் கடன்காரர்களாக இருப்பதைக் காண்பீர்கள். அவர்களில் மிகச் சிலரே சந்தோஷமாகவும், செழிப்பாகவுமிருப்பார்கள். ஆதலின், நாம் எல்லாவற்றிற்கும் முதலில் வியாபாரத்தின்பால் கவனம் செலுத்தவேண்டும். ஆனால், அந்த வியாபாரம் நாணயத்துடனிருக்க வேண்டும். நாணயமில்லாத வியாபாரம் வெகுகாலத்திற்கு நிற்கமாட்டாது; மிகச் சீக்கிரத்தில் அதற்கு அழிவு வந்துவிடும்.

விவசாயிகள் இதற்கடுத்தபடியாக இருக்கிறார்கள். இதுவும் தொழிலாக நடத்துவதற்குத் தகுதியுடையதாகும். மேலும், நாம் இங்கு கௌரவமாக வாழவேண்டும் என்றிருந்தால், நாமே விவசாயத்தைச் செய்யவேண்டும். சொந்த பூமி இல்லாதவர்கள் பிறரிடமிருந்து பூமியை விலைக்கு வாங்கவேண்டும். எந்த முஸ்லிமும் தன்னுடைய பூமியைப் பிறருக்கு விற்பனைசெய்வது கூடாது. அவ்வாறு பூமியைவிற்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுவிட்டால் அதனை முஸ்லிம்களுக்கே விற்கவேண்டும். ஏனெனில், எவரிடம் பூமி இருக்கிறதோ அவர்தான் இனிமேல் அதிகாரம் செலுத்துபவராக இருப்பார். தவிரவும், அந்த சமூகத்திலுள்ள கூலிக்காரர்கள்தான் செழிப்பாக வாழமுடியும். இப்பொழுது முந்திய காலத்தைப் போன்ற நிலைமை இல்லை. முற்காலத்தில் முஸ்லிம்களிடத்தில் பூஸ்திதி இருந்தது. இப்பொழுது அந்த பூஸ்திதிகள் நமது அஜாக்கிரதையாலும் ஆடம்பரத்தாலும் மார்வாடிகளிடத்திலும் செட்டிகளிடத்திலும் இதர சமூகத்தாரிடத்திலும் போய்விட்டன. ஆகவே, எஞ்சியுள்ள அற்ப சொற்ப பூமிகளையேனும் நாம் காப்பாற்றி வைப்பது அவசியமாகும். ஒரு முஸ்லிம் தனது அறியாமையினால் தனது பூமிகளை நாசம் செய்வாராயின் அவரது பந்துக்களும் அக்கம்பக்கத்திலுள்ளவர்களும் அவருக்குப் புத்திமதிகளைக் கூறி, அப்பூமிகளை நாசம் செய்யாமற்றடுக்கவேண்டும். இரண்டு மூவாயிரம் முஸ்லிம்கள் வாழ்கின்ற ஒரு கிராமத்தில் இரண்டு மூன்றுபேர்கள் மட்டும் செல்வந்தர்களாக இருந்தால் அவ்விரண்டு மூன்று பேருக்கு அந்நியரிடம் கொஞ்சமும் மதிப்பு இருக்கமாட்டாது. அந்த ஊரிலுள்ள எல்லா முஸ்லிம்களும் நல்ல ஸ்திதியில் இருந்தால்தான் அங்குள்ள முஸ்லிம் சமூகத்திற்கு கௌரவம் இருக்கும். அங்குள்ள அவ்விரண்டு மூன்று முஸ்லிம்கள், அங்குள்ள தங்கள் முஸ்லிம் சகோதரர்களைக் கவனியாமலிருந்தால்

மற்ற முஸ்லிம்கள் அந்த தனவந்தர்களை மதிக்க மாட்டார்கள். இவ்வித நிலைமையில் பணம் படைத்த இரண்டு மூன்று முஸ்லிம்களை அந்நிய சமூகத்தினர் மிகச் சீக்கிரத்தில் ஏழைகள் கூட்டத்தில் சேர்த்துவிடுவார்கள். இதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்கள் நமது பார்வையில் வந்திருக்கின்றன. இவ்விஷயங்களை நாம் பிரத்தியக்ஷமாகத் தெரிந்திருந்தும் நமக்கு இன்னமும் புத்தி வராமலிருப்பது தான் வருந்தத்தக்கது.

நமக்கு முதலாவது 'கிப்லா'வாக இருக்கிற பைத்துல் முகத்தஸில், எஹூதிகளுக்கும் முஸ்லிம்களுக்குமேற்பட்டிருக்கிற சச்சரவு உங்களுக்குத் தெரிந்திருக்கும். அங்கு ஏற்பட்டுள்ள சண்டை, செல்வத்திற்கும் தரித்திரத்திற்குமிடையில் ஏற்பட்டுள்ள சண்டையாகும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அங்கு எஹூதிகளைக் கொண்டுவந்து குடியேற்றுகிறது. எஹூதிகள் பணமுள்ளவர்கள். அவர்கள் அரபியரிடம் பூமியை விலைக்குவாங்கி அவர்களை அடிமைகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள், அப்பிரதேசத்தைவிட்டுச் சென்றுவிட வேண்டும் என்று அரபியரை நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரதேசத்தைவிட்டு அவர்கள் ஏன் செல்ல வேண்டும் என்று நீங்கள் வினவக்கூடும். பூமிக்குக் கிரயமாகக் கிடைத்த பணம் செலவாகிவிடும்; கூலிவேலையுங் கிடைக்காது; அப்புறம் வயிற்றுப்பிழைப்பை நாடி அப்பிரதேசத்தைவிட்டு அவர்கள் தானாகவே வெளியேற வேண்டியதுதான். அங்கும் பெரும் பாலானவர்கள் ஏழைகளாக இருப்பதால் வியாபாரம் செய்ய அவர்களால் முடியவில்லை. தங்களிடத்தில் பூமி இல்லாததால் விவசாயம் செய்வதற்குமில்லை. விவசாயம் செய்வதற்கு எஹூதிகள் பூமியைக் கொடுப்பதுமில்லை. கூலிவேலைக்கும் கூட அறபியரை அழைப்பதுமில்லை. இவ்வித நிலைமையில் எத்தனைநாள்தான் மனிதன் தரித்திரத்தால் அங்கு அவதிப்பட்டுக்கொண்டிருக்க முடியும். நீங்கள் இந்த ஊரைவிட்டுச் சென்றுவிடுங்கள் என்று எஹூதிகள் அறபியருக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லாமலே அறபியர் தாங்களாக அந்த தேசத்தைவிட்டு வெளியேற வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுவார்கள்.

25 வருஷங்களுக்குமுன் இந்தியாவின் அநேக பாகங்களிலுள்ள முஸ்லிம்களெல்லோரும் பூஸ்திதியுள்ளவர்களாக இருந்தனர். பெரும் பெரும் ஜாகீர்தார்களாகவும் ஜமீன்தார்களாகவுமிருந்தனர். ஆனால், இன்று பரிதபிக்கத்தக்க நிலைமையிலிருக்கின்றனர். கல்வி இல்லை, விவாகம், விருத்தசேதனம், பிஸ்மில்லாகானி, முதலிய காரியங்களில் ஆடம்பரமாகப் பணத்தை விரயஞ்செய்து பூமிகளை எல்லாம் இழந்தனர். முஸ்லிம்களே! இனியேனும் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள். எஞ்சியுள்ள பூமிகளையேனும் இழந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள். கல்வியில் கவனத்தைச் செலுத்துங்கள். வீண் செலவை விட்டொழியுங்கள். சிக்கனமாக இருங்கள். மதக்கட்டளைக்குக்கீழ்ப்படியுங்கள். அப்புறம் உங்களது நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதைத்தெரிந்துகொள்வீர்கள்.

1937-ல் த்திய அப்கானிஸ்தானம்

மாஜி அப்கான் அரசர் அமானுல்லாகான் அவர்களது ஆட்சிக்கு முன்னர் அப்கானிஸ்தானம் இருள்சூழ்ந்த காலத்தின் ஜீவியத்தையே அனுபவித்துக்கொண்டிருந்தது. அத்தேச அரசாங்கத்தின் கடிவாளம் ஏதேச்சாதிகாரமுள்ள ஒரு அரசரின் கையிலேயே இருந்தது. அந்நிய நாட்டினருடன் வெளிச்சம் மந்தம் வைத்துக்கொள்வது கூட வரையறுக்கப்பட்டிருந்தது.

1928-29-ல் அப்கானிஸ்தானம் 'பச்சாசக்கா'வின் அதிகாரத்தின்கீழ் வந்தது. அவன் பாமர ஜனங்களது உணர்ச்சியுடன் விளையாடி, தன்னுடைய அநியாய வாள்பலத்தை நம்பி எல்லா அபிவிருத்திகளையும்அழித்துவிட்டான். சென்ற எட்டு வருஷ காலத்தில் அப்கானிஸ்தானம் எதிர்பார்த்ததற்கு அதிகமான மாறுதலை அடையும்படிச் செய்துவிட்டான். அது மறுபடியும் நாகரீகமடைந்த நாடாக ஆகுவதற்கு

இன்னும் பத்து வருஷங்கள் செல்லவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில், வியாபாரம்

ஒரு கோடியே இருபது லக்ஷம் ஜனத் தொகையையும், 70 ஆயிரம் சதுரமைல் விஸ்தீரணமுமுள்ள இந்த தேசத்தில் உயர்தரமான இரண்டு பாங்கிகள் இருக்கின்றன. இந்த பாங்கிகளுக்கு உலகிலுள்ள எல்லா முக்கிய பாங்கிகளுடன் சம்மந்தமிருந்து வருகிறது.

அப்கானிஸ்தானில் லிமிடெட் கம்பெனிகள் ஐம்பது இருக்கின்றன. இக்கம்பெனிகளுக்கு கோடிக்கணக்கான மூலதனமிருப்பதால் அநேக சுரங்கங்களிலும் இக்கம்பெனிகள் வேலை செய்கின்றன. சகலவிதமான வியாபாரங்களும் இக்கம்பெனிகளால் செய்யப்படுகின்றன. அப்கானிஸ்தானில் ஏராளமான சுரங்கங்களிருக்கின்றன. இவைகளை முறைப்படி பிரயோஜனப்படுத்திக்கொண்டால் உலோகங்களை ஏராளமாகக்கொண்ட நடுகளில் மிகவும் முக்கிய ஸ்தானத்தை இந்த தேசம் மிக விரைவில் அடைந்துவிடும் என்பது உறுதி. அநேகம் இடங்களில் இரும்பு, நிலக்கரி, கந்தகம், ஈயம், வெள்ளி, தங்கம், மண்ணெண்ணெய், அப்ரேக், இன்னும் அநேக உலோகங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ராணுவ வசதிகளுக்கு இவ்வளவு லோகங்கள் மிகவும் அவசியமானவை. எனவே, தேசத்தில் வியாபாரம், கைத்தொழில் ஆகியவைகளை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதில் அப்கான் அரசாங்கம் மிகவும் கவனம் செலுத்தி வருகிறது.

ராஜீய விவகாரங்கள்

1937-ம் வருஷத்து அப்கானிஸ்தான் சர்வ தேச ராஜீய விவகாரங்களை விட்டுத் தன்னைத் தனியே ஒதுக்கி வைத்துக்கொள்ளவில்லை. காலத்தின் போக்கை அனுசரித்தே அது நடந்துகொண்டிருக்கிறது. ஈரான், ஜெர்மனி, ஜப்பான், இதாலி, பிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா முதலிய இதர நாடுகளில் இவ்வரசாங்கத்தின் ஸ்தானீகர்கள் இருந்து வருகின்றனர். அந்நிய நாட்டு வியவகாரங்கள் சம்மந்தப்பட்ட மட்டிலும் அது பூரண சுயேச்சையுள்ள ஒரு தேசமாகவே இருந்து வருகிறது. இப்பொழுது அது ருசியாவின் கோபத்திற்கு ஆளாகவேண்டியதுமில்லை. ஜான் புல்லின் கட்டளையைக் கண்டஞ்சவேண்டியதுமில்லை. மிகவும் சொற்பமான இவ்வெட்டு வருஷகாலத்தில் முன்னேற்ற மடைந்த அரசாங்கங்களின் ராஜபாட்டையில் தனக்குள்ள ஸ்தானத்தை அடைந்துவிட்டது.

அரசியல் முன்னேற்றம்

சென்ற சில வருஷங்களில் அப்கானிஸ்தானம் உள்நாட்டு அரசியல் திட்டத்தில் அதிகமான மாறுதல்களைச் செய்திருக்கிறது. சென்ற 1919-ம் வருஷத்தில் அப்கானிஸ்தான் ஏதேச்சாதிகாரமுள்ள அரசாதிபத்தியத்தைத் தவிர வேறு விதமான முறையிலுள்ள அரசாங்கம் தனக்கு ஏற்படும் என்ற ஞாபகம்கூட இல்லாமலிருந்தது. ஆனல், 1937-ம் வருஷத்தில் அதன் நிலைமை எவ்வாறெனில், ஜனநாயக அரசியலமைப்புக்குரிய விதை விதைக்கப்பட்டிருக்கிறது என்று அது பெருமை கொள்ள இடமேற்பட்டுவிட்டது. ஜனநாயக ஆட்சிதான் அத்தேசத்தின் அவசியத்திற்கு ஏற்றதுமாகும். இங்கிலாந்திலுள்ள லார்டு சபைக்கு இங்கிலாந்தில் எந்த அந்தஸ்து இருக்கிறதோ அதேவிதமான அந்தஸ்துடன் அப்கானிஸ்தானிலும் ஜனப் பிரதிநிதி சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மற்ருெரு சபையுமிருக்கிறது. இது காமன்ஸ் சபையின் அங்கத்திலிருக்கிறது. இதனை "மஜ்லிஸுஷ் ஷூரா" (ஆலோசனைச் சபை) என்று அழைக்கின்றனர். இந்தச் சபையில் மொத்தம் 120-பேர்கள் அங்கத்தினர்கள். வயது வந்தவர்களுக் கெல்லாம் வோட்டளிக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வயது வந்த வோட்டர்களால் இவர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும். இங்கு மற்ருெரு ஸ்தாபனமும் இருக்கிறது. இந்த ஸ்தாபனம் மிக முன்னேற்றமடைந்த குடியரசாட்சியுள்ள நாடுகளில்கூட இல்லை. இதனை "ஜிர்கா" என்றழைக்கின்றனர். இது பாமரர்களின் பிரதிநிதிகள் கூடும் சபை. இதற்கு அங்கத்தினர்கள் பிரதி மூன்று வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். இது சட்டசபையைப் போலிருக்கிறது. இத்தேசத்திற்குச் சம்மந்தப்பட்ட பெரிய பிரச்னைகள் இங்கு முடிவு செய்யப்படுகின்றன. ஜிர்காவின் அங்கீகாரமில்லாமல் எந்தப் புதிய வரியையும் விதிக்கமுடியாது; புதிய சட்டமும் இயற்றமுடியாது. இச்சபைகளுக்கு மேலில் அரசர் அதிகாரமுள்ளவராக இருந்தாலும் அவரது அதிகாரங்கள் மதக்கட்

டளைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் கீழில்தானிருக்கின்றன.

சர்வாதிகார ஆட்சி முறை தற்போது உலகில் பெருகிக்கொண்டும், ஜனநாயக ஆட்சியுள்ள அரசாங்கங்களிற் பெரும்பாலானவைகளை கர்நாடக அரசாங்கங்கள் என்று கருதிக்கொண்டும் வருகிற இக்காலத்தில் எதேச்சாதிகாரமுள்ள இத்தேசத்தில் குடியரசுத் தன்மையில் அரசியல் திட்டம் அமைக்கப்படுவது உண்மையில் பாராட்டத்தக்கதேயாகும். அதுவும் ஆறு வருஷகாலத்திற்குள் அமலில் வந்துவிட்டது. சென்ற 1931-ம் வருஷத்தில் காஜீ முஹம்மது நாதிர்ஷாஹ் ஷஹீது அவர்கள் இவ்விதமான அரசியல் திட்டத்தை அமலில் கொண்டுவந்து அதன் பயன் யாதென அறியமுயன்ருர். இத்திட்டம் அப்கானிஸ்தானிலிருந்த பழைய அரசாதிபத்தியத்தையும், தற்போது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மாகாண சுயேச்சைத் திட்டத்தையும் பார்க்கினும் மிகச் சிறந்த திட்டமாகும். இதனை இந்தியாவின் அரசியல் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவின் சுயேச்சையானது தேசத்தின் ராஜிய முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லை உண்டாக்கி இருக்கிறது என்பதைத் தவிர வேறு அதிகமான முக்கியபத்துவம் இல்லை என்பது வெளியாகும்.

கல்வி

மாக்ஷிமை தங்கிய முஹம்மது ஜாஹிர்ஷாஹ் அவர்களது ராணுவம் சட்டப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய நவீன ஆயுதங்களெல்லாம் இருக்கின்றன. ராணுவ பயிற்சியும், சாஸ்திர முறைகளும் பரிபூரணமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்திலுள்ள நவீன யுத்தக் கருவிகளை அவைகள் நன்கு உபயோகிக்க முடியும். தவிர, இந்தியாவில் ராணுவத்திற்கு ஏற்படுகிற அவ்வளவு அதிகமான செலவு அப்கானிய ராணுவத்திற்கு இல்லை. காபூலில் உயர்தரமான ராணுவக் கலாசாலை ஒன்றிருக்கிறது. இஞ்ஜினீரிங் போதனை முறைக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கல்வி விஷயத்தில் அப்கானிஸ்தானம் இப்பொழுது பிற்போக்கான தேசமல்ல. தேசமெங்கும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆர்ட் காலேஜ், கைத்தொழில் காலேஜ், பைன் ஆர்ட்ஸ் காலேஜ், இதர கல்வி ஸ்தாபனங்கள் யாவும் நிறுவப்பட்டிருக்கின்றன. இவைகளில் அநேகருக்கு அரசாங்கம் ஸ்காலர்ஷிப்புகளை அளித்து வருகிறது; அவர்களுக்கு சாப்பாடும், குடியிருக்க வசதியும் கூடக்கொடுத்து வருகிறது; புஸ்தகங்களும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன.

வரப்போகிற சந்ததியினரை சாஸ்திரீக முறையில் நாகரீகமுள்ளவர்களாக ஆக்குவதற்கான எல்லா முயற்சிகளும் நேர்முகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியவருகிறது. அப்கானிய ஸ்திரீகளை ஐரோப்பாவிற்கோ அல்லது துருக்கிக்கோ கல்வி படிப்பதற்காக அனுப்புவதைத் தற்போதைய அரசாங்கம் விரும்பவில்லை. அந்நிய தேசத்திலுள்ள உபாத்தியாயனிகளைத் தங்கள் நாட்டிற்குத் தருவித்து இனி வரப்போகும் தாய்மார்களைப் பர்தாவிற்குள் வைத்துக்கொண்டே அவர்களுக்குக் கல்வி போதிப்பதில் எவ்விதச் சிரமமும் தீங்குமில்லை என்பதாக தற்போதைய அரசாங்கம் கருதுகிறது.

பத்திரிகைகள்

1937-ம் வருஷத்திய அப்கானிஸ்தானில் உயர்தரமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் 15 இருக்கின்றன என்பதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப்படலாம். இங்குள்ள சில தினசரிப் பத்திரிகைகள் இந்தியாவிலுள்ள தினசரி பத்திரிகைகளைப் பார்க்கினும் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாஹ், காபுல், முஜல்லா ஆகிய பத்திரிகைகள் மிகவும் உயர்ந்த ரீதியில் பிரசுரமாகின்றன. "காபுல்" என்ற பத்திரிகையின் வருஷ அனுபந்தத்தின் அச்சு, ஒழுங்கு, படம் ஆகியவைகளைக் கவனிக்குமிடத்து உலகிலேயே மிகச் சிறந்த அனுபந்தங்களில் இஃதொன்று என்று கூறுவது மிகையாகாது. கிட்டத்தட்ட இவ்வனுபந்தம் ஒரு ஆயிரம் பக்கங்களைக் கொண்டது. புதுமாதிரியான போட்டோகிராபின் நூற்றுக்கணக்கான நமூனுக்கள் இதில் காட்டப்பட்டிருக்கின்றன. இதன் வியாசங்கள் மிக உன்னதமானவை. தற்கால ராஜிய நிலைமையைப்பற்றியும் அதில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரசுரத்தின் பதிப்பு வேலை கைத்தொழிலுக்கு மிகவும் சேர்த்தியான முன்மாதிரி

யாக இருக்கிறது. இந்த அனுபந்தத்திற்குச் சமமான வேறு ஒரு அனுபந்தத்தையோ சஞ்சிகையையோ நான் இன்றுவரை பார்த்திருக்க முடியாது. ஹிந்திப் பாஷையிலும்கூட இதற்கு நிகராக வேறு ஒன்றுமில்லை.

தேச முன்னேற்றம்

இற்றைக்குப் பத்து வருஷங்களுக்கு முன் அப்கானிஸ்தானில் பிரயாணம் செய்வது மிகவும் சிரமமாகவும் கஷ்டமாகவுமிருந்தது; ரஸ்தாக்கள் மிகவும் சீர்கேடான நிலைமையிலிருந்தன; பிரயாணச்செலவு சகிக்க முடியாமலிருந்தது. இப்பொழுது நல்ல ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. பெரிய பட்டணங்களுக்கு மோட்டார் சர்விஸ்கள் இருக்கின்றன. சென்ற 1935-ல் லாகூரிலிருந்து காபூலுக்குச் சென்று திரும்ப வரவேண்டுமாயின் நூற்றுக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்யவேண்டியதிருந்தது. இப்பொழுது 50 ரூபாய்ச் செலவில் லாகூரிலிருந்து காபூல் சென்று திரும்பவந்துவிடலாம்.

நமக்கு அண்டையிலுள்ள அப்கானிஸ்தானம் சரித்திர சம்பந்தப்பட்டமட்டில் நமது இந்தியாவின் ஒரு அங்கமாக இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது அத்தேசம் மிகத்தீவிரமாக மாறிவருகிறது. இற்றைக்குப் பத்து வருஷத்திற்கு முன் அப்கானிஸ்தானம் நமக்கு திராக்ஷை, மாதுளை, சேப், பாதாம் முதலிய கனிவர்க்கங்களை சப்ளை செய்யும் நாடு என்பதாக நாம் எண்ணி இருந்தோம். இந்தியாவிற்கும் ருஷ்யாவிற்குமிடையில் தடையாக இருக்கிற எல்லைக்காவல்நாடு என்பதாக எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால், இன்று அப்கானிஸ்தானம் மிகவும் சுயேச்சையுள்ள ஒரு நாடாக இருக்கிறது. வியாபாரம் கைத்தொழில் ஆகியவைகளில் நாளுக்கு நாள் தீவிரமாக முன்னேறி வருகிறது என்பதை நாம் உணரவேண்டும்.

ஜிஸ்யாவரி

இந்தியாவிலிருந்த இஸ்லாமிய அரசாங்கம் முஸ்லிம் அல்லாத 'திம்மி' பிரஜைகளிடம் 'ஜிஸ்யா'வரி வாங்கிக் கொண்டிருந்ததைக் குறித்து பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்கள் அதிகம் எழுதி இருக்கின்றனர். இவர்களைப் பின்பற்றி ஹிந்து ஆசிரியர்களும்கூட தலை காலில்லாத சமாச்சாரங்களைப் பரவச் செய்து கொண்டிருக்கின்றனர். ஜிஸ்யாவரி வசூல் செய்தது நியாயமா? அல்லவா? என்பதைப்பற்றி இதற்கு முன் பலமுறை நமது சஞ்சிகையில் பிரசுரித்திருக்கிறோம். இப்பொழுது இது சம்மந்தமாகப் புதிய ரிக்கார்ட்டு ஒன்று நமக்கு கிடைத்துள்ளது. அதனைப் படித்துப் பார்க்கும்போது ஜிஸ்யாவரி முஸ்லிம் அல்லாதார் அனைவர்மீதும் அக்கிரமமாக விதிக்கப்பட்ட வரியல்லவென்பது விளங்கும். ஏழைகளுக்கு இவ்வரி விதிக்கப்படவில்லை. ஏழை வகுப்பினரான விவசாயிகள் இந்த வரி கொடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குட்பட்டிருக்கவில்லை என்பதும், அவர்கள் இவ்வரியைவிட்டு மன்னிக்கப்பட்டிருந்தார்கள் என்பதும் தெரியவருகிறது.

சில வருஷங்களுக்கு முன், டில்லி "ஜாமியா மில்லியா"வின் புத்த காலயத்திற்கு ஒரு கையேட்டுப் பிரதி கிடைத்தது. இப்புத்தகத்திற்கு "நிகார் நாமா" என்று பெயர். இதனை எழுதியவர்முன்ஷி லால் சந்த் என்னும் ஹிந்து. இவர் எந்தக் காலத்திலுள்ளவர்; இந்நூலை எப்பொழுது எழுதினர் என்பதைப்பற்றிய விவரமும் குறிப்புமுள்ள தேதி கிடைக்கவில்லையாயினும், இவர் ஔரங்கஜீப் அவர்கள் காலத்திலேனும் அல்லது அதற்குச் சில தினங்கள் பிந்தியேனும் இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. சர்க்கார் உத்தியோகத்திலிருக்கிற கிளார்க்குகள் சர்க்கார் உத்தரவுகளை எழுதுவதற்கு நமூனக் காண்பிப்பதுதான் இப்புத்தகத்தை எழுதியதன் முக்கிய நோக்கமாக இருக்கிறது. இப்புத்தகத்தில் விவசாயிகளுக்கு ஜிஸ்யாவரியை அரசர் மன்னித்துவிட்ட உத்

தரவு ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வுத் தரவுகள் எவ்வாறு எழுதப்பட்டு பிரஜைகளுக்கு அளிக்கப்பட்டு வந்தன என்பதும் இவ்வுத்தரவின் வாசகத்திலிருந்து தெரியவரும்.

அவ்வுத்தரவு வருமாறு :—

“ விவசாயிகளுக்கு ஜிஸ்யா வரி மன்னிக்கப் பட்டதற்குச் சர்டிபிகேட் ”

மேன்மை தங்கிய திவான் அவர்கள் க்ஷேமமாக இருக்கட்டும். தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் போதுமான அளவிற்கு காலக்ஷேபத்திற்குக் கொடுக்க முடியாத குறைந்த சம்பாத்தியமுள்ள விவசாயிகளிடம் ஷரீ அத்தின் சட்டப்படி ஜிஸ்யாவரி வசூல் செய்யக் கூடாது என்பதாக மாக்ஷிமை தங்கிய அரசருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதால், விவசாயத் தொழில் செய்துகொண்டிருக்கிற சாமான்ய ஏழைகளுக்கு அவர்களது ஜீவனத்திற்காக வித்து மாடு முதலியவைகளை உண்டு பண்ணிக் கொடுப்பது நமது கடமையாக இருப்பதுடன் அவர்களிடம் ஜிஸ்யாவரி வாங்குவது அவர்களது கஷ்டத்தையும் தரித்திரத்தையும் இன்னும் அதிகப்படுத்துவதாக இருக்கும். அவ்வகுப்பினரிடம் ஜிஸ்யா வாங்கக் கூடாது என்ற உத்தரவு ஷரீ அத்தின் சட்டப்படி பிறப்பிக்கப்பட்டால் அவர்கள் தங்களது தொழிலை நிம்மதியாகச் செய்துகொண்டிருப்பர்; இது தேசத்தின் க்ஷேமத்திற்கும் அமைதி சமாதானத்திற்கும் ஏற்றதாகவுமிருக்கும். போலீஸ் வீரர்களும் வரிவசூல்காரர்களும் ஜிஸ்யாவரியைவிட்டு விடுதலை அடைவார்கள். ஆகவே, இஸ்லாமிய ஷரீ அத்தின் சட்டப்படி விவசாயிகளிடம் ஜிஸ்யாவரி வாங்கி அவர்களைத் தொந்தரை செய்யக்கூடாது. கிராம முன்ஸீப்கள், கர்ணம் சட்டங் கூறுவோர், தொழிலாளர்கள், வக்கீல்கள், கக்ஷிக்காரர்கள், கஸ்பாக்களிலும் கிராமங்களிலுமுள்ள இதர ஜனங்கள், ஆகியவர்களிடம்தான் ஷரீ அத்தின் சட்டப்படி ஜிஸ்யாவரியை வசூல் செய்யவேண்டும் என்பதாக மாக்ஷிமை தங்கிய அரசர் உத்தரவு பிறப்பிக்கிறார். ஆகவே, இதற்காக ஒரு யாதாஸ்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதன் விபரம் இதனடியில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே, உங்களது ரெவின்யூ அதிகார எல்லைக்குள் இக்கட்டளையின்படி அமுல் நடத்த வேண்டும். விவசாயிகளிடம் ஜிஸ்யா வரியைக் கேட்டு அவர்களைத் தொந்தரை செய்யக் கூடாது. அவர்களுக்கு அவ்வரி மன்னிக்கப் பட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும்.

குறிப்பு:—ஜிஸ்யா வரி என்பது யுத்த வரியேயாகும். ராணுவ ஊழியம் செய்பவர்களுக்கு இவ்வரி விதிக்கப்படுவதில்லை. ராணுவ ஊழியம் செய்யாதவர்களுக்கு இவ்வரிவிதிக்கப் பட்டிருந்தது. முஸ்லிம்கள் கட்டாய ராணுவ சேவை செய்ய கடமைப்பட்டிருந்ததால் அவர்கள் இவ்வரியைக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லாமலிருந்தது. முஸ்லிம் அல்லாதார் ராணுவசேவை செய்ய வற்புறுத்தப் படவில்லையாதலால் அவர்களில் ராணுவ சேவை செய்யாமலிருந்தவர்களுக்கு இவ்வரி விதிக்கப்பட்டது. ராணுவ சேவை செய்பவர்களுக்கு இவ்வரி விதிக்கப் படவில்லை. இதனை இக்காலத்திலுள்ள வகுப்புவாதிகள், பொது ஜனங்களுக்கு முஸ்லிம் அரசர்கள்பால் துவேஷமுண்டாகும்படிச் செய்வதற்காக ஹிந்துக்கள் ஜிஸ்யாவரி கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தனர்; முஸ்லிம்களுக்கு ஜாதி அபிமானத்தால் இவ்வரியை விதிக்கவில்லை என்று துவேஷங் கற்பித்துவருகின்றனர். இவ்விதமானவரி ஜெர்மனி முதலிய மேனாடுகளிலும்கூட இது போழ்து விதிக்கப் பட்டிருக்கிறது. இவ்வுண்மை அரசருடைய மேற்கண்ட கட்டளையைப் படித்துப்பார்ப்போருக்கு நன்கு புலப்படும்.

சந்தா நேயர்கட்கு !

பினாங், சிங்கப்பூர், மலாய்நாடு, ஜாவா, சொச்சின்சைன் முதலிய இடங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள், நடைபெற்ற 1937-ம் வருடத்திற்குரிய சந்தா ரூபாயை தாமதமின்றி உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர் பார்க்கிறோம். ஒவ்வொரு சந்தாதாருக்கும் தனித்தனியே கடிதம் எழுதுவதாயின் வீண் செலவு அதிக மேற்படுவதால் இந்த அறிக்கை மூலம் எல்லோருக்கும் தெரியப்படுத்துகிறோம். ஆகவே, நண்பர்கள் தாமதியாது தங்கள் பாக்கிகளை அனுப்பி வைப்பார்களாக.

முஸ்லிம்களின் விழிப்பு

இஸ்லாமிய உலகிலிருந்து மனத்திற்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய செய்திகள் எட்டிக்கொண்டிருக்கின்றன. அல்லாஹுத ஆலாவின் உதவி 'உம்மத்தெமர்ஹூமா' வாகிய நமக்கு ஏற்படுவதாக அச்செய்திகளிலிருந்து தெரியவருகின்றன. ஈரான், இராக், அப்கானிஸ்தான்; துருக்கி ஆகிய நான்கு அரசாங்கங்களும் ஒரு உடன்படிக்கையின் மூலம் தங்களது சக்திகளை உறுதிப்படுத்திக் கொண்ட விபரம் இதற்கு முன் வந்தது. மகத்தான இவ்வுடன்படிக்கை ஈரான் தலைநகரான துஹ்ரான் ஸஹாதாபாதில் கையெழுத்துச் செய்யப்பட்டது. "இந்நான்கு அரசாங்கங்களும் தங்களுடைய உள்நாட்டு, வெளிநாட்டு வியவகாரங்களில் ஒன்றுக்கொன்று தலையிடமாட்டா; தங்களது எல்லைப்புறங்களை பாதிக்கும், பொதுவான ஒரு கஷ்டம் வந்தால் ஒன்றுக்கொன்று கலந்தாலோசனை செய்துகொள்ளும், அந்நிய அரசாங்கம் இந்நால்வரில் ஒருவரின்மீது படையெடுத்தால், படையெடுத்துவந்த அரசாங்கத்திற்கு இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட மற்றைய அரசாங்கங்கள் உதவி செய்யமாட்டா'' என்பன அவ்வுடன்படிக்கையின் முக்கிய நிபந்தனைகள்.

இதுவன்றி யமன், ஹிஜாஸ், இராக் ஆகிய மூன்று அரசாங்கங்களுக்குமிடையில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாக இப்பொழுது மற்றொரு செய்திகிடைத்திருக்கிறது. "இஸ்லாம், அரபிசமூகம், முஸ்லிம் சமூகத்தின் நன்மைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய எவ்வித உடன்படிக்கையையும் இவ்வரசாங்கங்கள்வேறு அந்நிய அரசாங்கங்களுடன் செய்துகொள்வதில்லை; தங்களுக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தங்களுக்குள்ளாகவே பஞ்சாயத்தின்மூலம் சமரசம் செய்துகொள்ளவேண்டும்; இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட அரசாங்கத்தில் ஒன்று வேறு அந்நிய அரசாங்கத்துடன் யுத்தம் செய்யவேண்டிய அவசியம் நேர்ந்தால் முதலாவதாக சமாதானம் செய்துவைக்க மற்றைய அரசாங்கங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்; இம்முயற்சி பயன் பெறவில்லையானால் இம்மூன்று அரசாங்கங்களும் ஒன்று சேர்ந்து அவ்வந்நிய அரசாங்கத்தை எதிர்க்கவேண்டும்; இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட மூன்று அரசாங்கங்களில் ஒன்றில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டால் மற்றைய அரசாங்கங்கள் தங்கள் பிரஜைகளை இதில் சம்மந்தப்பட விடாமல் தடுத்துக்கொள்ள வேண்டும்; கலகக்காரர்கள் அபயங் கோரி வந்தால் அவர்களை நிராயுதபாணிகளாக ஆக்கி, இக்குழப்பத்திற்கு ஆதரவு கிடைக்காத வேறு இடத்திற்கு அவர்களை அனுப்பிவிடவேண்டும்; ஆனால், இக்குழப்பம் ராஜீய புரட்சியின் அந்தஸ்துக்கு வந்துவிட்டால் இம்மூன்று அரசாங்கங்களும் ஒன்றுசேர்ந்து அதனை எதிர்க்கவேண்டும்; அந்நிய நாடுகளிலுள்ள இவ்வரசாங்கங்களின் ஒன்றின் ஸ்தானிகர் மற்றைய இரு அரசாங்கங்களின் உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாக்கவேண்டும்; ராணுவச் சீர்திருத்தம், அமைப்பு ஆகியவைகளில் இம்மூன்று அரசாங்கங்களும் ஒன்றுக்கொன்று தங்கள் தேசங்களிலுள்ள ராணுவ நிபுணர்களைக்கொண்டு உதவிபுரியவேண்டும்'' என்பது இவ்வுடன்படிக்கையின் சாராம்சம்.

அக்பா, முஆன் ஆகிய இரு முக்கிய பட்டிணங்களையும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விளையாட்டுக் கருவியாக இருக்க விடுவதில்லை என சுல்தான் இப்னுசுஊது முடிவு செய்திருப்பதாக மற்றொரு செய்தி கிடைத்திருக்கிறது. அக்பா, முஆன் ஆகிய இவ்விரு பட்டிணங்களும் தங்கள் கைவசமிருக்க வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் விரும்புகிறார்கள். இந்த எண்ணத்தின்பேரில் அவ்விரு பட்டிணங்களையும் ஹிஜாஸ் மாகாணத்திலிருந்து பிரித்து அமீர் அப்துல்லாவின் ராஜிய எல்லைக்குள் சேர்த்திருக்கின்றனர். இப்பொழுது, அமீர் அப்துல்லா பகைவர்களது சொல்கேட்டுக் கொண்டு, பரிசுத்த ஹிஜாஸின் எந்த பாகமும் தமக்குச் சொந்தம் என்று தாவாச் செய்யக் கூடாது என்பதாக சுல்தான் இப்னுசுஊது

அமீர் அப்துல்லாவிற்குத் தாக்கீது அனுப்ப ஆரம்பித்திருக்கிறார். அத்துடன் ஹிஜாஸ் மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட எந்தப் பாகத்தையேனும் விழுங்கிவிடலாம் என்ற எண்ணத்தின்பேரில் ஹிஜாஸுக்குள் இவ்வித மான வலையை வீசவேண்டாம் என்று ஆங்கிலேயருக்கும் சுல்தான் இப்னுசுஊது எச்சரிக்கை அனுப்பி இருக்கிறார்.

அங்கோராவில் ஒரு ராணுவ கான்பரன்ஸ் கூட்டப்பட்டதாகக் கிடைத்துள்ள சமாச்சாரம் நான்காவது செய்தி. இக்கான்பரன்சில் யுகோஸ்லேவியா, கிரீஸ், ருமேனியா, இராக், அப்கானிஸ்தான், ஈரான், ருஷ்யா ஆகிய தேசங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இக் கான்பரன்சில் துருக்கி வீரர்களின் ராணுவ ஒத்திகையும் நடந்தது. துருக்கி தனது ராணுவ அமைப்பை இவ்வரசாங்கங்களின்முன் காண்பித்து கீழ்நாட்டில் புதிய ராணுவ அமைப்புக்கு வழிகாட்டுகிறது என்பதுதான் இவ்வொத்திகையின் கருத்து. தவிரவும், கீழ்நாடுகளைப் பாதுகாப்பதற்காக புதிய சர்வதேச சங்கம் அமைக்கப்படவேண்டும் என, இவைகள் ஒற்றுமையாக முயலுகின்றன. இச்சங்கத்தில் ருஷ்யா, ருமேனியா, கிரீஸ், துருக்கி, ஈரான், அப்கானிஸ்தான் முதலிய அரசாங்கங்கள் அங்கம் வகிக்கும். மேனாட்டின் கொள்ளைக்காரர்களின் அக்கிரமிப்புகளுக்குச் சுடச்சுட பதில் கொடுக்கவேண்டும் என்பதுதான் இச்சங்க அமைப்பின் நோக்கம்.

இவ்விதமான செய்திகளிலிருந்து முஸ்லிம் சமூகம் மறுபடியும் உயிர் பெறுகின்றது என்பதும், உலகமக்களுக்கு மறுபடியும் வழிகாட்டவும், உலகிலேற்படும் மாறுதல்களில் பங்கெடுத்துக் கொள்ளவும் தயாராகின்றது என்பதும் வெளியாகின்றன. இஸ்லாத்தின் இப்புதிய எழுச்சியின் கொடி துருக்கியரின் கையிலிருக்கிறது. பிரிட்டன், இத்தாலி, பிரான்சு ஆகிய அரசாங்கங்கள் இஸ்லாமும் கீழ்நாடும் புதிய முறையில் பலப்பட்டு ஒழுங்கு செய்யப்படுவதைக்கண்டு பரபரப்படைந்துள்ளன. இந்தியாவின் முஸ்லிம்களும் தங்கள் நித்திரையிலிருந்து விழித்தெழுந்து, முஸ்லிம் உலகத்தின் இப்புதிய ஜீவியத்தில் சேர்ந்துக் கொள்வதற்கான முஸ்திப்புகளைச் செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால், இதில் தைரியமாக முன்னின்று உழைப்பவரைத்தான் இந்நாட்டில் காண்பது அரிதாக இருக்கிறது.

வந்தேமாதர கீதம்

வந்தேமாதர கீதத்தைப்பற்றிய பிரச்னை இப்பொழுது மிகவும் முக்கியமான பிரச்னையாக மாறிவிட்டது. இந்தக்கீதம் வெகு காலத்திற்கு முன்பே ஒரு வங்காளியினால் பாடப்பட்டதென்றாலும், வங்காளப் பிரிவினை நடந்தபோது ஹிந்துக்கள் அதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அது சமயம் இந்தக்கீதம் ஹிந்துக்களின் ஒவ்வொரு கூட்டங்களிலும் பாடப்பட்டன. இக்கீதமே சட்டவிரோதமானது என்றுகூட ஒரு சமயம் தடைசெய்யப்பட்டது. இதனையும் எதிர்த்து ஹிந்துக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆகவே, இதற்கு ஒரு சமயம் "வந்தேமாதர கிளர்ச்சி" என்றுங்கூடச் சிலர் கூறியதுண்டு. ஆனால், இக்கிளர்ச்சிகள் பெரும்பாலும் முஸ்லிம்களைத் துவேஷமாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டன. வங்காளத்தை இரண்டாகப் பிரிப்பதால் முஸ்லிம்களுக்கு அதிக நலம் ஏற்படுவதாகக் கருதியே அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும், முஸ்லிம்கள் மேனாட்டுக் கல்வியில் பிற்போக்காகவும் ஹிந்துக்கள் முன்னேற்றமடைந்தும் இருந்ததால், இக்கிளர்ச்சிக்குத் தேசிய அந்தஸ்தை ஹிந்துக்கள் ஏற்படுத்தி சில முஸ்லிம்களையும் கூடத் தங்கள் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளும்படிச் செய்துவிட்டனர். எனவே, இந்தக் கீதம் முஸ்லிம் எதிர்ப்புக்கீதம் என்று பொதுவாக முஸ்லிம்களால் கருதப்பட்டுவந்தது. ஆயினும், முஸ்லிம்கள் இந்நாட்டில் சிறுபான்மையினராகவும், கல்வி, செல்வம், கைத்தொழில், வர்த்தகம் முதலிய துறைகளில்

பின் தள்ளப்பட்டவர்களாகவும் இருந்ததால் இதனை அக்காலத்திலேயே எதிர்த்துக் கண்டிக்க அசக்தர்களாக இருந்தனர்.

இறுதியாக சென்ற பொதுத் தேர்தலில் சில மாகாணங்களில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்தது. அந்த மாகாணங்களில் காங்கிரஸ் காரர்கள் மந்திரிச் சபையை அமைத்தனர். காங்கிரஸ் ஆட்சி அம்மாகாணங்களில் நடைபெறுகின்றன. காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியாக வந்து ஆட்சிபுரிவதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனை கிடையாது. என்றாலும், அவர்கள் முஸ்லிம்களது மத உணர்ச்சியைப் புண்படுத்துவதுதான் ஆக்ஷேபிக்கத் தக்க விஷயம். சட்ட சபைக் கூட்டங்கள் நடைபெறும் காலத்தில், கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகுவதற்கு முன் தலைவர் "பிரார்த்தனை" என்று கூறுகிறார். காங்கிரஸ் மெம்பர்களில் ஒருவர் வங்காளிப் பாஷையிலுள்ள வந்தேமாதர கீதத்தைப் பாடுகிறார். அவர் பாடும்போது எல்லா அங்கத்தினர்களும் எழுந்து மௌனமாக நிற்க வேண்டும் என்பது காங்கிரஸ் காரர்களின் கட்டளை.

வந்தேமாதர கீதம் பிரார்த்தனையாகப் பாடப்படுவதற்கு ஏற்றதா? தேசத்திலுள்ள எல்லா மதத்தவருக்கும் பொதுப்படையான கீதமா? அக்கீதம் இந்தியாவின் பொதுப் பாஷையில் இயற்றப்பட்டு, அதில் கூறப்பட்டுள்ள விஷயம் யாவருக்கும் விளங்குகிறதா? சகல மதத்தினருக்கும் பொருத்தமானதா? என்ற விஷயங்களைப்பற்றி நாம் இனி கவனிக்க வேண்டும். வந்தேமாதரகீதம் வங்காளி பாஷையில் இயற்றப்பட்டிருப்பதால் வங்காளிப் பாஷையை அறிந்தவர்கள்தான் அதனை அறிய முடியும். சென்னை போன்ற மாகாணங்களில் அக்கீதத்தின் பொருளைத் தெரிந்துகொள்ள முடியாது. சென்னை மாகாணத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பாஷைகள் பேசுபவர்கள்தானிருக்கிறார்கள். இம்மாகாணத்திலுள்ள இப்பாஷைகளில் ஏதேனும் ஒன்றில் ஒரு கீதம் பாடப்பட்டால் அதனைச் சட்ட சபையிலுள்ள எல்லோரும் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அந்தப் பாஷையைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட சிலரேனும் புரிந்துகொள்ளமுடியும். இந்த மகாணத்திலுள்ள பாஷையல்லாத வேறு ஒரு மாகாணத்தின் பாஷையில் இயற்றப்பட்ட கீதத்தைப் பிரார்த்தனையாகப் பாடுவது என்பதை, தாய் பாஷை அபிமானம் உள்ள எவரும் அங்கீகரிக்க முடியாது; நடுநிலைமையுள்ள அறிவாளிகளும் ஆதரிக்கமாட்டார்கள். தவிர, வந்தே மாதர கீதத்தை தேசிய நோக்கத்தில் கவனிப்போம்: இந்தியாவின் தேசிய பாஷையாக இல்லாத வங்காளிபாஷையில் இயற்றப்பட்ட இக்கீதத்திற்கு பிறபாஷை பேசுபவர்கள் ஆதரவு கொடுக்கவேண்டிய அத்தியாவசியம் ஒன்றுமில்லை. மேலும், இந்தியாவிலுள்ள மாகாணங்களிற் சிலவற்றில் முஸ்லிம்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது. வேறு சில மாகாணங்களில் ஹிந்துக்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது. ஆகவே, ஹிந்துக்கள் தங்களுக்கு இஷ்டமான ஒரு கீதத்தைத் தங்களது மெஜாரிட்டி பலமுள்ள மாகாணத்தில் பிரார்த்தனையாக ஏற்படுத்துவதாயின், முஸ்லிம்கள் தங்களுக்கு மெஜாரிட்டி பலமுள்ள மாகாணத்தில் தங்களுக்கு இஷ்டமான வேறு ஒன்றைப் பிரார்த்தனையாக ஏற்படுத்துவதா? அவ்வாறு ஏற்படுத்துவதாயின் இந்தியாவில் சமூக ஒற்றுமை என்பது இல்லாமற்போகுமல்லவா? போகட்டும்! ஹிந்துக்களும், முஸ்லிம்களும்இல்லாத வேறு மதத்தவர்களுக்கு இந்தியாவில் எந்த மாகாணத்திலும் மெஜாரிட்டிபலம் இல்லை. ஆகவே, அவர்கள் எல்லா மாகாணங்களிலும் மெஜாரிட்டியினரது விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து அடிமைப் பட்டிருக்கிறதா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். முரண்பட்ட கொள்கைகளையுடைய மதத்தவர்கள் வாழும் இத்தேசத்தில் எல்லோருக்கும் பொதுவாகவுள்ள பிரார்த்தனையை ஏற்படுத்த வேண்டுமாயின் அந்தந்த மதங்களிலுள்ள மார்க்க அறிஞர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அக்கமிட்டியினிடம் இப்பிரச்னையை ஒப்புவித்தால், அவர்கள் எம்மத உணர்ச்சியையும் பாதிக்காத முறையில் ஒரு வழியைக் கண்டுபிடிக்க ஹேதுவாகும். இவ்விதமான நேர்முறையை விட்டுவிட்டு, விக்கிரக ஆராதனையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கீதத்தைப் பல மதத்தவருக்கும் பிரதிநிதித்துவமளிக்கப்பட்டிருக்கிற சட்ட சபையில் மெஜாரிட்டியாகவுள்ள மதத்தார் தங்கள் எதேச்சாதிகாரமாக, பிரார்த்தனை என்று கூறிக்கொண்டு பாடுவதும், அதனை மற்றைய வகுப்பார் பிரார்த்தனை என்பதாக அங்கீகரித்து எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமென்று கூறுவதும் தேசிய ஒற்றுமையை வளர்க்கும் செய்கையாக இல்லை.

இருக்கிற ஒற்றுமையையும் குலைப்பதாகவே இருக்கிறது. முஸ்லிம்கள் அதிலும் சென்னை சட்டசபையிலுள்ள ஒரு முஸ்லிம் அங்கத்தினர் இதனைக் குறித்து ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பிவிட்ட பிறகும் கூட ஹிந்துக்களில் மெஜாரிட்டி பலமுள்ள ஒரு கக்ஷியினர் அந்தக் கீதத்தையே மறுபடியும் பிரார்த்தனையாக ஏற்படுத்துவது என்றால் முஸ்லிம்களையும் பிற மதத்தவர்களையும் அவமதிப்பதாக கருதப்படும். முஸ்லிம்களது மத உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடிய கீதம்தான் என்பதாக ஹிந்துக்களில் பிரபல மேதாவியான டாக்டர் ரவீந்திரநாத் டாகூரின் சாந்திநிகேதனத்திலிருந்து வெளிவருகிற பத்திரிகையும் சாக்ஷியங் கூறுகிறது. காங்கிரஸ் தலைவரான ஜவாஹர்லால் நேரும் அதனை தேசீய கீதமல்லவென்று கூறுகிறார். இவ்வித நிலைமையில் முஸ்லிம்களது கண்ணைத் துடைப்பதற்காக அக்கீதத்தின் முதல் மூன்று சீர்களையும் பிரார்த்தனையாகப் பாடலாம் என்று பொறுப்பு வாய்ந்த ஒரு சங்கமும் கக்ஷியும் முடிவு செய்வதாயின் அக்கீதத்தின்பால் அவர்களுக்கு எத்துணை பிடிவாதமிருக்கிறதென்பதைக் காட்டுகிறது.

தங்களது உரிமைகளைப் பெரும்பான்மையினர் அலக்ஷியம் செய்துவிடுவார்களோ என்று சிறுபான்மையினர் சந்தேகித்துக் கொண்டும், தங்களது மதம், கலை, பாஷை முதலியவைகளுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டும் இருக்கிற இவ்வேளையில், பெரும்பான்மையினர் முஸ்லிம்களது மத உணர்ச்சியை இக்கீதத்தின் மூலமாகப் புண்படுத்துவது சிறுபான்மையினரது சந்தேகத்தை உறுதிப்படுத்தி, அவர்கள் கேட்கும் பாதுகாப்பை அவர்கள் அவசியம் அடைய வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. காங்கிரஸ் கக்ஷியினர் தங்களது கக்ஷி சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் என்றும், நிபந்தனையில்லாமல் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேரவேண்டும் என்றும், கூறி வருகிற இச்சமயத்தில் காங்கிரஸ் கக்ஷியினரது இந்நடத்தையானது முஸ்லிம்களுக்கு காங்கிரஸ் மீது ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையை உறுதிப்படுத்தி, உத்தரவாதம் இல்லாமல் காங்கிரஸில் சேரக்கூடாது என்பதையும், தங்களது உரிமைகளைப் பாதுகாக்கத் தங்களுக்குப் பிரத்தியேகமான ராஜீய ஸ்தாபனம் இருக்கவேண்டியது அவசியம் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. காங்கிரஸ் மீதும் ஹிந்துக்கள் மீதும் அவநம்பிக்கை கொண்டுள்ள முஸ்லிம்களுக்கு, வந்தேமாதர கீத விஷயத்தில் பொதுவாக ஹிந்துக்களும் சிறப்பாக காங்கிரஸ் வாதிகளும், காட்டியுள்ள மனப்பான்மை, மதம், கலை, பாஷை முதலியவைகளுக்குத்தக்க பாதுகாப்பு இல்லாமலும், ராஜீய விஷயங்களில் தக்க பங்கு இல்லாமலும், ஹிந்துக்களுடன் சேருவது தங்கள் சமூகத்தை நாசத்திற்குட் படுத்திக்கொள்வதேயாகும் என்பதை ருஜுப்பிப்பதாக இருக்கிறது. தவிரவும், முஸ்லிம்கள் தங்களது மதஉணர்ச்சி புண்படுவதாகக் கூறும்போது ஹிந்துக்களின் பத்திரிகைகள் மதஉணர்ச்சி புண்படவில்லை என்று விதண்டாவாதம் செய்து வருவதும் திருப்தி யளிக்கக்கூடியதாக இல்லை. ஆகவே, ஹிந்துக்களும், காங்கிரஸ்வாதிகளும், காங்கிரஸ் பத்திரிகைகளும் தங்களது போக்கை மாற்றிக் கொண்டு, சிறுபான்மையினருக்கு நம்பிக்கையுண்டாகும் முறையில் நடந்து கொள்வார்களாக. காங்கிரஸ் முஸ்லிம்கள் கண்மூடித்தனமாக காங்கிரஸ்காரர்கள் கூறுவதை நம்பித் தங்களது மத நம்பிக்கைக்குப் பங்கம் உண்டாக்குகிற பிரச்னைகளிலும்கூட தங்கள் சமூகத்தாரின் உணர்ச்சியை தங்கள் ஹிந்துத்தலைவர்களுக்கு வற்புறுத்திக் கூறாமலிருந்து முஸ்லிம்களது அபிமானத்தை இழந்துவிடாமலிருப்பார்களாக.

மேலும் நாம் இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அதாவது காங்கிரஸ் பிரசாரத்திலீடுபட்டிருக்கும் பா. தாவூத்ஷா சாஹிப், நாகையில் புரிந்த பிரசங்கங்களில், இந்த வந்தேமாதரக் கீதம் முஸ்லிம் கோட்பாட்டிற்கு விரோதமல்லவென்றும், வந்தேமாதரக் கீதத்தில் தாய்நாட்டின் வணக்கத்தைத்தவிர மற்ற முஸ்லிம்களை புண்படுத்தக்கூடிய விஷயம் ஒன்றுமில்லை என்றும் கூறி இருக்கிறார். இவரது இக்கூற்று மிக மிக விந்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. வந்தேமாதரக்கீதம் முஸ்லிம்களது மதஉணர்ச்சியைப் புண்படுத்தக்கூடிய கீதம் என்பதாக ஹிந்துக்களில் பிரபல மேதாவியான டாக்டர் ரவீந்திரநாத் டாகூரின் சாந்திநிகேதனத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை கூறுவதாக நம் தமிழ்நாட்டுப் பண்டிதர் ஸ்ரீமான் கலியாணசுந்திர முதலியாரால் நடத்தப்பட்டுவரும் நவசக்தி பத்திரிகை அறிவிக்கும்போது, நம் தமிழ்நாட்டு

மேதாவி முஸ்லிம் கோட்பாட்டிற்கு இஃது விரோதமல்லவென்று கூறுவது எவ்வளவு தூரம் அறியாமையாகும் என்பதை நம் முஸ்லிம்கள் நன்குணர்வார்களாக.

தவிர வந்தேமாதரக் கீதத்தில் தாய் நாட்டின் வணக்கத்தைத்தவிர மற்ற முஸ்லிம்களை புண்படுத்தக்கூடிய விஷயம் ஒன்றும் இல்லை என்று கூறுகிறார். இந்த தாய் நாட்டின் வணக்கம் அந்த கீதத்திலிருப்பதால்தான் முஸ்லிம்கள் அதனை ஆக்ஷேபிக்கின்றனர். இந்த வணக்கம்தான் முஸ்லிம்களை பாதாளத்தில் தள்ளக்கூடிய ஷிர்க்காக இருக்கிறது. இதனை உத்தேசித்துத்தான் முஸ்லிம்கள் இதனை ஆக்ஷேபிக்கின்றனர். இதுதான் முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தக்கூடியது. அவர்களது மனதைப் புண்படுத்த இதைத்தவிர வேறு எவ்விஷயம் வேண்டும்? ஆனால் இந்த வணக்கம் ஒருக்கால் அவருக்கு திருப்தி அளிக்கலாம். ஏனைய முஸ்லிம்கள் இதனைக் கண்டு சகித்திருப்பரா? முஸ்லிம்களைத் தாய்நாட்டை வணங்கத் தூண்டுவதைவிட படுமோசமான விஷயம் ஏதாகிலும் இருக்க முடியுமா? இதனை எந்த முஸ்லிமாகிலும் ஏற்றுக்கொள்வரா? ஆனால் பா. தா. வுக்கு இதெல்லாம் ஒரு சாமான்ய விஷயமாதலால் அவர் சன்மார்க்கத்திற்கு முற்ற முற்ற விரோதமான விஷயங்களை யெல்லாம் சாதாரண விஷயங்களாகக் கருதுகின்றார். இதனை உத்தியோக மோகவேட்டை என்றே பொதுமக்கள் கருதி அவருடைய இக்கூற்றுக்களை ஆதரிக்கமாட்டார்களென்றேகருதுகிறோம்.

முஸ்லிம்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்

(மௌலானா அஷ்ரப் அலி தானவீ அவர்களது பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது).

வேதக்காரர்களே! உங்களது மார்க்கத்தில் நீங்கள் கடப்புச் செய்யவேண்டாம், இன்னும் (உங்களுக்கு முன்) சென்றுபோன ஒரு கூட்டத்தாரின் இச்சைகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். இன்னும் அவர்கள் மிகுதமானவர்களை வழிதவறச் செய்துவிட்டார்கள். தாங்களும் நேரான வழியைவிட்டுத் தவறிவிட்டார்கள். (குர்ஆன்)

நல்லொழுக்க நன்னடக்கைகளுக்கும் சிலவரையரைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் கூடுதல் குறைத்தல் செய்வதால் அவைகளுக்குரிய கடமை நிறைவேறாது. உதாரணமாக, தொழுகையை எடுத்துக்கொள்வோம். ளுஹருடைய வேளையில் நான்கு 'ரக்கஅத்து' பர்ளு தொழுகவேண்டும். அதனை 5 ரக்கஅத்தாகத் தொழுதால் தொழுகை கூடுமா? அஸருடைய வேளையிற்தொழவேண்டிய பர்ளுத் தொழுகையை ளுஹருடைய வேளையிலேயே முற்கூட்டித் தொழுதுவிடலாமா? அப்படித் தொழுதால் அது பர்ளாக நிறைவேறமாட்டாது. இதுபோல மனிதர் மற்றைய மனிதர்களுடன் உறவாடுதல், பழகுதல் முதலிய காரியங்களிலும் சில ஒழுங்கு முறைகளிருக்கின்றன. அவைகளில் குறைவு செய்வது குற்றமாக இருப்பதுபோலவே அளவிற்கு மீறி கடப்புச் செய்வதும் குற்றமாகும். இவ்விஷயத்தைத்தான் மேலே சொல்லப்பட்ட ஆயத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. தற்காலத்திலுள்ள ஜனங்களது நடத்தைகளையும் போக்கையும் பழக்கத்தையும் கவனிக்கும்போது பெரும்பாலான ஜனங்கள் ஒழுக்கங்களை மார்க்க சம்மந்தமில்லாதவைகள் என்று கருதி இருப்பதாகத் தோன்றுகிறது. மனிதருக்கு மனிதர் செய்யவேண்டிய கடமைகளும், ஒழுக்கங்களும் மார்க்கத்தில் சம்மந்தப்பட்டவைகளேயாகும். இவ்வுண்மையை உணராத சிலர் ஒழுக்கம், ஆசாரம் முதலியவைகளில் தங்களிஷ்டம்போல் நடந்து கொள்கின்றனர். சிலர் இவைகளிற் குறைவு செய்வதைக் குற்றமாகக் கருதுகின்றனர். கூடுதல் செய்வ

தைப்பற்றிக் கவனிப்பதே இல்லை. மேலும் எல்லாக் காரியங்களிலும் கூடுதல் செய்வதையே அவர்கள் விரும்புகின்றனர். குறைவு செய்வது குற்றமாக இருப்பதுபோலக் கூடுதல் செய்வதும் குற்றம்தான். உதாரணமாக ஒரு நோயாளிக்கு டாக்டர் ஒரு மருந்தைக் கொடுக்கிறார். அந்த நோயாளி வெகுசீக்கிரத்தில் குணமடைய வேண்டும் என்று நினைத்து அதனை இரண்டு மடங்கு அதிகமாகப் புசித்தால் நோய் குணமடைவதற்குப் பதிலாகத் தீங்குதான் அதிகமாகும். பேதிக்குப் போவதற்காகக் கொடுக்கப்படும் மருந்துகளை இவ்விதமாக அதிகப்படுத்தி அருந்தினால் உயிருக்கே ஆபத்து வந்தாலும் வந்துவிடும். இதுபோலவே ஷரீஅத்தின் சட்டதிட்டங்களான ஆத்ம வைத்திய சிகிச்சையுமிருக்கிறது. இவைகளில் கூடுதல் குறைவுதல் செய்வதால் ஆத்ம விபாதிகளி லகப்பட்டவர்களுக்குக் கஷ்டமே ஏற்படும்.

ஸலாம் சொல்லுதல்

ஸலாம் சொல்லுதல் "சுன்னத்துகிபாயா." பலர் சேர்ந்திருக்கும்போது ஒருவர் சலாம் சொல்லிவிட்டால் சலாம் சொல்லவேண்டிய கடமை எல்லோருக்கும் நிறைவேறிவிடும். சலாம் சொல்வதில் அநேகம் தவறுகள் செய்யப்படுகின்றன. சலாம் சொல்வதற்குத் தகுந்த நேரமா? அல்லவா? என்பதை முதலாவது கவனிக்கவேண்டும். ஏனெனில், சில சந்தர்ப்பங்களில் சலாம் சொல்வது விலக்கப்பட்டிருக்கிறது. இறைவனை வணங்கிக்கொண்டிருக்கும் போதும், திருகுர்ஆனை ஓதிக்கொண்டிருக்கும் போதும், 'திக்ரு' செய்து கொண்டிருக்கும் போதும் ஸலாம்சொல்வதுகூடாது. ஏனெனில், அல்லாஹு தஆலாவினிடத்தில் அலுவலாக இருக்கிற ஒருவரை அதனைவிட்டகற்றித் தன்பால் திருப்புவதாக இருக்கிறது. இப்படிச் செய்பவர்மீது இறைவனது கோபமுண்டாகிறது என்பதாக ஒரு பெரியார் கூறியுள்ளார். எவ்வாறெனில், ஒரு உத்தியோகஸ்தருடன் பேசிக்கொண்டிருக்கிற ஒருவரிடம் வேறொருவர் குறுக்கிட்டுப் பேசினால் அவ்வதிகாரிக்கு அவமரியாதை செய்ததாக ஏற்படும். அதனால் அவர் கோபமும் அடைவார். ஆகவே, வணக்கம் முதலிய காரியங்களிலீடுபட்டவரிடம் சலாம் சொல்வது மட்டிலும் விலக்கப்பட்டில்லை, அவ்வணக்கத்தை இடைஞ்சல் செய்யக்கூடிய எல்லாக்காரியங்களுமே விலக்கப்பட்டிருக்கின்றன. சிலர் மரியாதை செய்வதாக நினைத்துக்கொண்டு செய்யுங்காரியம் அவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பதாக இருக்கிறது. கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய எந்தக் காரியமும் மரியாதையாகமாட்டாது. நமது பெரியார்களுக்குத் திருப்தியும் சந்தோஷமும் ஏற்படக் கூடிய காரியங்களைச் செய்வதுதான் அவர்களுக்கு மரியாதை செய்வதாகும்.

பெரியார்கள் செல்லும்போது அவர்களுக்குப் பின்னால் செல்லுதல், அவர்களது பாதரக்ஷை, கைத்தடி, முதலிய சாமான்களை, அப்பெரியார்களை எடுத்துக்கொள்ளவிடாமல் மற்றவர்கள் எடுத்துக்கொண்டுவருதல் முதலியவைகள் அப்பெரியார்களுக்குச் செய்யும் மரியாதை என்று கருதப்படுகின்றன. ஒரு முறை மௌலானா பத்தஹ் முஹம்மது சாகிப் மர்ஹூம் அவர்கள் மஸ்ஜிதிலிருந்து வெளியில் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் பாதரக்ஷைகளைத் தங்கள் கையில் தூக்கிக் கொண்டு வருவதை ஒருவர் பார்த்து அவரிடம் சென்று தம்மிடம் கொடுக்கும்படியும், தாம் கொண்டுவந்து தருவதாகவும் கூறி அதனைக் கேட்டார். மௌலானா அவர்கள் அவ்வாறு கொடுக்க மறுத்தார். அவர் அதனை எடுத்துக் கொண்டுதான் செல்லவேண்டும் என்று பிடிவாதம் செய்து, மௌலானா அவர்களது கையைப் பிடித்து அழுத்திக்கொண்டு வேகமாக அவைகளைப் பிடுங்கி எடுத்துக்கொண்டார். மௌலானா அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்களது பாதரக்ஷையை எடுத்து வருவதற்காக மௌலானா அவர்களைத் தொந்தரை செய்து பலவந்தமாக எடுத்துக் கொண்டது எவ்வளவு அவமரியாதையாகி விட்டது. இவ்விதமாகச் செய்வது அறியாமையாகும். இவைகள் அற்பமானவைகளுமல்ல; தொழுகை, நோன்பு முதலியவைகளைப்போல் இவைகள் பர்லான காரியங்களாக இல்லாவிட்டாலும் மரியாதை ஒழுக்கம் முதலியவைகள் மற்றைய மனிதர்களுக்குச் சம்மந்தப்பட்டவைகளாகும். ஆதலின், இவைகள் மனித உரிமைகளைச் சேர்ந்தவைகளாகும். எனவே, இவைகளில் கூடுதல் குறைவு செய்வதால் இறைவனது வேதனை உண்டாகுவதற்கும் இடமிருக்கிறது. தொழுகை, நோன்பு போன்றவைகள் ஆண்டவனுக்கும் அடியானுக்கும் சம்மந்தப்பட்டவைகளாதலால் அதில் கூடுதல் குறைவுதல் ஏற்பட்டால் வேதனை கிடைப்பது கொஞ்

சம் குறைவாகவும் இருக்கமுடியும். ஆனால், ஒழுக்கம், மரியாதை முதலியவைகள் மற்றைய மனிதர்களுக்குச் சம்மந்தப்பட்ட மனித உரிமைகளாதலின் இவைகளில் கூடுதல் குறைவுதல் ஏற்படுவது மிகக் கடுமையான வேதனையையே அளிக்கக்கூடும். ஏனெனில், அல்லாஹுதஆலா அடியார்கள்பால் அளவற்ற அன்புள்ளவனாதலின் அவர்களை அவன் மன்னித்துவிடுவான். ஆனால், மரியாதை முதலியவைகள் மனித உரிமையிலுள்ளவைகளாதலின் அவைகளை அதற்குச் சம்மந்தமுள்ளவர்கள் மன்னித்தால்தான் மன்னிக்கப்படும். ஆதலின், மனித உரிமைகளை நிறைவேற்றும் விஷயத்தில் அதிக ஜாக்கிரதையுடனிருந்துகொள்வது அவசியமாகும்.

சில ஜனங்களுக்கு இந்த ஒழுக்கங்களைக் கொஞ்சம் கடுமையான வார்த்தைகளால்தான் கற்பிக்க வேண்டியதிருக்கும். கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பதைச் சில ஜனங்கள் கெட்டதாகவும் பெருந் தன்மையற்றதாகவும் நினைக்கின்றனர். அகௌரவமான காரியங்களை அகற்றுவதில் கண்டிப்பாகவும் கடுமையாகவும் இருப்பது பெருந்தன்மைக்கு விரோதமன்று. ஒருமுறை ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம், "ரஸ்தாக்களில் விழுந்து கிடக்கும் பொருள்களைக் குறித்து வினவியபோது ஒரு ஆடு அதற்குரியவரில்லாமல் திரிவதைக் கண்டால் என்ன செய்வது?" என்று கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "அதனைப் பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும். பிடிக்காமல் விட்டுவிட்டால் வேறு யாரும் (திருடர்) அதனைப் பிடித்துக் கொள்வார்கள்; அல்லது ஓநாய் அடித்துக் கொண்டு போய்விடும்" என்றுகூறினார்கள். அப்பொழுது அவர் ஒட்டகையைக் குறித்துக்கேட்டார். உடனே நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அதிருப்தியுண்டாகி "ஒட்டகையினிடத்தில் உமக்கு என்ன காரியம்? அது மரத்து இலைகளைத்தின்று ஜலத்தை அருந்தித் தானாகத் தன் எஜமானனிடம் வந்துவிடும்" என்று வேகமாகப் பதில் கூறினார்கள். எனவே, ஒழுங்கீனமாக நடந்துகொள்ளுங் காரியங்களுக்காகக் கோபமடைவது குற்றமில்லை என்று இச்சம்பவத்திலிருந்து தெரியவருகிறது. காரணமில்லாமல் எவருக்கும் கஷ்டத்தை யுண்டாக்கக் கூடாது என்பது தான் நல்லொழுக்கத்தின் அசுமியமாகும்.

இறைவனுக்குவணக்கம்புரிந்துக்கொண்டிருப்பவருக்கு சலாம் சொல்லக்கூடாது என்பதைப் பற்றி மேலே கூறப்பட்டிருக்கிறது. இதுபோல பாவஞ்செய்து கொண்டிருப்பவருக்கும் சலாம் சொல்லக் கூடாது. ஏனெனில், சலாம்சொல்வது ஒருவகையில் கௌரவப்படுத்துவதாக இருப்பதால், பாபிகளைக் கௌரவப்படுத்தி மரியாதை செய்வது கூடாது. இவ்விதமாக ஒவ்வொரு காரியத்திற்கும் ஒருசட்டவிதி இருந்து வருகிறது. ஸலாம் சொல்வதற்குச் சட்டதிட்டங்கள் இருப்பதுபோல (கைகொடுப்பது) 'முஸாபஹா'ச் செய்தல், (கட்டிமினவுதல்) 'முஆனக்கா'ச் செய்தல் ஆகியவைகளுக்கும் குறிப்பிட்ட சட்டவிதிகளுண்டு. அச்சட்டங்களைமீறி முஸாபஹாச்செய்வதும், முஆனக்காச்செய்வதும் நியாயமல்ல. இந்தச் சட்டதிட்டங்களையும், மார்க்க விதிவிலக்குகளையும் மௌலவிமார்கள் விபரித்துக் கூறும்போது அவர்களிடம் தர்க்கவாதங்கள் செய்யலாகாது. இந்தச் சட்டத்தை யுண்டாக்கியதற்குக் காரணமென்ன? இதனை அனுமதித்துள்ள இரகசியமென்னவென்று கேட்கக்கூடாது. ஏனெனில், மார்க்கச் சட்டங்களை ஏற்படுத்தியதற்குரிய காரணங்களை விளங்கிக் கொள்வதற்கு அபார அறிவும் கல்வியும் இருக்கவேண்டிய தவசியமாகும். சட்டத்தைத் தெரிந்துகொள்வது மிகவும் சுலபமானது. ஆகவே, மார்க்கச் சட்டம் இன்னது என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி நடந்து கொள்ளுங்கள். அதற்குள்ள காரணங்களை எல்லா ஜனங்களும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. பொதுஜனங்களது நிலைமை இவ்விஷயத்தில் மிகவும் மோசமாக இருக்கிறது. உலமாக்களிடம் இவ்விஷயத்தில் எதிர்த்துத் தர்க்கஞ் செய்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்களுள்ளத்தில் உலமாக்களைப் பற்றிய மதிப்பு இல்லை. அவர்கள் உலமாக்களை மதிக்கும் பக்ஷத்தில் இவ்விதமாகத் தர்க்கவாதஞ் செய்யமாட்டார்கள். ஒரு இஞ்ஜினிர் ஒரு கட்டிடத்தை இடித்து விடும்படி உத்தரவு பிறப்பித்தால், அக்கட்டிடத்திலுள்ள குறைகளைப்பற்றி அவர் பூர்த்தியாக விபரித்துக் கூறுவிடினும், அவரது உத்தரவுப்படி கட்டிடம் இடிக்கப்பட்டுவிடுகிறது. இஞ்ஜினியருக்கு எட்டிய விஷயம் தமக்கு எட்டவில்லை என்று பெரிய அறிஞர்கள் நினைத்துக் கொள்கிறார்களே அன்றி, தங்களது அறிவுக்கு எட்டாததற்காக அக்கட்டளையை நிறைவேற்றும விருப்பதில்லை.

இன்னுஞ் சிலர் ஷரீஅத்திலுள்ள சில சட்டங்களை எடுத்துப் போடவேண்டும் என்றுங் கூறுகின்றனர். இவர்களது அபிப்பிராயங்களை ஏற்று ஷரீஅத்தின் சட்டங்களை எடுத்துப்போடும் அதிகாரம் ஒருவரிடமுமில்லை. அவ்வாறு எடுத்துப் போடுவதாக வைத்துக்கொள்வோம். இவ்விதம் செய்தால் இறுதியில் இஸ்லாமிய 'ஷரீஅத்' ஒழிந்து 'குப்று' ஏற்படுவதைத் தவிர வேறு ஒன்றும் இருக்கமாட்டாது. ஒரு வக்கிலிடம் சென்று சட்ட ஆலோசனை செய்தால் அவர் சட்டத்தைக் கூறுவார்; அதற்குரிய காரணத்தை அவர் கூறுவதில்லை. அவ்வாறு காரணங்களைக் கேட்டால் சட்டத்தை இயற்றுபவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று வக்கீல்கள் கூறிவிடுவர். ஒரு டாக்டர் அல்லது ஹக்கீம் அல்லது பண்டிதர் ஒரு நோய்க்கு ஒரு மருந்தைக் கொடுத்தால் அதனைக் குறித்து இவ்விதம் விதண்டாவாதம் செய்வதில்லை; அம்மருந்தை எவ்விதத் தங்குதடையுமில்லாமல் உட்கொண்டு விடுகிறார்கள். ஆனால், ஆத்ம வியாதிகளுக்குரிய ஔஷதங்களான ஷரீஅத்தின் சட்டதிட்டங்களை ஒப்புக்கொள்வதற்கு மட்டிலும் இத்தனை வாதங்கள். இதற்குக் காரணம் புறநோயைவிட்டுக் குணமடைய வேண்டுமென்ற விருப்பமிருந்ததால் ஹக்கீம்கள், டாக்டர்கள் முதலியவர்கள் கூறிய மருந்தைப்பற்றி விவாதிக்காமல் அதனை அருந்துகின்றனர். தங்களுக்குள் உள்ள அகவியாதிகளை நீக்கிக்கொள்ள இஷ்டமில்லாததால் ஆத்ம வியாதிகளைப் போக்கடிக்கும் டாக்டர்களான உலமாக்கள் ஷரீஅத்தின் சட்டம் என்ற ஔஷதத்தை ஊட்டும்போது அதனை அருந்த இஷ்டமில்லாமல் விவாதஞ்செய்கின்றனர். அல்லாஹுதஅலாவின் கட்டளைகளை இவர்கள் மதிக்கவில்லை. அவைகளை அவர்கள் விளையாட்டுப் பொருள்களாக மதித்திருக்கின்றனர்.

ஒருவருக்காக மற்றொருவரிடம் சிபாரிஷ் செய்வதை எடுத்துக்கொள்வோம். சிபாரிஷ் செய்பவர் 'இந்தக் காரியத்தை நீங்கள் செய்துதானாகவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகின்றனர். இவ்வாறு வற்புறுத்துவது கூடாது. "உங்களுக்கு யுக்தமாகத் தோன்றினால் இதைச் செய்யுங்கள்; உசிதமாகத் தோன்றாவிட்டால் வேண்டாம்" என்றுதான் கூறவேண்டும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பல காரியங்களைப்பற்றி சிபாரிஷ் செய்திருக்கிறார்கள். அந்த சிபாரிஷ் சில சமயங்களில் அங்கீகரிக்கப்படாமலும்இருந்திருக்கிறது. ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "புறைறா (றலி.) அவர்களிடம் அவரது கணவர் முஙீது (றலி.) அவர்களுக்காக சிபாரிஷ் செய்தார்கள். அதாவது அவருடன் செய்துள்ள நிக்காஹை முறித்துக் கொள்ளவேண்டாம் என்று கூறினார்கள். அப்பொழுது புறைறா (றலி.) நாயகம் (ஸல்.) அவர்களிடம் "தாங்கள் கட்டளையிடுகிறீர்களா? அல்லது சிபாரிஷ் செய்கிறீர்களா?" என்று கேட்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் சிபாரிஷ் செய்வதாகவே கூறினார்கள். அப்பொழுது அவர் அந்த சிபாரிஷை ஏற்றுக்கொள்ளாமல் தமது விவாக பந்தத்தை முறித்துக் கொண்டார். அதாவது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்கூட சிபாரிஷ்களை வற்புறுத்துவதில்லை, ஸஹாபிகள் இவ்விஷயத்தில் பூரண சுயேச்சை பெற்றிருந்தார்கள் என்பதுதான் இந்த ரிவாயத்திலிருந்து அறிந்து கொள்ளும் விஷயம். ஆனால், இக்காலத்தில் சிபாரிஷ் செய்பவர்கள் இதனைக் கடைப்பிடிப்பதில்லை.

விருந்துகளைப்பற்றிக் கவனிப்போம்: ஒருவருக்கு விருந்து சொன்னால் அவர் தமது மக்களையோ பிறரையோ தம்முடன் அழைத்துச்செல்கிறார்; விருந்து கொடுப்பவர் எல்லோருக்கும் போதுமான பதார்த்தங்களைத் தயார் செய்திருக்கிறாரா என்பதையுங்கூடக் கவனிப்பதில்லை. இப்படிச் செய்வது விருந்தளிப்பவரைக் கஷ்டத்திற்குள்ளாக்குவதாகும்.

முஸ்லிம் சகோதரர்கள் அழைத்தால் அதற்குப்பதில் சொல்லவேண்டும் என்பது ஒரு பொது விதியாகும். இவ்வாறு அழைப்பதற்கும் சில விதிகள் இருக்கின்றன. அவைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்கள் இமாம் அபூயூஸுபு (றஹ்) அவர்களுக்குக்கூறிய உபதேசங்களில் இதனைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, ஒருவர் உம்மைப் பின்னாலிருந்து அழைத்தால் அவ்வழைப்பை லக்ஷியம் செய்யாமல் நீர் போய்விட வேண்டும். ஏனெனில், ஆடுமாடுகளைக் கூப்பிடுவதுபோல் பின்னாலிருந்து உம்மைக் கூப்பிடுகிறார். இது உமக்கு அவமரியாதையாகும். இவ்வித நிலைமையில் பதில் சொல்லாமல் இருப்பது தற்பெருமையல்ல. கூப்பிடவேண்டிய ஒழுங்கைப் பேணாதவருக்கு இப்படிச் செய்வது ஒழுங்கைக் கற்பிப்பதாகவே இருக்கிறது. ஒருவரைக் கூப்பிட

வேண்டுமானுல் அவருக்கு முன்சென்று அவரை அழைக்கவேண்டும்.

ஒரு முஸ்லிம் நோய்வாய்ப்பாட்டால் அவரிடம் சென்று அவரை விசாரிப்பதும் மனித கடமைகளில் ஒன்று. இதற்கும் பல ஒழுங்குகள் இருக்கின்றன. இவ்வொழுங்கு முறைகளைப் பேணுவதும் அவசியமாகும். நோயாளிகளிடம் அவரது நோயைப்பற்றி விசாரிக்க அநேகர் போவதே இல்லை. சிலர் நோயாளியை விசாரிக்கச் சென்றாலும் அவர்களால் நோயாளிக்குச் சுகம் ஏற்படுவதற்குப் பதிலாகக் கஷ்டமே ஏற்படுகிறது. நோயாளியைப் பார்க்கச்செல்பவர்கள் அங்குசென்றுதான் ஊர்க்கதைகளையெல்லாம் பேசுகின்றனர். நோயாளிக்கு விதம் விதமான அவசியங்களேற்படும்; வந்த மனிதர்களைக் கவனித்து அவைகளைக் கூறாமல் அடக்கிக் கொண்டிருக்கக் கூடும். ஆனால், நோயாளிக்கு ஊழியஞ் செய்பவர்கள் எந்நேரமும் அவரண்டையிலிருக்கலாம். என்றாலும், நோயாளிக்கு ஊழியஞ்செய்வது எல்லோர் மீதும் கடமையில்லை. சில முக்கியமானவர்கள் தான் அவருக்கு ஊழியஞ் செய்வர். ஆயினும், நோயாளிக்குக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொருவர்மீதும் கடமையாகும்.

ஒருவர் மரித்துவிட்டால் அவரது பந்துக்களிடம் துக்கம் விசாரிக்கச் செல்வது மனித கடமைகளில் ஒன்று. இதற்கும் பல ஒழுங்கு முறைகளிருக்கின்றன. இறந்துபோனவரது ஜனாஸாவைத் தூக்குதல், அவருக்கு புண்ணியத்தை சேர்த்துவைப்பது முதலிய காரியங்களைச் செய்து இறந்துபோனவரின் பந்துக்களுக்கு ஆறுதல் தேறுதல் சொல்லவேண்டும். இவ்வாறு செய்யாமல் இறந்துபோனவரின் பொருள்களை அவரது வாரிசுகளைக் கேட்காமல் தர்மஞ் செய்தல் முதலியவைகள் கூடாது. அதிலும், இறந்துபோனவருக்கு வயதை அடையாத சிறு குழந்தைகள் வாரிசுகாரராக இருந்தால் அந்தச் சிறு பிள்ளைகள் அனுமதி கொடுத்தாலும் அவ்வனுமதி இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டப்படி செல்லாது. ஆதலின் ஜனாஸாவிற்காக புண்ணியத்தை எத்திவைக்க நாடுபவர்கள் அவரது பொருளைச் செலவு செய்யும் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

சுருங்கக் கூறுமிடத்து, பிறருக்கு எவ்வகையிலும் நியாயமில்லாத முறையில் நம்மால் கஷ்டநஷ்டம் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். இன்னும் அநேக விஷயங்களிருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒரே முறையில் கூறி முடித்துவிட முடியாது. நமூனாவிற்காகச் சில காரியங்களைப்பற்றிக் கூறப்பட்டது. மற்றவைகளை இதிலிருந்து யூகித்துக்கொள்ளவேண்டும்.

ஹஜ்ரத் முணைரதிப்னு நௌபல் (ரலி.) அவர்களின் தியாக வாழ்க்கை

(தென்காசி மௌலவி, மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலிஸாஹிப் வரைவது)

தலையங்கத்தில் குறிப்பிடப்பட்ட ஹஜ்ரத் முணைரதிப்னு நௌபல் (ரலி.) அவர்கள், மக்கமா நகரின் "பனூ கைஸ்" என்ற பிரபல குடும்பத்தில் பிறந்தவர்களாகவும் நபிகட் பெருமானார் முஹம்மது (ஸல்.) அவர்களுக்கு கி. பி. 611-ல் நபித்தனம் கிடைத்து, இஸ்லாத்தைப்பற்றி நாயகமவர்கள் இரகஸியமாக பிரசங்கிக்க ஆரம்பித்தபொழுதே இஸ்லாத்திற் சேர்ந்தவர்களுமாவர்.

இஸ்லாமிய பிரசாரமும், கஷ்டங்களை சகித்தலும்

ஹஜ்ரத் முணைரா (ரலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவும் சமயம் மிக்க பயங்கரமான நிகழ்ச்சிகள் தினேதினே நடைபெற்றுக் கொண்டிருந்தன. எங்கும் அறியாமையின் சட்டதிட்டங்களே தாண்டவமாடிக் கொண்டிருந்தன. விக்ரஹ வணக்கத்தை வெகு உற்சாகத்துடனும், பக்தியுடனும் நடத்தி

வந்தனர். விக்ரஹ வணக்கத்தைப்பற்றி இழி வாக ஒரு வார்த்தையையேனும் யாராவது கூறிவிடுவாராயின் உடனே அவரை நையப் புடைத்து தக்கவாறு புத்தி புகட்டிவிடுவர். இந்த கஷ்டமான காலத்தில்தான் ஹஜ்ரத் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவினர்கள்.

ஹஜ்ரத் முஸைரா (ரலி.) அவர்கள் இஸ்லாத் தைத் தழுவிய காலத்தைப்பற்றி ஹஜ்ரத் அலீ கர்ர மல்லாஹுவஜ்ஹஹு அவர்கள், "ஹஜ் ரத் முஸைரா (ரலி.) எப்பொழுது இஸ்லாத் தைத் தழுவினர்களோ அப்பொழுதே எண் ணத் தொலையாத கஷ்ட நஷ்டங்களை இவர்கள் சகிக்கவேண்டியதிருந்தது; இவர்களின் நண் பர்களும், பந்துக்களும், இவர்களுக்கு வித விதமான கஷ்டங்களை சதாவும் ஈவு இரக்க மின்றி கொடுத்துக் கொண்டிருந்தனர்; அவர் கள், எவ்வளவுதான் கஷ்டங்கொடுத்தபோதி லும் இவர்களின் பக்தியிலும், உறுதியிலும் ஓரணுவளவும் குறைவேற்படாது அதிகமாகிக் கொண்டேதான் இருந்தது" என்று புகழ்ந்து கூறிப்போந்துள்ளார்கள்.

ஓர்தினம் ஹஜ்ரத் அவர்களின்சிறிய தந்தை, ஹஜ்ரத் அவர்களை விளித்து "முஸைராகவே! நீவிர் அந்த முஹம்மதுவிடம் என்ன விஷ யங்களைப் பார்த்து அதனுல் அவர்மீது இத் துணை பிரீதிவைத்து இஸ்லாத்தைத்தழுவினீர்" என்று வினவியபொழுது, ஹஜ்ரத் அவர்கள் இதற்குப் பதிலாக பின்வருமாறு கூறினர்கள். அதாவது:—"முஹம்மது (ஸல்.) அவர்கள் எனது தலைவரும் பிரிய நண்பருமாகும். அவர் அல்லாஹ்வின் தூதர். அவரின் வாழ்க்கை உலக மடங்கலுக்கும் நேர்வழி யென்ற தீபமாக விருக்கின்றது. அவர், கிருபை, கொடை முதலிய வைகளின் சக்கரவர்த்தியாவர். ஆனல், ஆண்ட வனின் விரோதியை எதிர்ப்பதில் பெரிய சக்தி யுடைய மலையைப்போலிருக்கின்றார். எல்லா மக்கள் மீதும் அன்புடையவராகவும், அவர்கள் செய்யும் குற்றங்களை மன்னிப்பவராகவுமிருக் கின்றார். ஆனல், ஆண்டவனுக்கு மாற்றஞ் செய்பவர்களை எப்பொழுதும் மன்னிப்பதே இல்லை. இன்னுமவர், இரவுகளில் நபில் தொழு கைகள் தொழுதுகொண்டிருப்பார். ஏழைகள் மீதும், விதவைகள் மீதும் அளவற்ற அன் புடையவர். அவர் சமுகத்தில்வந்து, ஒரு வஸ்து வைக்கேட்டு இல்லையென்று திரும்பிப்போவார் யாருமிலர். அவரின் குணவொழுக்கங்கள் மீதும், பரிசுத்தத்தன்மைகள் மீதும் எந்த எதிரியுங்கூட ஒரு சிறிதும் சந்தேகங் கொண் டதேயில்லை. அவரின் இரத்தத்தின்மீது தாகங் கொண்ட பரமவிரோதிகளுங்கூட, அவரின் உண் மையான நடத்தை, மதபக்தி முதலியவைகளைப் பற்றி மனமார போற்றிப் புகழ்ந்துள்ளனர். ஆண்டவனுக்கு திருப்தியான செயலீடுபடுவதில் உலகின் எந்த வஸ்துவும் அவருக்கு எதிரியாக இருந்ததில்லை. அவர் வெளிரங்கமான ஆடம் பரங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலியவைகளை வெறுத்துவந்தார். அவரிடத்தில் உலகத்தின் எந்த உயர்ந்த வஸ்துவும் ஒரு வஸ்துவாகஇல்லை. அவர் அரசர்களுடனும் ஆண்டிகளுடனும் சமத் துவமாக நடந்துகொள்கிறார். அவர் உண்மை யாளர் என்பதற்கு இவைகளைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?" என்பதே. ஹஜ்ரத் அவர்களின் இப்பிரசங்கத்தைக் கேட் டுக்கொண்டிருந்த அவர்களின் சிறியதந்தை "சந்தேகமின்றி முஹம்மது, முஸைராவின் மீது சூன்யம் வைத்துவிட்டார்" என்று கூறிக் கொண்டே அவ்விடத்தைவிட்டகன்றார். இதற் குப்பின் இவர், ஹஜ்றத் அவர்களுக்கு ஈவு இரக்கமின்றி பலவித கஷ்டங்களைக்கொடுத்தார்.

ஹஜ்ரத் அவர்களின் பிரிய நண்பர்களுங்கூட இவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதற்காக கல்லா லடித்துக் காயப்படுத்தினர். ஆனல் இஸ்லாத் தின் எதிரிகள் எத்துணைக் கஷ்டப்படுத்திப் பார்த்தும் ஹஜ்ரத் அவர்களின் பக்தியில் ஓரணு வளவும் குறைவேற்படுவதைக் கண்டுகொள்ள வில்லை. இவ்வாறு இரக்கமின்றி தங்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்த இஸ்லாத்தின் எதிரிகளைப் பார்த்து, "ஏ எதிரிகளே! நீங்கள் எனக்கு எத்துணை துன்பம் கொடுக்க நாடினும் கொடுத்துக் கொள்ளலாம். ஆனல், யான் விக்ர ஹங்களுக்கு ஒருபோதும் சிரசைத் தாழ்த்த மாட்டேன்; ஆண்டவன் ஒருவனே; அவனையே நான் வணங்குவேன்; அவன் வானம், பூமி முதலியவைகளைப் படைத்ததுடன் அவை களுக்கு எஜமானனுகவுமிருக்கின்றான்; அவனே சகல ஜீவன்களுக்கும் ஆகாரத்தை அளிக்கின் றான்; அவனைத் தவிர வணக்கத்திற்கு பாத் திரவான் யாருமில்லை. மேலும், ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் அவ னின் தூதருமாவர். ஏழைகள், அனாதைகள் முதலியவர்களின் கஷ்டநஷ்டங்களில் தாமும் பங்கெடுத்துக்கொண்டு, தம்மாலியன்ற உதவி புரிவர். அவர், சத்தியம், நீதம் முதலியவை களின் பாதுகாவலராக இருக்கின்றார். நல்வழி,

நல்லொழுக்கம் முதலியவைகளின் பக்கம் அழைக்கின்ருர். இத்துணை மேன்மைவாய்ந்த வரையும், அவர் போதித்த சத்திய மார்க்கத்தையும் விட்டுவிட்டு, விக்ரஹங்களை எக்காலமும் வணங்கேன்" என்று கூறிக்கொண்டிருந்தனர்.

ஹஜ்ரத் முஸைரா (ரலி.) அவர்கள் தங்களின் உயர்ந்த ஜீவியத்தை இஸ்லாத்தைப் பிரசாரம் செய்வதற்காக தத்தம் செய்துவிட்டனர். இவர்கள், அரபிகளின் பிரபல்ய குடும்பங்களிடத்து அடிக்கடி சென்று, இஸ்லாத்தின் உயரிய போதனைகளையும், அதன் தத்துவங்களையும், அதைப் பின்பற்றுவதால் ஏற்படும் எண்ணற்ற பலாபலன்களையும் பிரசாரம் செய்து கொண்டிருப்பர். இதனுல், இவர்களுக்கு அளவற்ற இன்னல்களும் கஷ்டங்களுமேற்பட்டும் ஒரு விநாடிகூட இறைவனின் உதவி, நம்பிக்கை முதலியவைகளைவிட்டும் மனமுடைந்ததில்லை.

ஓர்சமயம் "துகைப்" என்ற வகுப்பின் தலைவரொருவர் ஹஜ்ரத் அவர்களை நோக்கி, "ஓ முஸைராவே! நும்மை இஸ்லாத்தின்பால் அன்புகொள்ளச் செய்து, அதைப் பின்பற்றும்படி தூண்டிய காரணமென்ன? என்று வினவ, அதற்கு ஹஜ்றத் அவர்கள், "ஏ தலைவரே! இஸ்லாமென்ற சூரியன் இவ்வுலகிற் பிரகாசிப்பதற்கு முன்னர், நாம் எவ்வளவு தூரம் கேவலத் தன்மையிலிருந்தோம் என்பதைத் தாங்களறிவீர்கள்; நம்முடைய குணவொழுக்கங்கள் மஹா கேவலத்தன்மையாயிருந்தன; நாம், நமக்கிடையில் காட்டு மிருகங்கள்போல அடிக்கடி வீண் சண்டைகள் செய்துகொண்டிருந்தோம்; நாம் செய்யும் கெட்ட விஷயங்களை மஹா மேன்மைவாய்ந்ததென்று பெருமையடித்துக்கொண்டிருந்தோம்; இந்த நிலைமையில் தான் இஸ்லாம் நமக்கு சத்தியத்தை பின்பற்றும்படி கட்டளையிட்டது; பரிசுத்த குணவொழுக்கங்களை கற்றுக்கொடுத்தது; நாம் விக்ரஹங்களை வணங்கிக்கொண்டிருந்தோம். இஸ்லாம், அல்லாஹ் ஒருவனையே வணங்கும்படி போதித்தது. அவனே இவ்வுலகமனைத்தினையும் படைத்ததுடன்; அதற்கு சொந்தக் காரனுகவுமிருக்கின்ருன். சகல வஸ்துக்களையும் அவனே சிருஷ்டித்தான். அவன் தனது அடியார்கள்மீது அளவற்ற அன்புள்ளவன். விக்ரஹங்களை வணங்குவதை விலக்கியிருக்கின்ருன். அவைகள் முற்றிலும் சுயசக்தியற்ற, தன்னுல் ஒன்றும் செய்யவோ, பேசவோ முடியாத வெறும் உலோகங்களாயிருக்கின்றன. இவ்வாரான உயர்ந்த போதனைகளை, இஸ்லாம், அரபி நாட்டின் ஒவ்வொரு பாகங்களிலும் பரப்பியது. இதனுல் விக்ரஹ ஆராதனை ஆட்டங்கண்டது. அநேகர் உண்மையை உணர்ந்து இஸ்லாத்தின்மீது காதல் கொண்டு தினேதினே இஸ்லாத்தைப் பின்பற்றி வருகின்றனர்." என்று வெகு உருக்கமாகப் பிரசங்கித்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் இப்பிரசங்கத்தை செவியுற்ற "பனீதுகைப்" வகுப்பிலுள்ள 15 பிரபலஸ்தர்கள் அந்நிமிஷமே இஸ்லாத்தைத் தழுவி, இஸ்லாத்திற்காகவும், இஸ்லாமிய பிரசாரத்திற்காகவும் தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்யவும் தயாராகிவிட்டனர்.

ஹஜ்ரத் முஸைரா (ரலி.) அவர்களின் பிரசாரத்தைப்பற்றி ஹஜ்ரத் அனஸ் (ரலி.) அவர்கள் பிரஸ்தாபிக்கும்போது, "ஹஜ்ரத் முஸைரா (ரலி.) அவர்கள் மனே உணர்ச்சியுடன் இஸ்லாத்தைப் பிரசாரஞ் செய்பக் கூடியவர்களாயிருந்தனர்; இவர்களின் பிரசங்கத்தின் ஒவ்வொரு வாக்கியங்களும் கல்நெஞ்சுடைய ஹிருதயங்களையும் கரையும்படி செய்துவிடும்; இவர்களின் சத்தியப் பிரசாரத்தின் பயனுக 70 பிரபலஸ்தர்கள் இஸ்லாத்தைத் தழுவி யிருக்கின்றனர்" என்று புகழ்ந்துகூறிப் போந்துள்ளார்கள்.

குண வொழுக்கங்கள்.

ஹஜ்ரத் அவர்கள், அழகிய நற்குணமுடையவர்களாகவும், இனிமையாகப் பேசும் வாக்கு வன்மை படைத்தவர்களாகவும், இரக்க சித்தமுடையவர்களாகவும், ஏழைகளின் உதவியாளராகவும், வியாதியஸ்தர்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல்கூறி சந்தோஷமாக இருக்கும்படி செய்பவராகவும் இருந்தார்கள். துணிச்சல், வீரம் முதலியவைகளில் உயர்ந்த அந்தஸ்தை எத்தியிருந்தார்கள். இவர்கள், யுத்த அரங்கத்தில் சென்று சதாவும் வெற்றிவீரராகவே தமது இல்லம் திரும்புவர். எதிரிகள் நிறைந்திருக்கும் கூட்டத்தினுள் சிறிதும் அச்சமின்றி புகுந்து போர்புரிந்து திரும்புவர். ஏதாவதொரு விஷயத்தில் நன்கு ஆழ்ந்து யோசித்து ஒருமுடிவுக்குவந்துவிடுவார்களேல் இறுதிவரை அதன்மீது உறுதியுடன் நின்றுகொண்டிருப்பர். தமது நோக்கம் நிறைவேற வேண்டுமென்று வைராக்கியம் வைத்தால்

அதில் தமது இன்னுயிரை லக்ஷியம் செய்வதில்லை.

நபிகள் நாயகத்தின்மீது பிரீதி.

ஹஜ்ரத் அவர்கள், உலக ரக்ஷகர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீது அளவற்ற பிரீதி கொண்டிருந்தனர். நாயகத்தின் திருசமூகத்தில் சற்றுநேரம் தாமதித்திருப்பதைத் தங்களுக்குப் பெரும் பாக்கியமெனக் கருதிக்கொண்டிருப்பர். நாயகத்திற்குப் பணிவிடை செய்வதை பெரும் புண்ணியமாகக் கருதுவர். தூய்மை, நல்லெண்ணம், நாயகத்தின் கட்டளைகளுக்கு அப்படியே பணிந்து நடப்பது முதலியவைகளில் தலைசிறந்து விளங்கினர். இறுதியாக நபிகள் நாயகத்தின் (ஸல்.) உண்மைத் தோழர்களில் சிறந்த ஒருவராக விளங்கினர்.

ஒரு விடுத்தம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், ஹஜ்ரத் முஸைரா (ரலி.) அவர்களுக்கு ஒரு போர்வை சன்மானமளித்தார்கள். இதை ஹஜ்ரத் அவர்கள் தங்களின் ஜீவியத்தில் கிடைத்த பெரும்பாக்கியமெனக் கருதி வெகு கண்ணியத்துடன் பந்தோபஸ்தாக வைத்திருந்தனர். அரப் நாட்டின் பெரிய தனவந்தரொருவர், ஓர் ஆயிரம் பவுன் தருவதாகவும் அதை தமக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். ஆனால், ஹஜ்ரத் அவர்கள் அதை யாருக்கும் கொடுக்க மறுத்துவிட்டனர். இதிலிருந்தே ஹஜ்ரத் அவர்கள் நாயகத்தின்மீது வைத்திருந்த பிரீதியை உணர்ந்து கொள்ளலாம்.

வணக்கத்தின்மீது பிரீதி.

ஹஜ்ரத் அவர்களுக்கு இளம்பிராயத்திலிருந்தே வணக்கத்தின்மீது அளவற்ற பிரீதி இருந்து வந்ததால் இவர்கள் பின்வரும் வழமைகளைத் தவறாது அனுஷ்டித்து வந்தனர். அதாவது:—சூரியன் உதயமாவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்பே படுக்கையை விட்டெழுந்துவிடுவர். பின் மலஜலபாதை முதலியவைகளை முடித்துவிட்டு ஸ்நானமும் செய்வர். பின் அளவற்ற பயபக்தியுடன் இறைவனுக்காக "தஹஜ்ஜுத்" என்ற நபில் தொழுகையை தொழுது முடிப்பர். இதன்பின் இறைவனை போற்றிக் கொண்டிருந்துவிட்டு 'பஜ்ரு' தொழுகையையும் ஜமாஅத்துடன் தொழுது முடிப்பர். அநேக சமயங்களில் இஷாவுக்குச் செய்த ஒளுவுடன் 'பஜ்ரு' தொழுகையை நிறைவேற்றுவர். சில நேரங்களில் இறைவன் மீது வைத்திருக்கும் அன்பினால் தன்னுணர்வற்றவராய்க் காணப்படுவர். இதே நிலையில் ஹஜ்ரத் அவர்களின் கண்களிலிருந்து தண்ணீர் ஏராளமாக ஓடிக்கொண்டிருக்கும். இதனால் கண்களுக்கு வியாதியும் ஏற்பட்டுவிட்டது. இன்னும் சில சமயங்களில் இரவின் பெரும் பாகத்தையும் ஸுஜூது (சாஷ்டாங்கம்) செய்வதிலேயே கழித்துவிடுவர்.

யுத்த முறை.

ஹஜ்ரத் அவர்கள் இஸ்லாத்திற்காக, உயிரையும் தத்தம் செய்யும் வீரராக இருந்தனர். இறைவன், இவர்களுக் கீந்திருந்த ஹிருதய உணர்ச்சியால், யுத்தம்செய்யும்படி கட்டளையிடப்பட்ட பின்னர் எல்லா யுத்தங்களிலும் ஈடுபட்டு உழைத்திருக்கின்றனர். எல்லா யுத்தங்களிலும் ஹஜ்ரத் அவர்களின் யுத்தமுறை, இதரர்களின் முறைகளைவிட்டும் பிரித்துக் காட்டக் கூடியதாக விருந்தது. யுத்த அரங்கத்திற்குச் சென்றால் எதிரிகளின் கூட்டங்களுக்கு மத்தியில் சிறிதும் அச்சமின்றிவெகு உற்சாகத்துடன் சென்று, எதிரிகளின் படைகளை சின்னா பின்னப்படுத்தி விரண்டோடும்படி செய்பவர்களாயிருந்தனர்.

பத்ரு யுத்தம்

பத்ரு என்பது மதீனா நகரிலிருந்து சுமார் 40 மைல்களுக்கப்பால் இருக்கும் ஓர் இடமாகும். இவ்விடத்தில்தான் இஸ்லாத்தின் புதல்வர்களுக்கும், இணைவைப்போர்களான காபிர்களுக்கும் ஓர் பலமான யுத்தம் நடைபெற்றது. இதனால் இவ்விடத்தில் நடந்த யுத்தத்திற்கு "பத்ரு யுத்தம்" என்று கூறப்படும். இது கி. பி. 622-ல் ஏற்பட்டதாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்கமா நகரைத் துறந்து மதீனமாநகர் சென்று பிரசாரம் செய்யத் தொடங்கியதால், இஸ்லாம் மென்மேலும் அபிவிருத்தியாகிக் கொண்டு வருவதை சகியாத அம்மக்கத்துக் குறைஷிக்காபிர்கள் சக்தி வாய்ந்த பெரும் பெரும் தலைவர்களைத் திரட்டிக்கொண்டு, முஹம்மதையும், (ஸல்.) அவர்களைப் பின்பற்றிய முஸ்லிம்களையும் எதிர்த்து, மதீனமா நகரை முற்றுகையிட்டு, எப்படியாவது இஸ்லாம் என்ற பூண்டை அடியோடு கெல்லி எரிந்து விடவேண்டுமென்று சபதஞ் செய்து கொண்டு, மக்கமாநகரைவிட்டுப் புறப்பட்டு 'பத்ரு' என்ற இடத்திற்கு வந்துவிட்டனர்.

இதனையறிந்த நாயகமவர்களும் தங்களுடனிருந்த 'முஹாஜிர்'கள், 'அன்ஸாரி'கள் முதலிய 313, இஸ்லாமிய பக்தர்களுடன் ஹிஜ்ரி 2 வது வருஷம், ரம்ஜான் மாதம் 12-ந் தேதி 'பத்ரு'வந்துசேர்ந்தனர். மறுநாள் யுத்தம் இருசாரர்களுக்கிடையேயும் பலமாக ஏற்பட்டது. இந்த நேரத்தில் ஹஜ்ரத் முனைரா (ரலி.) அவர்கள், மஹா ஆக்ரோஷமாக எதிரிகளின் படையினுள் புகுந்து மிக்கக் கடுமையாகப் போர் புரிந்தனர். இறுதியாக சில மணி நேரங்களுக்குள் எதிரிகளின் படைகளுக்கு மத்தியில் சென்று பலமாக தாக்கினர். இதனால் எதிரிகள் தாக்குபொருக்கமுடியாமல் பல திசைகளிலும் ஓடவாரம்பித்தனர்; அணி வகுப்புகள் குலைந்தன. இறுதியாக இவ்யுத்தத்தில்முஸ்லிம்கள்,இறைவனுதவியால் பூர்ண வெற்றிபெற்றனர். முஸ்லிம்களில் 14 பேர்கள் ஷஹாதத் (மரணம்) அடைந்தனர். எதிரிகளின்பெரும் பெரும் தலைவர்களில் எழுபது நபர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர். எழுபது நபர்கள் சிறைபட்டனர். எதிரிகளின் சக்திகள் முற்றிலும் போக்கடிக்கப்பட்டன.

கைதிகளுடன் நடந்துகொண்ட முறை

இந்த யுத்தம் முடிவடைந்து மதீனமாநகர் திரும்பிய பின்னர் நாயகம் (ஸல்.) 'அவர்கள், யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளில் நான்கு நான்குபேர்களை தகுதிவாய்ந்த ஒவ்வொரு ஸஹாபிகளிடமும் ஒப்புவித்து "இவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டார்கள். ஸஹாபாக்களும் இக்கைதிகளை ஏற்று, அவர்களுக்கு நல்ல ஆகாரங்களை அந்தந்த வேளைகளுக்குக் கொடுத்து வந்தனர். நல்ல ஆரோக்கியமாகத் தூங்க வைத்தனர். அவர்களுக்கு வேண்டும் சகல உதவிகளையும் தாராளமாகச் செய்து கொடுத்தனர். இந்தக் கைதிகளில் "ஹாரிதிப்னு உர்வா" என்பவருமிருந்தார். இவர் இஸ்லாத்தின் பரம விரோதியும், முஸ்லிம்களுக்குக் கஷ்டம் கொடுப்பதில் முக்கியாம்ஸம் வாய்ந்தவருமாவர். இவர் பின்வருமாறு கூறுகிறார். அதாவது :—"நான் முனைரா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டேன். அவர்கள் எனக்கு ஒவ்வொரு நாளும் நல்ல நல்ல ஆகாரங்களை அருந்தக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். என்னை நல்ல விதமாக (கவலையற்று) தூங்கச்செய்து கொண்டிருந்தார்கள். ஓர் தினம் நான் அவர்களை நோக்கி 'முனைராவே! நானே இஸ்லாத்தின் பகைவனும் முஸ்லிம்களுக்கு மஹா கஷ்டம் கொடுத்தவனுமாவன் என்பதைத் தாங்கள் அறியவில்லையோ? பின் எதற்காக எனக்கு இத்துணை தூரம் பணிவிடை செய்கிறீர்கள்?' என்றேன். ஹஜ்ரத் முனைரா (ரலி.) அவர்கள், 'எங்களது தலைவரான உலக ரக்ஷகர் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள், தங்களது கடும்பகைவர்களுடன்கூட நல்ல முறையில் நடந்துகொள்வார்கள்; எதிரிகள் எத்துணை தூரம் கடுமையாகத் திட்டினாலும் சிரித்த முகத்துடன் அதைக் கேட்பார்களே தவிர, எவ்வித பதிலும் கூறமாட்டார்கள். ஆதலால், அவர்கள் எனக்கு இட்ட கட்டளைப் படி நான் நடந்துக்கொள்கிறேன்; ஆனால் யுத்த அரங்கத்தில் நீர் இந்த வார்த்தைகளைக் கூறியிருப்பீராயின், உமக்கு எனது வாளைக் கொண்டு பதில் கொடுத்திருப்பேன்; இந்த நேரத்தில் நீர் என்னிடத்தில் கைதியாக ஒப்புவிக்கப் பட்டிருக்கிறீர்; அத்துடன் எனது விருந்தினராகவுமிருக்கின்றீர்; இதன் காரணமாக இப்பொழுது உம்மை யான் ஒன்றும் செய்வதற்கில்லை, என்று பதிற்கூறினார்கள்." இவைகளைக்கேட்ட 'ஹாரிதிப்னு உர்வா' என்பவர் உடனே முஸ்லிமாய் விட்டார்.

நாயகத்தின் பேத்தியை மண முடித்தல்.

நாயகத்தின் (ஸல்.) மகளாரான ஹஜ்ரத் ஜைனப் (ரலி.) அவர்களின் மகள் ஹஜ்ரத் உமாமா (ரலி) அவர்களை ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கள், ஹஜ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் மரணமடைந்த பின்னர் மண முடித்திருந்தார்கள். ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கள் ஷஹீதான பின், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி.) அவர்களின் அபிப்பிராயப்படி, ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்களை ஹிஜ்ரி 40ல், ஹஜ்ரத் முனைரா (ரலி.) அவர்கள் மணமுடித்துக் கொண்டார்கள். இவர்களது இம்மாதரசி மூலம் 'எஹ்யா' என்ற ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இதன் காரணமாக ஹஜ்ரத் முனைரா (ரலி.) அவர்கள் "எஹ்யாவின் பிதா" (அபூயஹ்யா) என்று ஜனங்களால் அழைக்கப்பட்டார்கள்.

மரணம்

கி. பி. 631-வது வருஷம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதியிலிருந்து ஒருவாரகாலம் நோய்

வாய்ப்பட்டிருந்து இறுதியாக ஏப்ரல் 17-ல் இவ்வுலகை நீத்து இறையடி சேர்ந்தார்கள். (இன்னுலில்லாஹி வ இன்னு இலைஹி ராஜிவூன்). இவர்களை மதீனு ஷரீபில் "ஜன்னத்துல்பகீஹ்" என்ற விடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. ரலியல்லாஹுதஆலா அன்ஹு.

இஸ்லாமிய பக்தர்களே!

மேற்வரைந்த ஹஜ்ரத் முனைரா (ரலி.) அவர்களின் ஜீவிய சரிதையின் முக்கிய பகுதிகளை நன்கு கவனித்திருப்பீர்கள். அவர்கள் ஆற்றிய தொண்டுகளையும், தமது ஜீவியத்தை இஸ்லாத்திற்காக தத்தம் செய்த தியாகத்தையும் உணர்ந்திருப்பீர்கள். ஆதலின், தாங்கள் இப்பொழுதாவது முன்வந்து இஸ்லாமிய தொண்டாற்ற முயற்சி செய்யலாகாதா? இஸ்லாமியப் பிரசாரம் செய்ய நாம் கடமைப்பட்டவர்களல்லவா? எதுவரை நாம் உண்மைத் தியாகிகளாகத் திகழவில்லையோ அதுவரை நாமும், நமது சமுகமும் முன்னேற்றமடையப் போவதில்லை. ஆதலால், பக்தர்களே! நுங்களின்கடமையைச் செய்ய முன்வாருங்கள்.

விழிமின்! எழுமின்! உழைமின்! வெற்றி பெறுமின்!

முஸ்லிம்களின் தன்மைகள்

ஒருகாலத்தில் நாம் உண்மை முஸ்லிம்களாக இருந்தோம். இப்பொழுது நாம் பெயரளவில்தான் முஸ்லிம்களாக இருக்கிறோம். முஸ்லிம் என்ற பதத்திற்குக் கீழ்ப்படிபவர் என்பது பொருள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, முஸ்லிம் என்பதற்கு அல்லாஹு தஆலாவிற்குக் கீழ்ப்படிபவர் என்பது கருத்து. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் போதித்தவைகளுக்கும், திருகுர்ஆனின் கட்டளைகளுக்கும் பூரணமாகக் கீழ்ப்படிந்து நடப்பவர்தான் தன்னைப் பரிபூர்ண முஸ்லிம் என்றழைத்துக்கொள்ள அருகதையுள்ளவர். முற்காலத்திலிருந்த முஸ்லிம்கள் பெயரளவில் முஸ்லிமாக இருக்காது உண்மை முஸ்லிம்களாகவே இருந்தனர். அல்லாஹுதஆலாவுக்குக் கீழ்ப்படிவதில் மிகவும் பரிபூர்ணமுடையவராக இருந்தனர். இதனுல்தான் அவர்கள்மீது இறைவனின் கிருபா கடாக்ஷம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. முற்காலத்திலிருந்த ஒரு தாழ்ந்த முஸ்லிம் வீரர் ஒரு அந்நிய தேசத்திற்குச் சென்றுல் அங்குள்ளவர்கள் அவரைக் கண்ணில்தான் வைத்துக் கொள்வார்கள்; தங்களது தலைவராகக் கருதுவார்கள்; சிற்சில இடங்களில் மந்திரிப்பதவிகளையும், அரசர் பதவியையுங்கூட அளித்திருக்கின்றனர். அந்த முஸ்லிம்களும் அவர்களது எண்ணத்திற்குமேல் அதிகமாக நல்லோர்களாகவும் ஈமான்தார்களாகவும் இருந்தார்கள். இப்பொழுது நம்மிலுள்ள முதியோர்களிடம், அவர்களது பாலப்பருவத்தில் முஸ்லிம்களது நிலைமை எவ்வாறிருந்ததென்று விசாரித்துப் பாருங்கள். இத்தேசத்திலுள்ள மிகவும் ஏழை கிராமவாசியான ஒரு முஸ்லிம் வேறு ஒரு கிராமத்திற்குச் சென்றுல் அங்குள்ள தலைவர் அவரை மிகவும் கௌரவித்து, அவருக்கு வேண்டிய உபசரணை செய்துகொண்டிருந்தார்; தன்னுலியன்ற ஊழியம் புரிவதில் எவ்விதக் குறைவும் செய்யமாட்டார் என்பதாக நம்முடைய அம்முதியோர்கள் கூறுவதை நாம் கேள்விப்படுகிறோம். கிராமத்தலைவரான பட்டேலின் நிலைமையே இவ்வாறிருந்தால் மற்றைய ஜனங்களது நிலைமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. உங்களிலுள்ள ஒரு பெரிய மனிதர் ஒரு கிராமத்திற்குச் சென்றுல் அவரை அங்கு விசாரிப்பவர் இருக்கமாட்டார். மரியாதைக் குறைவான காரியம்தான் நடைபெறும். அங்குள்ளவர்கள் முஸ்லிம்களை நல்ல வார்த்தைகளைக்கொண்டு ஞாபகம் செய்யமாட்டார்கள்.

இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டதற்குக் காரணமென்னவென்பதை நாம் யோசிக்க வேண்டும். இதுசம்மந்தமாக நாம் எத்துணை ஆராய்ச்சி செய்தாலும் இப்பொழுதுள்ள முஸ்லிம்களாகிய நாம், நமது மதத்தின் சட்டதிட்டப்படி நடப்பதில்லை என்பதுதான் வெளியாகும்.

நாம் உலகிற்கு, ஒற்றுமையாக இருக்கவேண்டிய பாடத்தைக் கற்பிக்கவந்தோம். ஆனல், நம்மில்தான் ஒற்றுமையின்மை மிகப்பலமாக இருக்கிறது. முற்காலத்திலுள்ளவர்கள் உயிரை வேண்டுமானுலும் தியாகம் செய்யத்தயாராக இருப்பார்கள். ஆனல், பொய் சொல்ல ஒரு போதும் துணியமாட்டார்கள். இக்காலத்தில் நாம்தான் பொய்யுரைப்பதில் நிபுணர்களாக இருக்கிறோம். இதனுல்தான் உலகில் நமது கௌரவம் போய்விட்டது. நமது சமூகத்தாரிடம் பொய்யும் ஏமாற்றுதலும் மிக அதிகமாகப் பரவி விட்டதால் இப்பொழுது ஒரு முஸ்லிம் உண்மையைக் கூறினுலும் அதனை நம்புவதற்கு முடிவதில்லை. முற்காலத்திலுள்ளவர்களிடமிருந்து கெட்ட காரியம் எதுவும் நிகழுவதில்லை. ஆனல், இக்காலத்திலுள்ளவர்களிடமிருந்து நல்லகாரியம் நிகழுவதில்லை என்று சொல்லத் தகுந்த அளவிற்கு நமது நிலைமை மாறுபட்டு விட்டது. இவைதாம் நமது வீழ்ச்சிக்குக் காரணங்கள்.

பெரியார்களே ! உதாரணத்திற்காக இரண்டொரு விஷயங்களைக் கவனியுங்கள். தாங்கள் பூஸ்திதியுள்ளவர்களாக இருந்து, அதனை மேல் பார்க்க ஒரு வேலைக்காரர் உங்களுக்குத் தேவையாக இருந்தால் கூடியவரை அந்நிய சமூகத்தினரையே வேலைக்கு அமர்த்திக்கொள்ள நீங்கள் முயலுகின்றீர்கள். இதர சமூகத்தினரில் உங்களுக்கு வேலைக்காரர் அகப்படவில்லை என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு வேலைக்காரர் அகப்படாவிட்டால்தான் உங்கள் சமூகத்தினரை வேலைக்கு அமர்த்திக்கொள்ள நினைக்கிறீர்கள். இதற்குக் காரணமென்ன ? நமது சமூகத்தினரிலுள்ள கூலிக்காரர்கள் பொய் வஞ்சகம், ஏமாற்றுதல் ஆகியவைகளில் எல்லை யைக்கடந்துவிட்டார்கள் ; அவர்களைக்கொண்டு நமது மனம் திருப்தியடையும்படியான வேலையைச்செய்து கொள்ளமுடியாது. இவ்வித நிலைமையில் நாம் இதர சமூகத்தினரைத்தான் தேடவேண்டியது அவசியமாக இருக்கிறது.

முற்காலத்திலிருந்த ஏழை முஸ்லிம் அந்நிய சமூகத்தினரிடம் சென்றல் அரசர், மந்திரி பதவிகளுக்குத் தகுதியுள்ளவரென அவர் கருதப்பட்டு வந்ததையும், நமது சகோதரர்களை நாம் வேலைக்கு வைத்துக்கொள்ள இப்பொழுது இஷ்டப்படாமலிருப்பதையும் சீர் தூக்கிப் பாருங்கள். இவ்வளவு தூரத்திற்கு நாம் வீழ்ச்சியடைந்தபின் நமது கூலிக்காரர்கள் அந்நிய சமூகத்தினரின் வேலையைச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா ? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆகவே, நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்வது அவசியம். பொய், வஞ்சகம், சூது, திருட்டு முதலிய அற்ப தன்மைகளை விட்டுவிடவேண்டும். உண்மை முஸ்லிமகளாக ஆகிவிடவேண்டும்.

முற்காலத்திலுள்ள முஸ்லிம்கள் ஈமான்தார்களாக இருந்தார்கள். ஆதலால்தான் அவர்கள் எப்பொழுதும் முன்னேற்ற மடைந்து கொண்டே இருந்தனர். பிறகு, அவர்களில் சில வஞ்சகர்களும் ஏமாற்றக்காரர்களும் தோன்றி அந்த ஈமான்தார்களிடம் நியாயமில்லாத முறையில் பிரயோஜன மடைந்தனர். தங்களை மிகவும் தந்திரக்காரர்களாகவும் கெட்டிக்காரர்களாகவும் நினைத்துக்கொண்டனர். இது நாளுக்கு நாள் பெருகி இப்பொழுது உலகில் கெட்ட நிலைமை தான் பரவி நிற்கிறது. நமது சமூகத்தின் நிலைமை முற்றிலும் நாசமாகிவிட்டது. ஒருவர் மற்றொருவரை நம்புவதில்லை. இக்காலத்தில் இவ்வுலகம் ஈமான்தார்களைத் தேடிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது எந்த அளவிற்கு ஒருவர் ஈமான்தாராக இருக்கிறரோ அந்த அளவிற்குத்தான் முன்னேற்றம் அடைய முடியும். நமது சமூகத்திலுள்ள கூலிக்காரர்கள் ஈமான்தார்களாக ஆகவேண்டும். இவர்கள்தான் நமது சமூகத்தில் பெரும்பான்மையினராக இருக்கிறர்கள். நம்மிலுள்ள பணக்காரர்களும் ஈமான்தாராக மாறவேண்டும். இவர்கள்தான் நம்மில் செல்வாக்குள்ளவர்கள். இவர்களைத்தான் நமது ஏழைகள் பின்பற்றுகிறர்கள்.

நமது ஏழைச்சகோதரர்கள் ஈமான்தார்களாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். நமது செல்வந்தர்கள் ஈமான்தாரிகளான அவர்களுக்குத் தக்ககூலியைக் கொடுப்பதும் அவசியமாகும். ஏழைகளைப் பெரியவர்கள் தொந்தரை செய்யக்கூடாது. தங்களது சொந்தப் பொரு

ளைப்போல் அவர்களது வெள்ளாண்மை விவசாயங்களைக் கவனிக்கவேண்டும். இந்தத் தன்மை நம்மிலுண்டாகிவிட்டால் நமது சமூகம் முன்னுக்கு வந்துவிடும். நம்மிதுள்ள நிலச்சுவான்தார்களும் செல்வந்தர்களும் கெட்டவர்களாகி விட்டதால்தான் நமக்கு வேலையில்லா திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏழை ஜனங்கள் பணக்காரர்களைப் பின்பற்றுகின்றனர். ஆதலின், நமது சமூகத்திலுள்ள பெரிய மனிதர்கள் எனப்படுபவர்கள் சீர்திருந்தி இஸ்லாம் மதச்சட்டத்தைக் கடைப்பிடித் தொழுக வாரம்பித்து விடுவார்களாயின் ஏழை ஜனங்களும் மிகச்சீக்கிரத்தில் சீர்திருந்தி விடுவார்கள்.

ஈதுல்பித்ர்

ரமலான் மாதம் முடிந்து ஷவ்வால் மாதம் முதல்தேதியன்று கொண்டாடப்படும் நாளைக்கு 'ஈதுல்பித்ர்' என்று பெயர். இந்த பெருநாளைக்கு மதத்துடன் நெறுங்கிய சம்பந்தமுண்டு. இந்தப் பெருநாளானது நோன்பின் மாதமாகிய ரமலான் மாதம் மிகச்சிறப்பாக நிறைவேறி விட்டதென்ற சந்தோஷங் கொண்டாடும் திருநாளாகும். ரமலான் மாதத்திலேயே குர்ஆன் ஷரீப் வெளியாக்கப் பெற்றும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் நபித்துவம் ஆரம்பிக்கப்பட்டும் இருப்பதனையே நோன்பு நோற்பதற்கு இம்மாதம் குறிப்பாக நிர்ணயிக்கப்பெற்றது. ஆகவே, ரமலான் மாதத்தின் மத்தியிலேயே இஸ்லாம் ஆரம்பமாயிருப்பதால் ஷவ்வால் மாதந்தான் இஸ்லாத்தின் முதல் மாதமாகிறது. இந்த ஈதுப்பெரு நாள் அந்த மாதத்தின் முதல் தேதியாகும். ஹிஜ்ரீ சகாப்தம் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் காலத்திலேயே நிர்ணயிக்கப்பட்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற வருஷத்தை முதல் வருஷமாக கணிக்கப்பட்டுளது. இந்த வருஷங்களுக்கு முதல் மாதம் 'முஹர்ரம்' ஆனுல் நமது இஸ்லாத்திற்கே முதலாவதாக உள்ள மாதம் ஷவ்வால் மாதம் என்பதை நண்பர்கள் கவனிக்கவேண்டும்.

எனவே, முஸ்லிம்களின் உயிரினும் சிறந்த இஸ்லாம் மதத்திற்கு எம்மாதம் முதல் மாதமாகவும் அம்மாதத்திற்கு எத்தினம் முதல் தேதியாகவும் இருக்கிறதோ அத்தகைய நாள் முஸ்லிம்களுக்கு எத்தனை சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய நாளாக இருக்கிறதென்பதை ஒவ்வொவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். இஃதன்றி ஒருமாதகாலம் வரை பகலில் உணவருந்தல், பானம் பருகுதல் முதலியவைகளைவிட்டு முற்றிலும் விலகியிருந்து இறைவன்றன் கட்டளைக்காக தங்கள் ஆசைகளையும் இச்சைகளையும் துறந்து, அல்லாஹ்வின் கட்டளையை பரிபூரணமாகச் செய்தவர்கட்கு இத்தினம் மிக ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இந்த ஆனந்தத்தையும் சந்தோஷத்தையும் கொண்டாடுவதுதான் பெரு நாளாகும். அன்று காலையில் நீராடி, நல் உடை அணிந்து நாயனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு பெருநாள் தொழுகையை நிறைவேற்றவேண்டும். முஸ்லிம்களின் பெருநாள் முழுதும் இந்த தொழுகை ஒன்றில்தான் இருக்கிறதென்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறியவேண்டும். மஸ்ஜிதிலோ, ஈதுகாஹ்விலோ பெருநாள் தொழுகை நிறைவேற்றப்பட்டு அங்குவந்து குழுமியுள்ள பந்து மித்திரர்களுடன் முஸாபஹா, (கைகொடுத்தல்) முஆனக்கா, (கட்டிமினவுதல்) ஆகியவைகளைச் செய்வதுடனே ஈதுப்பெருநாளின் சந்தோஷம் முற்று பெற்றுவிடும். எல்லா ஜனங்களும் எல்லோரின் வீட்டிற்கும் செல்லமுடியாது. நெருங்கிய பந்துமித்திரர்களின் வீட்டிற்கேகி தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ள முடியும். ஆதலால் எல்லோரும் ஓரிடத்தில் ஒன்று கூடவேண்டும்; ஒருவருக் கொருவர் நேசமுடன் உறவு கொண்டாடவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே யாவரும் ஜமாஅத்தாக இந்தத் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமென இஸ்லாம் ஏற்படுத்தியிருக்கிறது.

தொழுகை

ஜும்ஆத் தொழுகை வாஜிபானவர்கள்மீது ஈதுப்பெருநாள் தொழுகை வாஜிபாகும். ஆனால் தொழுகைக்குப்பின் குத்பா ஓதுவது சுன்னத்து. சூரியோதயத்திற்குப் பின் சற்றுநேரம் சென்றதிலிருந்து அதாவது சூரியோதயத்துக்கு ஒரு மணிக்குப்பின்னிருந்து நடுப்பகல் வரை இத்தொழுகையை நிறைவேற்றலாம். இதுதான் பெருநாள் தொழுகைக்கேற்ற நேரமாகும்.

இந்த ஈதுப் பெருநாளன்று தொழுகைக்கு முன் ஒன்று அல்லது 3 அல்லது 5 பேரீச்சம் பழங்களையேனும், வேறு மதுரமான வஸ்த்துக்களையேனும் புசிப்பது முஸ்தஹப்பு. அன்று பஜ்ருக்குப் பின் பல் துலக்கி, நீராடி, தன்னிடமுள்ளவைகளில் சுத்தமானதும் அழகானதுமான உடைகளை அணிந்து, வாசனை திரவியங்களைப் பூசி, 'தக்பீர்' சொல்லிக்கொண்டு, தொழுகை நிறைவேற்றப்படும் இடத்திற்கு நடந்து செல்வது முஸ்தஹப்பு. தொழுகைக்குப் போகும்போது ஒரு ரஸ்தா வழியாகச் சென்று வேறு வழியாகத் திரும்பி வருவது முஸ்தஹப்பு.

இமாமானவர், "இந்தப் பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக தொழவைக்கிறேன்" என்றும், அவரைத் துயர்ந்து தொழுவோர்கள் "இந்த இமாமைப் பின்தொடர்ந்து இந்தப்பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக தொழுகிறோம்" என்றும் நிர்ணயஞ்செய்து 'அல்லாஹ் அக்பர் என்று தக்பீர் கட்டவேண்டும். பின்பு தனா - 'சுப்ஹானகல்லாஹும்ம' ஓதிவிட்டு கையை உயர்த்தி தக்பீர் சொல்லி கையைத் தொங்க விடவேண்டும். இவ்விதமாக இரண்டு முறை தொங்கவிட்டு மூன்றாவது முறையில் தக்பீர் கட்டிக்கொள்ளவேண்டும். இவ்விதமாக மூன்று முறை தக்பீர் சொல்வதில் ஒவ்வொரு முறையின் இடைநேரத்தில் மூன்று 'தஸ்பீஹ்' நேரம் மௌனமாக இருக்கவேண்டும். இவ்வாறு தக்பீர் சொல்வதில் 'தக்பீர் தஹ்ரீமா'வையுஞ் சேர்த்து நான்கு முறை தக்பீர் சொல்ல வேண்டியதிருக்கிறது. பின்பு வழக்கமாக எல்லாத் தொழுகையிலும் ஓதுவதுபோல் அவூது பிஸ்மில்லாஹ், ஸூரத்துல் பாத்திஹா, கிரஅத் இவைகளை ஓதி ருகூஉ, ஸுஜூது செய்துவிட்டு இரண்டாவது ரக்கஅத்தை ஆரம்பித்து தொழவேண்டும். ஆனால், இரண்டாவது ரக்கஅத்தில் கிராஅத் ஓதி முடிந்தவுடன் முற்கூறிய பிரகாரம் மூன்றுமுறை தக்பீர் சொல்லி கையைத் தொங்கவிட வேண்டும். பின்பு நான்காம்முறை தக்பீர் சொலி 'ருகூஉ' செய்யவேண்டும். இவ்விதமாக இரண்டு ரக்கஅத்துகளையும் தொழுது முடித்து, சலாம் கொடுத்த பின் குத்பா ஓத வேண்டும்.

ஈதுத் தொழுகையில் இமாம் தக்பீர் சொன்னவுடன் ஒருவர் வந்து இமாமுடன் சேர்ந்தால் அவர் தானாகவே மூன்று முறை கையை உயர்த்தி தக்பீர் சொல்லிக்கொள்ளல் வேண்டும். இமாம் 'ருகூஉ' விலிருக்கும் போது வந்து சேர்ந்தால் 'ருகூஉ'வை விட்டு நீங்குவதற்கு முன் தக்பீர் சொல்லி அப்புறம் இமாமுடன் சேர்ந்துக் கொள்ளலாமென்று தோன்றினால் அவ்விதம் செய்யலாம். இன்றேல், இமாமுடன் 'ருகூஉ'வில் சேர்ந்துகொண்டு அதிலேயே மூன்று முறை தக்பீர் சொல்லவேண்டும். ஆனால் 'ருகூஉ'வில் தக்பீர் சொல்லும்போது கையை உயர்த்த வேண்டியதில்லை. 'ருகூஉ'வில் தக்பீர் சொல்லி முடிவதற்குள் இமாம் 'ருகூஉ'வை விட்டு நீங்கிவிட்டால் தக்பீர் சொல்வதையும்விட்டு விடவேண்டும். இமாம் ஒரு 'ரக்கஅத்'தொழுத பின்போ அல்லது இரண்டாவது ரக்க அத்தில் ஸுஜூது, அல்லது இருப்பிலிருக்கும்போதோ, ஒருவர் வந்து சேர்ந்தால் இமாம் ஸலாம் கொடுத்தபின் எழுந்து தவறினவைகளைத் தொடர்ந்து தொழவேண்டும். ஆனால் தவறினவைகளை நிறைவேற்றும்பொழுது கிரஅத்துக்குப் பின்புதான் தக்பீர் சொல்லவேண்டும். இமாமுடன் தொழுகை கிடைக்காவிடில் வேறு இடத்தில் ஜமாஅத்து நடந்தால் அங்கு சென்றேனும் இமாம் ஜமா அத்துடன் தொழுகையை நிறைவேற்றவேண்டும். இல்லாவிடில் நான்கு 'ரக்கஅத்' நபில் தொழவேண்டும்.

இத்தொழுகையை ஊரின் பலமஸ்ஜிதுகளிலும் தொழலாம். ஆனால் ஊர்வாசிகள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஈதுகாஹ் அல்லது பெரிய மஸ்ஜிதுமுதலியவைகளில் தொழுவது மேலாகும். (இஃது ஹனபிமத்ஹபுக்குரியது.)

பித்று ஸதக்கா

‘எந்த மனிதர் தன்மீது வாஜிபாக இருக்கும் ஸத்தகத்துல் பித்ரை எதுவரை கொடுக்கவில்லையோ அதுவரை அன்னவரின் நோன்பு அல்லாஹ்வின் சன்னிதானத்தில் உயர்த்தப் பட மாட்டா’தெ ன ஹதீது ஷரீபில் கூறப் பட்டிருப்பதால் நாம் அனைவரும் நம்மீது கடமையாகவுள்ள ‘பித்று ஸதக்கா’வை நிறைவேற்றி ஜெயம் பெற்றக் கூட்டத்தில் சேர அல்லாஹ் கிருபை பாலிப்பானாக.

ஸதக்கா கோடுக்கும்விதம்
(ஹனபி மத்ஹப் பிரகாரம்)

எவரிடம் தனது தேவைக்கதிகமாக $52\frac{1}{2}$ ரூபாய் சொத்தாவது அல்லது ரொக்க ரூபாயாவது இருக்குமாயின் அதன்பேரில் ஒரு வருஷம் செல்படியாகா விட்டாலும் சொத்து வளரும்படியானதாக இல்லாவிட்டாலும் அச்சொத்துடைய ஒவ்வொருவரும் பித்று ஸதக்காக் கொடுக்கவேண்டும்.

ஸதக்காக் கொடுப்பதால் ஏழைகளுக்கு உபகாரம் செய்வதாகும். மேலும் அன்றைய பெருநாளில் அவர்களும் மற்றவர்களுடன் சேர்ந்து சந்தோஷங்கொண்டாட ஹேதுவுண்டாகிறது. இதனாலேதான் ‘பித்று ஸதக்கா’வை தொழுகைக்குச் செல்லுமுன் கொடுப்பதும், ஸதக்காவை தானியமாகக் கொடுப்பதைப் பார்க்கினும் ஏழைகள் தங்களுக்கவசியமானவற்றை சுலபமாக வாங்கிக்கொள்வதற்கு ஹேதுவாய் அதன் கிரயத்தைக் கொடுப்பதும் உத்தமம் என்று கூறப்பட்டிருக்கிறது.

குடியிருக்க வீடு முதலிய அவசியத் தேவைக்குமேல் $52\frac{1}{2}$ ரூபாய் பெறுமானமுள்ள சொத்தை உடைய ஒவ்வொருவரும் தனக்காகவும், தன் சிசுவுக்காகவும் பித்று ஸதக்காக் கொடுப்பது வாஜிபு: ஆனால் பருவமடைந்த தன் மக்கள் முதலியவர்களுக்காக ‘பித்றுஸத்தக்கா’ கொடுக்க அவன் கடமைப் பட்டவனல்ல. ஆனால் மேல் கூறப்பட்டவர்களிடமும் ஸதக்கா கொடுப்பதற்கேற்பட்டுள்ள அளவு சொத்திருந்தால் அவர்கள் பிரத்தியேகமாக ஸதக்கா கொடுக்கவேண்டும். பருவமடையாத தன் குழந்தைக்கு பிரத்தியேகமான சொத்து இருக்குமாயின் அச்சொத்திலிருந்து அக்குழந்தைக்குரிய ‘பித்று ஸதக்கா’வைக் கொடுக்கவேண்டும். நோயாளி, பிரயாணி, கர்ப்ஸ்திரீ, மாதவிடாய் கொண்ட பெண் ஆகியோர் மேற்கண்ட காரணத்தால் நோன்பு நோற்காவிட்டாலும் மேற்கண்ட விகிதப்படி அவர்களிடம் சொத்திருந்தால் அவர்களும் ‘பித்று ஸதக்கா’ கொடுப்பது வாஜிபு.

ஈதுல் பித்று பெருநாளாகிய ஷவ்வால் மாதம் முதல் தேதி கிழக்கு வெளுத்தவுடன் பித்று ஸதக்காக் கொடுப்பது வாஜிபாக ஏற்படுகிறது. மணிக்கோதுமை, முந்திரிப்பழம், கோதுமை மாவு, ரவா, ஆகியவைகளை பித்று ஸதக்காவாகக் கொடுக்க விரும்பினால் அறை ‘ஸாஉ’ கொடுக்கவேண்டும். வார்க்கோதுமை, பேரீச்சம்பழம் இவைகளைக் கொடுப்பதாயின் ஒரு ‘ஸாஉ’கொடுக்கவேண்டும். இவைகளை அல்லாமல் தன்னிடமுள்ள நெல், சோளம், கம்பு, கேழ்வரகு முதலியதானியங்களைச்சதக்காவாகக் கொடுக்க விரும்பினால் முற்கூறப்பட்டுள்ள அளவுள்ள கோதுமை முதலியவைகளை கிரயம் போட்டு அக்கிரயத்திற்கேற்ற தானியத்தைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதைப் பார்க்கினும் கிரயத்தைப் பார்த்து பணமாகக் கொடுப்பது மேல்.

‘ஜகாத்’ பணத்தை யார்யாருக்கு கொடுக்கலாமோ அவர்களுக்கு பித்று ஸதக்காவும் கொடுக்கலாம். ஆனால் பந்துக்களில் பித்று ஸதக்காவை வாங்கயோக்கியதை உள்ளவர்கள் இருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதுதான் நலம். பலருடைய ஸதக்காவை ஒரு மிஸ்கீனுக்குக் கொடுக்கலாம். அவ்வாறே ஒருவருடைய ஸதக்காவைப் பலருக்குக் கொடுத்தாலும் பொருந்தும்.

அரை ‘ஸாஉ’ என்பது மதராஸ் படியில் ஒன்றே ஒரு வீசம் படியாகிறது. தற்போது மதராஸில் மணிக் கோதுமை படி ஒன்றுக்கு 0-5-0.

ஆக விற்கிறது. இதன்படி ஒன்றே ஒரு வீசம் படிக்கு சுமார் 0-5-3 ஆகிறது. ஆனல் பேணுதலுக்காக 0-5-6 கொடுத்து விடுவது மேல். இதுதான் ஒருவருடைய ஸதக்கத்துல் பித்ருகும். இவ்வாறே அந்தந்த ஊர்களில் கோதுமை விலையை அனுசரித்து அதன் கிரயத்தைக் கொடுக்கவேண்டும்.

(ஷாபிஈமத்ஹப் பிரகாரம்)

தனக்காகவும், தன் போஷணையிலிருக்கிற மனைவி மக்கள் முதலானவர்களுக்காகவும் தன் ஊரில் முக்கியமாக உபயோகப்பட்டு வருகிற தானியத்தில் 'பித்ருஸதக்கா' கொடுப்பது வாஜிபு. அதன் கிரயத்தைக்கொடுக்கக்கூடாது. இந்த 'பித்ரு' வாஜிபாவதற்கு நான்கு விஷயங்கள் பிரதானமாகும்:—1. முஸ்லிமாயிருத்தல் வேண்டும். தன்போஷணையி லுள்ளவர்களுக்கு பித்ரு கொடுக்கவேண்டுமாயின் அவர்களும் முஸ்லிமா யிருத்தல் வேண்டும். (2) தான் அடிமையாக இருக்கக்கூடாது. (3) பெருநாளிரவு வருவது ரமலானின் கடைசிநாள் சூரியாஸ்தமன மாகுதல். (4) கடனில்லாமலும் தன்பராமரிப்பிலுள்ள மனைவி மக்கள் ஆகியவர்களுக்குத் தேவையான இருப்பிடம், உடைமை, உடை முதலியவைகள், பெருநாளின் இரவு பகல்களில் தனக்கும் தன் குடும்பச் செலவுகளுக்கும் தேவையானவைகள் போக அதிகப்படியான சொத்துகள் இருக்கவேண்டும்.

இந்த ஷர்த்துகளில் ஏதேனுமொன்று இல்லா திருந்தால் ஸதக்கா வாஜிபாக மாட்டாது. ஆகவே, ஈதுப்பெரு நாளைக்கு முந்திய தினத்தில் சூரியாஸ்தமனமானதன் பிறகு பிறக்கும் குழந்தைகள், விவாகஞ் செய்துகொள்ளல்பட்ட மனைவி ஆகியவர்களுக்காக 'பித்ரு' கொடுக்கவேண்டியதில்லை. ஷை சூரியாஸ்தமனத்திற்குப்பின் பணக்காரரானலும், காபிர் இஸ்லாம் மதத்தைத் தழுவினலும் அவன் பேரில் ஸதக்கா வாஜிபு இல்லை. ஷை சூரியாஸ்தமனத்திற்குப்பின் ஸதக்கா கொடுக்காமலிருந்துவிட்டாலும், தன் மனைவியை விவாக விலக்குச் செய்து விட்டாலும், தன் சொத்து போய் விட்டாலும் அவன்மீது வாஜிபான பித்ரு அவனைவிட்டு நீங்காது. ரமலான் மாதத்தின் கடைசி நாளில் சூரியாஸ்தமனமானதிலிருந்து மறுநாள் சூரியாஸ்தமனமாகும் வரை பித்ரு கொடுக்கலாம். ஆனல் பெருநாள் தொழுகைக்கு முன் கொடுத்து விடுவது ஜுன்னத்து. இதற்குமேல் காரண மில்லாமல் பிற்படுத்துவது மக்ரூஹ், ஆனல் தனக்கு பந்துவானவர்களில் ஏழைகளை எதிர்பார்த்து அவர்களுக்காக பிற்படுத்துவது ஸுன்னத்து.

செய்தித் திரட்டு.

ஜித்தா மக்காரோடு.

ஜித்தாவிலிருந்து மக்காவிற்குச் செல்லும் ரஸ்தாவை ஒழுங்குபடுத்தித் திருத்தியமைக்கும் வேலையில் எகிப்திய இஞ்சினீர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜித்தாவில் ஜல சப்ளை செய்வதற்கான திட்டம் ஆலோசனையி லிருந்து வருகிறது. "மத்பயே அருபிய்யா" என்ற பெயரால் மக்காவில் புதிய அச்சாபீஸ் ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஹறமாகிய மஸ்ஜிது நபவியில் உபயோகிப்பதற்காக எகிப்து வக்புச் சொத்து இலாக்கா பத்து முஸல்லாக்களைத் தயார் செய்து மதீன முனவ்வராவிற்கு அனுப்பி இருக்கிறது.

20 லக்ஷம் சைனியங்கள்

ஈரான், துருக்கி, அப்கானிஸ்தான், இராக் ஆகிய நான்கு அரசாங்கங்களுக் கிடையில் ஒற்றுமை உடன்படிக்கை ஏற்பட்டபின், அவசிய மேற்படின் 20 லக்ஷம் பட்டாளங்களை இந்நான்கு அரசாங்கங்களும் யுத்தகளத்திற்கு அனுப்ப முடியும்.

ஒரு அரபியின் வீரத்தனம்

ஒரு இரகசிய சபையின் துப்பறிவதற்காக பாலஸ்தீனப் போலீஸ் படை ஐந்து அறபி

வாலிபர்களைக் கைதுசெய்து வைத்திருந்தது. அவர்களில் தல்அத்துதர்த்தூஸீ என்ற பெயருள்ள ஒரு வாலிபர் சமயம் பார்த்துப் போலிஸாரை விட்டுத்தப்பி மிக வேகமாக ஜனங்களை விலக்கிக்கொண்டு ஒரு உயர்ந்த கட்டிடத்தின் மீதேறி அங்கிருந்து கீழே குதித்துத் தமது உயிரை மாய்த்துக் கொண்டார். இவர் மூலமாக எந்த இரகசியமும் வெளியாகக் கூடாது என்பது இவ்வறபி வாலிபரின் நோக்கம். இதற்காகவே இவ்விதம் தற்கொலை செய்து கொண்டார்போலும்.

மூக்கண்ணன்

தென்சீனத்தில் மூன்று கண்களுள்ள ஒருவரிருக்கிறார். இரண்டு கண்கள் வழக்கமாக இருக்கவேண்டிய இடத்தில் இருக்கின்றன. மூன்றாவது கண் நெற்றியின் நடுவிலிருக்கிறது. இக் கண்ணிலிருந்து இராக் காலங்களில் பிரகாசங்கள் கிளம்புகின்றன. அப் பிரகாசத்தின் மூலம் விளக்கில்லாமல் இராக்காலங்களில்அவர் மிகச் சுலபமாக உலாவித் திரியலாம்.

அமெரிக்காவில் கொள்ளை

அமெரிக்காவிலுள்ள போக்கிரிகள் தங்கள் சகோதரர்களைக் கொலைசெய்வதற்குப் புது மாதிரியான விஷவாயுவை உபயோகிக்கின்றனர். ஒருவரைக் கொள்ளையடிக்கவேண்டும் என்று அவர்கள் கருதினால் அவரது ஸ்தூலத்தில் எங்கேனும் விஷங்கலந்த ஊசியால் குத்தி விடுகிறார்கள். அம்மனிதர் அந்த இடத்திலேயே உயிர்துறந்து விடுகிறார். நியூயார்க் நகரில் இவ்விதமாக நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அல்லாஹ்வின் தத்துவம்

மூன்று அடி உயரமும் எட்டு அடி கனமுமுள்ள ஒருவகை நூதன பறவை ஷாங்கையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் கால்களில் நான்கு விரல்களிருக்கின்றன. ராஜாளிக்குள்ளதைப் போன்ற மூக்கும், குரங்குத்தலை போன்ற தலையும் அப்பறவைக்கிருக்கிறது.

இத்தாலியிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட நோயாளியான ஒரு ஸ்திரீ டாக்டர்களைத் திணறவைத்துக் கொண்டிருக்கிறாள். ஆந்த ஸ்திரீயின் மார்பு இராக்காலத்தில் திடீரெனப் பிரகாசிக்க ஆரம்பிக்கின்றன. மாரிலிருந்து நீல நிறமான கிரணங்கள் வெளிப்படுகின்றன. இப்பிரகாசத்தினால் அந்த ஸ்திரியின் முகம் முழுவதும் நன்கு பிரகாசமாக இருக்கிறது.

அமெரிக்காவில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு எவ்வித நோயுமில்லை. ஆனால், வரவர அக்குழந்தைக்கு வயிறு பெருத்துக்கொண்டே இருந்தது. அக்குழந்தைக்கு 13 மாத வயது சென்றபின் எக்ஸ்ரேயின் மூலமாக அவளது வயிற்றைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அவள் கர்ப்பவதியாக இருப்பது தெரியவந்தது. உடனே ஆப்பரேஷன் செய்து ஒரு ஆண் குழந்தை வெளியிலெடுக்கப்பட்டது. அக்குழந்தை ஏழு இஞ்சி உயரமிருந்தது. அதன் மூளையின் ஒரு பாகத்தில் கை, கால்களின் விரல்களும், சிறு சிறு நகங்களுமிருக்கின்றன. இவ்வற்புதப் பிறவியைக் குறித்து டாக்டர்கள் பலவித அபிப்பிராயங்கள் கூறுகின்றனர்.

பாலஸ்தீனத்தில் மஹ்தீ

பாலஸ்தீனத்திலுள்ள குர்க்கூக் என்னும் கிராமத்தைச்சேர்ந்த ஒருவர்தாம் மஹ்தீ என்பதாக தாவாச்செய்து கொண்டிருந்ததுடன், பாலஸ்தீனத்திலுள்ள ஜனங்கள் தம்மீது ஈமான் கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறு ஈமான் கொண்டால் அவர்களுக்கு எஹூதிகளைவிட்டு விடுதலை அளிக்கத் தம்மால் முடியும் என்றும் கூறிக்கொண்டிருந்தார். குர்க்கூக் முனிசிபாலிட்டி அம்மனிதரை டாக்டரிடம் வைத்திய பரிசோதனைக்கனுப்பி அவரைப் பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டது. இச் சம்பவத்தை ஒருவர் குறிப்பிட்டுவிட்டு மிர்ஜா சாகிப் தம்மை மஹ்தீ என்று கூறிக்கொண்டிருந்த காலத்தில் காதியானில் முனிசிபாலிட்டி இருக்கவில்லை என்பதாகக் கூறினர்.

டார்டனல்ஸில் பீரங்கிகள்

ஸ்பெய்ன், சீனா, ஜப்பான் யுத்தங்களை உத்தேசித்து துருக்கி அரசாங்கம் டார்டனல்ஸ் ஜலசந்தியில் புதிதாக நான்கு பீரங்கிகளை ஏற்படுத்தி இருப்பதுடன் பல ஆயிரக் கணக்கான காவற்படைகளையும் அதிகப்படுத்தி இருக்கிறது. நீர்மூழ்கிக் கப்பல்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி, வேவு பார்ப்பதற்காகச் சில ஆகாய விமானங்களையும் ஏற்படுத்தி இருக்கிறது.

இஸ்லாத்தில் சேர்ந்தனர்

மத்திய மாகாணத்திலுள்ள முனிசிபாலிட்டிகள் பலவற்றில் ஜாதிஹிந்துக்களும் ஹரிஜனங்

208353

களும் பொதுத்தொகுதியில் போட்டி அபேட்சகராக நின்றனர். ஆனால், ஒரு ஹரிஜனர் கூட ஹிந்துக்களை ஜெயித்து முனிசிபல் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படவில்லை. ஹரிஜனங்களின் ஒரு கமிட்டியினர் காந்திஜியிடம் இதனைக்குறித்து முறையிடுவதற்காக அவரது இருப்பிடத்தில் சத்தியாக்கிரகஞ் செய்தனர். இதனைக்குறித்து காந்திஜீ கொஞ்சமும் அக்கரை காண்பித்துக் கொள்ளவில்லை. ஆதலால், காந்தியின் இப்போக்கைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக 72 ஹரிஜனங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டார்கள் என்று செய்திகள் கிடைத்திருக்கின்றன.

மங்கோலியா முஸ்லிம்கள்

ஒரு லக்ஷம் மங்கோலிய முஸ்லிம்கள் யுத்த சன்னத்தராகி மங்கோலியாவிலிருந்து சீனாவிற்கு வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு தளகர்த்தராக இருப்பவரும் ஜெனரல் அலீ நாகுப் என்னும் ஒரு மங்கோலிய முஸ்லிமே யாவர். இவர்களிடம் ருஷியாவின் பீரங்கிகளும், குண்டு போடும் வெகு ஆகாய விமானங்களும், ஆகாய விமானங்களை வீழ்த்தும் துப்பாக்கிகளுமிருக்கின்றன. இப்போர் வீரர்களுக்கு சீன அரசாங்கம் சம்பளம் கொடுக்கமாட்டாது, உணவுப் பொருள்களை மட்டிலும்தான் கொடுக்கும். இப்படை ஜப்பானியரை எதிர்த்து யுத்தம்செய்யும்.

ஜிஸ்யா வரி

ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹெர் ஹிட்லர் இஸ்லாமிய ஜிஸ்யாவரியைப் போல் புதிதாக ஒரு வரியை ஏற்படுத்தி இருக்கிறார். யுத்தத்தில் கலந்துகொண்டு உழைக்க முடியாத வாலிபர்கள் இந்த வரியைக் கொடுக்கவேண்டும். இவ்வரியைக் கொடுக்காமலிருக்கும் வாலிபர்களுக்கு இஸ்லாம் மதம் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளையே ஹெர்ஹிட்லரும் ஏற்படுத்தியுள்ளார்.

திமிஷ்கு மதீனா ரயில்வே

திமிஷ்கிலிருந்து மதீனாவிற்குச் சென்றுக் கொண்டிருந்த ரயில் பாதையை மராமத்துச் செய்து அப்பாதையில் மறுபடியும் வண்டித் தொடர்களை ஓடச்செய்யவேண்டும் என்ற ஆலோசனையை ஷாம் பிரதம மந்திரியும், ஹிஜாஸ் அரசர் சுல்தான் இப்னு சுஊதும் ஆதரிக்கின்றனர். ஜித்தாவிலிருந்து மக்கா, மதீனா ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் ரயில்பாதை போட்டுவிட வேண்டும் என்ற விருப்பமும், சுல்தான் இப்னு சுஊதிற்கு இருந்துவருகிறது.

திருகுர்ஆனின் முஅஜிஸா

அம்மான் பிரதேசத்திலுள்ள மலைகளில் கௌன்ட்போன்புரூக் எனபவரது தலைமையில் ஒரு கூட்டத்தினர் ஆராய்ச்சி வேலைசெய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் நூதனமான ஒரு கிணற்றைக் கண்டு பிடித்திருக்கின்றனர். ஜலத்திற்கு அடியில் கற்பாறையால் கட்டப்பட்ட ஒரு கதவு இருப்பது தெரியவந்தது. ஜலத்தில் மூழ்குபவர்களைக் கொண்டு அக்கதவைப் பரிசோதித்ததில் இது ஒரு அரசமாளிகையின் வாசற்கதவு என்பதாகத் தெரியவந்தது. இவ்வரச மாளிகையில் விசாலமான பல அறைகளும் மண்டபங்களும் காணப்பட்டன. அவைகளில் கல், பித்தளை ஆகியவைகளால் செய்யப்பட்ட பாத்திரங்கள், நாற்காலிகள், இதர வீட்டுச் சாமான்களுமிருந்தன. இவைகளுக்கு உரிய சொந்தக்காரர் யார் என்பது தெரியவில்லை. ஒரு தெருவில் இத்துப்போன மனித எலும்புகள் சிதறிக்கிடந்தன. மேல் மெத்தையில் காணப்பட்ட மனித எலும்புக் கூடுகளிலிருந்து அங்கிருந்தவர்கள் உட்கார்ந்து கொண்டும் நின்றுகொண்டுமிருந்தனர் என்று தோன்றுகிறது. கீழ்மெத்தைகளில் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளெல்லாம் படுக்கவைக்கப் பட்டிருக்கின்றன. அங்கு பூமியைத் தோண்டிப் பார்த்தமட்டில் மணல்களும் பொடிக் கற்களும் இருக்கின்றனவேயன்றி பெருங்கற்களோ கற்பாறைகளோ வெளிப்படவில்லை. இப்பிரதேசத்தில் மிகப் பலமான புயற்காற்றேற்பட்டு இப்பிரதேசம் முழுவதும் திடீரென மூடிக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என்றும், நின்றுகொண்டிருந்தவர், உட்கார்ந்திருந்தவர், படுத்திருந்தவர் யாவரும் ஒரு க்ஷணத்திற்குள் மணலில் புதையுண்டனரென்றும் தெரிகிறது. எலும்புக்கூடுகளிலிருந்து சிலர் வேஷ்டி கட்டியவர்களாகவும் சிலர் தலைப்பாகை யுள்ளவர்களாகவும் தெரிய வருகிறது. ஆனால், இந்தத் துணிகளெல்லாம் மண்ணோடு மண்ணாகிவிட்டன. திருகுர்ஆனில் 'ஆது'க்கூட்டத்தார் அழிக்கப்பட்டதைப்பற்றிக் கூறப்பட்டுள்ள விபரம் உண்மையாகவே நிகழ்ந்ததுதான் என்பது கௌன்ட்போன்புரூக்கின் ஆராய்ச்சியிலிருந்து பிரத்தியக்ஷமாக வெளியாகி விட்டது. 'ஆது'க்கூட்டத்தார் இந்தப் பிரதேசத்தில்தான் வாசஞ்செய்தனர் என்பதற்கு சரித்திர சான்றுகளிருக்கின்றன.

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அன்பர்களில் அநேகர் இதுவரை சந்தா ரூபாயை அனுப்பி வைக்காமலே இருக்கின்றனர். சிலர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளையும் அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவதினுல் வீண் செலவேற்படுகிறது. அநேகருக்கு இம்மாதக் கடைசியில் வி. பி. அனுப்புவதாய் தெரிவித்திருந்தும் வீண் செலவை உத்தேசித்து அவ்வாறு செய்யவில்லை ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளை உடனே அனுப்பி வைக்குமாறு கோறுகிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானுல் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய சிலோன் பகுதிகளிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை நேரில் நமக்கனுப்பியாவது, அல்லது நமது சிலோன் ஏஜண்டு மெஸ்ஸர்ஸ் **A. M. K.** ஹாஜி ஸ்டோர் (220, 2-ம் குறுக்கு தெரு, கொழும்பு) இடம் கொடுத்தாவது ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதார்களுக்கும் தனித் தனியே தபால் எழுதுவதுகொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் நடைபெறும் இவ்வருடத்திற்குரிய சந்தா பாக்கியை உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினங், சிங்கப்பூர், மலாயா :—இவ்விடங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள், நடைபெறும் ஆண்டுக்குரிய சந்தா பாக்கியை தாமதமின்றி அனுப்பிக் கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரித்து அபிவிர்த்திக்குக் கொண்டுவருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மானேஜர்.

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ முஹம்மது அப்துல் அலீம் சாகிப் ஸித்தீக்கி அவர்கள் அறபியிற் றேர்ந்த பண்டிதராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக்கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், ஆஸ்டிரேலியா, தென் ஆப்பிரிக்கா, மலாயா முதலிய தூர தேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக்கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும்பற்றி ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இந்நூற்கள், ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

புத்தகங்களின் விபரம்.		Rs.	A.
1.	The Elementary Teachings of Islam	0	8
2.	A New Muslim World in Making	0	8
3.	A Shavian meets a Theologian	0	3
4.	Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம் :— மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras
Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Isl
43, Post Office St., G. T. Madras.